கழக வெளியீடு : ௬0எ

ஓவியக் கலைஞர்கள்

ஆங்கிலத்தில் சாமுவேல் ஸ்மைல்ஸ் எழுதிய
தன்முயற்சி (Self Help) என்னும் நூலின்
ஒரு பகுதியினைத் தழுவித்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்
தமிழில் எழுதியது.

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Nov., 1951.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140, BROADWAY, :: MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2-140, Broadway, Madras-1.

பதிப்புரை

'முயற்சி திருவினையாக்கும்;' 'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலிதரும்'; 'ஊழை யும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழாது உஞற்று பவர்'; எனும் தெய்வப்புலவரின் பொன்மொழிகள், முயற் சியுடையார் பலகாலும் வருந்திப் பல தொல்லைகட்கு உட் படினும் தளராத முயற்சியின் பயனாக வாழ்க்கையிற் சீரும் சிறப்பும் எய்துவர் என்பதை உணர்த்துகின்றன.

இந்நூலின்கண் ஓவியத்துறையிலும், சிற்பத்துறை யிலும் பெரும்புகழ்பெற்று விளங்கிய பெரியார் பலர் தம் இளமைக் காலத்துப் பற்பல பேரல்லல்களில் உழன்றும் தளராத தன் முயற்சியின் பயனால் பெரும்புகழ் பெற்று விளங்கிய வரலாறு நுவலப்படுகின்றது.

இள மாணவர் உளங்களின் சோம்பலைப் போக்கித் தன் முயற்சியையும் தன்னுண்மையையும் பெருக்கி ஒவ்வொரு வரும் சிறந்த குறிக்கோளுடையராய் இடையறா முயற்சி செய்து நன்றாக வாழ்வதற்கு இந்நூல் ஓரளவு துணை செய்யும்.

ஆங்கிலத்தில் 'சாமுவேல் ஸ்மைல்ஸ்' என்பார் தன் முயற்சியின் சிறப்பினைப்பற்றிச் சிறந்தமுறையில் எழுதிய பெருநூலின் ஒரு பகுதியினைத் தழுவித் தமிழ் மாணவரும் கற்றுப் பயனெய்துமாறு இந்நூல் வெளியிடப் பெறுகின்றது.

தமிழகம் இந்நூலினையும், இத்துறையில் வெளிவர விருக்கும் பிற நூல்களையும் விரும்பி வரவேற்றுப் பயன் எய்தும் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

3343

ஓவியக் கலைஞர்கள்

"தொலைநோக்கிற்கு மிகு மாண்புள்ளதாக விளங்கியது உன் கைபடப் பாழாகுமானால், பின்னும் விடாது தொடர்ந்து போ; பெறும்பேற்றில் அல்ல, அதை அடைதற்குப் படும்பாட்டில் இருக்கிறது இன்பம்."—ஆர். எம். மில்னீஸ் (R. M. Milnes.)

"செய்தொழிலில் மூழ்ந்து; செல்வனாக வாழ்வாய்"—ஜௌபர்ட் (Joubert.)

பெருமுழைப்பினால்தான் வெற்றி

மற்றைத்துறைகள் எல்லாவற்றிலும் எப்படியோ அப்படியே சிற்பக்கலையிலும் மிக்க திறமையடைவது வருந்தி உழைக்கும் உழைப்பினால்தான் ஏற்படும். சிறந்த ஓவியம் எழுதுவதும், உயர்ந்த வடிவஞ் செதுக்குவதும் தற்செயலாய் அமைவனவே அல்ல. ஓவியத்துறையில் கைதேர்ந்த ஒருவன் தூரியக்கோலால் தொட அவன் அமைத்த வடிவம் பின்னுஞ் சிறப்படையும். உருவஞ் செதுக்கிச் செதுக்கி மிகத் திறமைபெற்ற மேன்மையாளன் ஒருவன் தான் அமைக்கும் வடிவத்தைச் சிற்றுளி முனையால் தொடவே அதற்கு உயிர்க்களை உண்டாகும். இஃது அறிவாற்றலினாற் பொருந்துவதெனினும் தளரா முயற்சியால் விளையும் பயனேயாகும்.

முயற்சி எல்லாம்வல்லது

திரு யோசுவா ரெய்னல்ட்ஸ் (Sir Joshua Reynolds) முயற்சி எல்லாம்வல்லதென்று உறுதியாய் நம்பிக்கொண்டு வந்தவர். "மேன்மையாளருக்கு அமையும் அரிய கைத்

திறத்தை இயற்கை அறிவென்றும், கலையுணர்வென்றும் மேன்மையான நற்பேறு என்றும் பலவாறு கூறுவது உண்டெனினும் அது பழக்க வாசனையால் அமையும்," என்பது அவருடைய கருத்து. பர்ரி (Barry) என்பவருக்கு அவர் எழுதிய கடிதத்தில், "ஓவியக் கலையிலானாலும் மற்றெவ் வகைக் கலையிலானாலும், சிறந்த திறமையடைய முடிவுசெய்திருக்கும் எவனும் தூங்கி எழுந்திருக்கும் நாழிகைமுதல் மீண்டுந் தூங்கப்போகும் வரையிலும் அவ்வொரேசெயலில் தன் உள்ளத்தை ஒருதலையாய் அழுந்தப் பொருத்தவேண்டும்," என்று எழுதினார். வேறொரு சமயத்தில் அவர், "செய்தொழிலில் சிறந்த தேர்ச்சியடையவேண்டும் என்னும் உணர்ச்சியுள்ளவர்கள் உள்ளத்தின் உதவி இருப்பினும் இல்லாதொழியினும் காலை-நண்பகல்-மாலை என்னும் மாறுபாடின்றி எப்பொழுதும் உழைக்கவேண்டும்; உழைப்பு அவர்களுக்கு விளையாட்டாக அல்ல; மிகுந்த துன்பமாகத்தான் தோன்றும்," என்று கூறினார். சிற்பக்கலையில் சிறந்த தேர்ச்சியடைவதற்குச் சலிப்பற முயலும் முயற்சியின்றித் தீராது. இஃது உண்மையெனினும் பிறவியிலேயே இயற்கை அறிவில்லாமல், முயற்சி ஒன்றைமட்டும் எவ்வளவிற்கு மனம் ஒத்து வளமுறச் செய்தாலும், அதன் பலனால் எவனும் சிறந்தவனாகமாட்டான் என்பதும் உண்மையே. அந்த மேன்மை தெய்வத்தால் அமைவது; அது முதிர்வதோ அவரவர் செய்கையாலும் செய்கை இன்மையினாலும் ஆகும். பள்ளியிற் கற்கும் கல்வி எல்லாவற்றினும் தான்தான் செய்து பட்டுத் தெளிவது நன்மையாகும்.

தாழ்ந்தவர்கள் முயற்சியால் உயர்ந்தார்கள்

சிறந்த மேன்மையாளர்கள் சிலர், வறுமை முதலிய பலவகைத் தடைகளை முயற்சிவலியால் ஊடறுத்து எழுந்து உயர்ந்தவர்களே. அறிந்தோர் நினைவில் இவ்வகைப் பெரியார்கள் எவ்வளவோ பெயர்கள் மின்போலப் பளிச்செனை விளங்கித் தோன்றுவார்கள். அப்ப வகை சுட்டுவிற்றுப் பிழைத்த க்லாட் லொரேன் (Claude Lorraine) சாயக்காரனாகிய திந்தொரெத்தோ (Tinto-

retto), வண்ணம் இழைத்த கரவக்கியோஸ் (Caravaggios) போப்பின் அரண்மனைக் கட்டிடத்தில் சிற்றாள் வேலை செய்த கரவக்கியோஸ் (Caravaggios), கள்வர் தோழனுகிய ஸல்வதோர் ரோஸா (Salvator Rosa), பருவம் ஏறாப் பயிர்க்குடி ஆகிய கியத்தோ (Giotto), குடுகுடுப்பைக்காரனுகிய ஜிங்காரோ (Zingaro), இரந்துண்ணுமாறு தகப்பனுல் வீட்டில்நின்றும் துரத்திவிடப்பட்ட கேவ்டன் (Cavedone), கல்தச்சனுகிய கனேவா (Canova) என்னும் இவர்களும், மற்றும் உலகறிந்த புகழ்பெற்ற பலரும் எவ்வளவோ இடையூறுகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், வருந்தி உழைத்துப் பரிந்து பயின்று வல்லவர்களென்று நிலைபெற்றூர்கள்.

மற்றும் பலர்

மேலும், நம்நாட்டில் அருந்திறல் உள்ளவர்கள் என்று பெயர்பெற்ற பெரியார்கள், சிற்பக்கலை வெற்றிக்கு உதவியான நிலைமையிற் பிறந்தவர்கள் அல்லர். கேன்ஸ்பரோவும் (Gainsborough), பேக்கனும் (Bacon) நெசவாளரின் மக்கள்; பார்ரி (Barry) அயர்லாந்திற் பிறந்து இளமையிற் கடலோடப் பழகியவர்; மக்லீஸ் (Maclise) கோர்க் நகரத்தில் காசுக்கடையில் கணக்கு எழுதப் பயின்றவர்; இனிகோ ஜோன்ஸ் (Inigo Jones), ஒபை (Opie), ராம்னி (Romney) ஆகியவர்கள் தச்சர்கள். வெஸ்ற் (West) பென்சில்வேனியாவில் சிறு பயிர்த்தொழில் செய்த க்வேக்கர் வண்ணக்கிறித்தவன் மகன். நார்த்கோட் (Northcote) கைக்கடிகாரஞ் செய்வோன்; ஜாக்ஸன் (Jackson) தையற்காரன்; எத்தி (Etty) அச்சடிப்போன்; ரெய்னல்ட்ஸ் (Reynolds), வில்ஸன் (Wilson), வில்கி (Wilkie) இம்மூவரும் ஆசிரியர் மக்கள்; லாரென்ஸ் (Lawrence) ஆயக்காரன் மகன்; தர்னர் (Turner) மயிர்வினைஞன் மகன். நம் நாட்டு ஓவியப்புலவர் சிலர் தொடக்கத்தில் தரம் தாழ்ந்த கைத்தொழில் தொடர்பு சிறிது உள்ளவர்கள் தாம்; ப்ளாக்ஸ்மன் (Flaxman) என்பவரின் தகப்பன் அரைசாந்தில் உருவஞ்செய்து விற்றவன்; பர்ட் (Bird)

தேயிலைத்தட்டுக்கு வண்ணம் பூசுவோன்; மார்ட்டின் (Martin) வண்டிக்கு நிறம்பூசிப் பிழைத்தவன்; ரைட்டும் (Wright) கில்பினும் (Gilpin) மரக்கல வண்ணக்காரர்கள்; சாந்திரி (Chantrey) என்பவன் பயின்றது செதுக்குவேலையும் மேற்பூச்சுப்பூசும் வேலையும்; டேவிட் காக்ஸ் (David Cox), ஸ்தான்பீல்ட் (Stanfield), ராபர்ட்ஸ் (Roberts) ஆகிய இவர்கள் நாட்டுக்காட்சிப் படம் எழுதிப் பயின்றவர்கள்.

முயற்சியும் முன்னேற்றமும்

மேற்கூறியவர்கள் பெருமைபெற்றவர்களானது நல்வினையினாலும் அன்று; திடீர் நிகழ்ச்சியினாலும் அன்று. பொருந்தி முயன்று வருந்தி உழைத்ததினால்தான். சிலருக்குப் பொருளுஞ் சேர்ந்தது உண்மைதான். ஆனால், பெரும்பாலும் அவர்கள் பொருள்தேட விரும்பி உழைத்தவர்கள் அல்லர். சிறந்தவர்களானோர் முதலில் தம் நலத்தை மறுத்து, வாயைக் கட்டி வயிற்றை ஒடுக்கி முயற்சி செய்திருப்பார்கள். பொருள் நோக்கம் ஒன்று தவிர வேறு நோக்கம் எதுவுமின்றி இருப்பார்களானால் அவர்கள் முயற்சி நிலைநிற்காது. எப்பொழுதுஞ் செய்யுந் தொழிலின் பயன் அதனால் விளையும் இன்பமே. அதனோடு இணைந்துவருஞ் செல்வம் எதிர்பாராமல் வருவது. சிறந்த அறிவுள்ள மேன்மையாளர்கள் பலர், வாங்காக் கூலி வாங்க வாது செய்யாமல், மனஞ்சென்ற துறையில் செய்வதைத் திருத்தமாகச் செய்தார்கள். ஸெனபனுடைய சிறந்த கட்டுக்கதை ஸ்பாக்நொலெத்தோ (Spagnoletto) வின் வரலாற்றில் எழுத்தெழுத்தாகப் பலித்தது. அவர் பெருவாழ்வின் வருவழிகளைக் கைக்கொண்டபின் அவற்றின் வழிப்படாமல் விலகினார். மனம்பொருந்தி மீளவும் வறுமைநிலையில் இருந்து உடல்வருந்தி உழைத்தார். ஓர் ஓவியக்காரன் கூலி பெற்றுக்கொண்டு புதுமை பார்ப்பவர்கட்குக் காண்பித்துக்கொண்டுவந்த ஓவியம் ஒன்றைக் குறித்து மைக்கேல் அஞ்சிலோ (Michael Angelo) வை உள்ளக்கிடக்கை (அபிப்பிராயம்) கேட்டார்கள். அதற்கு

அவர், "செல்வனுகும் அவாப்பெருக்கம் உள்ளவரையி லும் இவன் வறுமை தீராதெனஎண்ணுகிறேன்" என்று கூறினன்.

மைக்கேல் அஞ்சிலோ

திரு யோசுவா ரெய்னுல்ட்ஸைப் போல, மைக்கேல் அஞ்சிலோவும் உழைப்பு எல்லாம் வல்லதென்று மனந்தேற நம்பியிருந்தார். உள்ளத்தில் உருக்கொள்வதைக் கை முதிரத்திருந்திய ஒருவன் சிலே உருவாக அமைக்க மாட்டா திரான் என்பது அவர் கொள்கை. அலுப்பற்று ஓயாது உழைத்தவர்களில் அவரும் ஒருவரே. மற்றவர்களைக்காட்டி லும் அதிககாலம் உழைக்கத்தக்க பெருவலி தமக்கு உண் டானது உணவைக் குறைத்துக்கொண்டு வந்ததனுலேயே என்று அவர் கூறினர். பகலில் உழைக்கும்பொழுது அவர் உண்பதெல்லாம் ஒரு துண்டு ரொட்டியும், சிறிது திராட்சைப்பழச் சாறுந்தான். அடிக்கடி நள்ளிரவில் எழுந்திருந்து விட்ட குறையினின்று வேலை செய்வார். இப்படிப்பட்ட சமயங்களில் விளக்கு ஏற்றித் தமது அட்டைக் குல்லாவின்மீது வைத்துவிட்டு இழைப்புளி கொண்டு செதுக்குவேலை செய்வார். சிலவேளை கைகால் அயர்ந்து இளைப்புற்று உடுத்த ஆடையைக் களையும் எண்ண மும் அற்றுக் களைப்புத்தீரப் படுத்து உறங்குவார். எழுந்த வுடன் மீளவும் வேலை தொடங்குவார். மனம் மகிழும் அறிகுறி ஒன்று அவர் ஊகித்துச் செய்துவைத்திருந் தார். அஃதாவது: குழந்தைகள் நடைபழகும் ஒரு வண்டி; அதன்மேல் ஒரு கடிகாரம்; அதில், "இன்னும் பழகி வருகிறேன்" என்னும் மொழிகள்; கிழவன் ஒரு வன் அதைப் பிடித்துக்கொண்டு நிற்கும் தோற்றம்.

திஷியன்

திஷியன் (Tition) என்பவரும் இளைப்புறுது உழைத் தவரே. அவர் அமைத்த வியப்பரிய 'பைட்ரோ மார்ட் டைர்' (Pietro Martire) என்பது வேலை முடிந்து அவர்

க்கையை விட்டு நீங்க எட்டு ஆண்டுகள் சென்றன. "கடை இரா உண்டி" (Last Supper) வடிவம் வேலை குறையற முடியச் சென்ற காலம் ஏழு ஆண்டுகள். "ஏழு ஆண்டுகள் நாள்தோறும் வருந்தி உழைத்து முடித்த 'கடை இரா உண்டியை' அரசர்பிரான் முன்னிலைக்கு அனுப்புகிறேன்" என்று ஐந்தாவது சார்லஸ் அரசனுக்கு அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அரிய பெரிய வேலைகளைத் திறமையாளர்கள் செய்து முடிக்கப் பதைப்பற்று அடங்கி உழைத்த உழைப்பையும், அப்படி உழைக்கும் பக்குவத் தன்மை வருவதற்கு நெடுநாள் பயின்று பண்பட்டதையும் நினைப்பவர் இலர்.

பத்துநாள் வேலைக்கு 230 ரூபாயா?

இவ்வுழைப்பும் பக்குவமும் எளிதில் விரைந்து உண்டாகும் என்று பார்ப்பவர்கட்குத் தோன்றும்; தோன்றும் எனினும், ஒன்றை எளிதிற் செய்யும் பக்குவ நிலை உண்டாக, முன் எவ்வளவு துன்பமுந் தொல்லையும் பட்டிருக்க வேண்டும்? "பத்து நாளிற் செய்து முடித்த இடுப்புக்கு மேலுள்ள உறுப்பமைந்த வடிவத்திற்கு (buot) இருநூற்று முப்பது ரூபாய் கேட்கிறாயோ?" என்று வெனிஷிய குல மகன் ஒருவன் கேட்டான். அதற்கு ஒரு சிற்பி, "அவ்வுருவத்தைப் பத்துநாளிற் செய்துமுடிக்க முப்பது ஆண்டுகள் கற்றேனே! அதனை நினைத்துப் பார்க்காமல் பேசுகிறீர்களே?" என்று திருப்பிக்கேட்டான்.

டொமெனிசினோ

டொமெனிசினோ (Domenichino) என்பவர் விலை பேசித் தீர்ந்து ஒருவருக்குப் படம் எழுதத் தொடங்கினார். வேலை மெதுவாக நடைபெற்றது. படம் எழுதச் சொன்னவர் குறை கூறினார். அதுகேட்டு அவர், "உமது படத்தை இடையறாது எப்பொழுதும் என் உள்ளத்தில் எழுதின வேலையா யிருக்கிறேனே," என்று பதிலுரைத்தார்.

திரு அகஸ்தஸ் காலகட்

சிறிது காலத்திற்கு முன் இருந்த திரு அகஸ்தஸ் காலகட் (Sir Augustus Callcott) அருந் தொழிலெனப் பலரும் வியந்து உவக்கும் 'ராசெஸ்தர்' படம் எழுதுவதற்குக் கை திருந்தும்படி முன்னுடிக் குறையாமல் நாற்பது படம் எழுதி எழுதிப்போட்டாராம். அவரைப்போன்ற முயற்சியுடையவர்களின் பண்பிற்கு இஃதன்றோ அறிகுறி. எதையும் விட்டுவிடாமல் திரும்பத் திரும்பச் செய்வதே உலகப்போக்கிற்கு அல்லாமல், சிற்ப வளர்ச்சியின் வெற்றிக்கும் உதவும் முதன்மையான வழிகளில் ஒன்ருகும்.

வருந்தி உழைக்காவிடிற் பயனில்லை

பிறவியறிவு எவ்வளவு வளம்பெற அமைந்திருப்பினும் சிற்ப வளர்ச்சி செய்வோர் நாட்பட எப்பொழுதும் உழைக்கவேண்டும். உழைக்காமல் முடியாது. சிறப்படைந்தவர்கள் பலருக்கு அறிவு பருவத்திற்கு முந்தி முதிர்ந்திருந்தது. ஆனுலும் முயற்சி செய்யாவிடில், அவர்களுடைய அறிவுவளர்ச்சி வேலைக்கு உதவாமற் போய்விடும். வெஸ்டைப்பற்றி ஒரு கதை உலகம் அறிந்ததாக வழங்குகின்றது. அவர் ஏழாண்டுச் சிறுவராக இருந்தார். அவருடைய மூத்த உடன்பிறந்தாளின் குழந்தை தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தது. அவர் அதற்குக் காவலாக இருந்தார். இருந்தபொழுது குழந்தையை உற்று நோக்கினர். அதன் வடிவழகைக்கண்டு வியப்படைந்தார். ஒரு தாளை எடுத்துக்கொண்டு போனர். அக்கணமே அக்குழந்தையின் உருவத்தைச் சிவப்பு மையினுலும் கருப்பு மையினுலும் எழுதினர். இதைப்பார்த்து இவர் ஓவியப்புலவர் ஆவார் என்று எல்லோரும் எண்ணினர்கள். மனமானது இயற்கையாய்ச் சென்ற இத்துறையிலிருந்து அவரை விலக்க முடியாமல் இருந்தது. மிக இளமைப் பருவத்திலேயே இவ்வாறு வெற்றி பெற்றது சிறிது வம்பாக முடிந்தது. அல்லாவிடில் அவர் ஓவியக்கலை யாற்றலில் மிகவும் சிறந்தவராவார். அவர் பெரும் புகழ் பெற்றும் அஃது

அவர்க்குத் துன்பப்பட்டு வருந்தி உழைக்காது வந்ததனால் நீடித்து நிற்கவில்லை.

ரிச்சர்ட் வில்ஸன்

சிறு குழந்தையா யிருக்கும்போது ரிச்சர்ட் வில்ஸன் (Richard Wilson) வீட்டுச்சுவரில் கரிக்கட்டியால் மக்களின் படமும், மாடு குதிரை முதலிய விலங்குகளின் படமும் எழுதிக்கொண்டு வருவார். முதலில் அவர் மனம் பொருந்தி எழுதிப் பயின்றது இவ்வகை உருவப்படமே. பிறகு இத்தாலிக்குப் போயிருக்கையில் ஒருநாள் ஜுகரெல்லியைக் (Zucarelli) காண அவர் வீட்டிற்குச் சென்றார். போய் வெகு நாழிகை நேரம் காத்திருந்து அலுப்புற்றார். அவ்வலுப்பு நீங்குவதற்காகப், பலகணிவாயில் வழியாகத் தோன்றிய ஊர்த் தோற்றத்தை வரைந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஜுகரெல்லி அவ்வறைக்குள் வந்தார். ஓவியத்தைக் கண்டு திகைத்தார். "நீர் ஊர்ப்படம் எழுதிப் பழகியிருக்கவில்லையா?" என்று கேட்டார். வில்ஸன், 'இல்லை' என்றார். "அப்படியானால் உமக்கு அறிவாகச் சொல்லுகிறேன்; எழுதிப்பாரும் மிகவும் வெற்றியுண்டாகும் இஃது உண்மை" என்று ஜுகரெல்லி வற்புறுத்தி மொழிந்தார். அந்த நல்லறிவை வில்ஸன் ஒப்புக்கொண்டு வருந்தி முயன்றார். எழுதிப் பயின்றார். ஊர்ப்படம் எழுதுவதில் புகழ்பெற்ற அறிஞரென்று ஆங்கில நாட்டில் பெயரெடுத்தார்.

திரு. யோசுவா ரெய்னல்ட்ஸ்

திரு. யோசுவா ரெய்னல்ட்ஸ் சிறுபருவத்தில் பாடம் படிக்காமல் ஓவியம் எழுதும் முயற்சி ஒன்றிலேயே உள்ளம் வைத்திருப்பார். அஃது அவருக்கு இன்பமாயிருந்தது. இதைக்குறித்துத் தந்தை அவரைக் கண்டித்து வந்தார். தக்ககாலம் வந்தபொழுது தந்தை அவருக்கு மருத்துவநூல் கற்பிக்க எண்ணியிருந்தார். ஆனால், இயற்கையாய் அவருடைய உள்ளம் ஓவியக்கலையில் அழுந்தியிருந்

தது. அந்நினைவைப் போக்குவதற்கு எவ்வகையினும் முடியவில்லை. வரவரத் தெளிந்து அவர் ஓவியப்புலவர் ஆனார்.

கென்ஸ்பரோ

பள்ளிக்குப்போகும் இளமையில் கென்ஸ்பரோ (Gainsborough) ஸத்புரிக்காட்டில் (Woods of Sudbury) ஓவியம் எழுதிக்கொண்டு திரிவார். பன்னிரண்டு ஆண்டில் அவர் தேர்ந்த ஓவிய அறிஞரானார். காண்பதை மனம் பொருந்தக் காண்பதும், செய்வதைக் கைவருந்தச் செய்வதும் அவருடைய வழக்கம். ஒருமுறையாவது காணும் கண்ணுக்கு அழகிய வடிவம் எதுவும் அவருடைய தூரிகைக் கோலுக்குத் தப்பினதில்லை.

வில்லியம் ப்ளேக்

மிதியடிக் கடைக்காரன் மகனாகிய வில்லியம் பிளேக் (William Blake) விலைச்சீட்டுத்தாளின் புறத்திலும், மிதியடிப் பலகைமீதும் முறையே கட்டிடப்படமும் ஓவியமும் எழுதிப் பழகினார்.

எட்வர்ட் பர்ட்

மூன்று நான்கு ஆண்டுக் குழந்தையாய் இருக்கையில் எட்வர்ட் பர்ட் (Euward Bird) நாற்காலியில் ஏறிநின்று சுவரில் ஓவியம் எழுதுவார். இவை ஆங்கில பிரெஞ்சு போர் வீரர்களென்பார். ஓவியப் பயிற்சியில் விருப்பமுள்ள அவருக்கு, அத்துறையில் பயிற்சியளிக்கத் தகப்பனார் எண்ணினார். ஒரு நிறப்பெட்டி வாங்கிக்கொடுத்தார். தேயிலைத்தட்டுச் செய்யும் ஒருவனிடத்தில் தொழில் பழக வைத்தார். இத்தொழிலில் கைதேர்ந்து சிலகாலம் வாழ்க்கை நடத்திவந்தார். பிறகு ஓவியக்கலையை வருந்திப்பயின்று வல்லவராகி அரசகலைக் கழகத்தின் ஓர் உறுப்பினர் என்னும் உயர்நிலையை அடைந்தார்.

ஹோகார்த்

ஹோகார்த் (Hogarth) என்பவர் பள்ளியிற் படிக்கும் பொழுது பாடம் ஒருநாளும் ஒப்பிக்கிறதில்லை. அவர் அறிவு மட்டமானது. சுவடியை வைத்துவிட்டு ஆங்கில மொழியின் எழுத்துக்களைப் புதுமையாய் எழுதிச் சிறப்புப் பார்ப்பார். பாடசாலையில் எழுதும் பாடத் தாள் முதலியவைகளின் உள்ளுறை சிறிதும் போற்றத் தக்கதன்று. அத்தாள்களில் அவர் எழுதும் படங்களோ கண்ணைப்பறிக்கும். எழுதும் தாள்களின் பொருள்நலத் தில் அவர் அப்பள்ளியில் உள்ள அறிவிலிகள் எல்லோருக் கும் கடைசி நிலையிலேயே இருந்தார். ஓவிய அமைப்பிலோ அவருக்கு ஒப்பு உயர்வு இல்லை. தகப்பனார் அவரைத் தட்டான் ஒருவனிடத்தில் தொழில் பழகவிட்டார். அவ னிடத்தில் அவர் ஓவியம் எழுதவும், வெள்ளிக் கரண்டி முள் இவற்றில் உருவங்களும் எழுத்துக்களும் செதுக்கி அழகுபடுத்தவும் பழகினார். வெள்ளியில் நகாசுவேலை செய்து கைதிருந்தினார். பிறகு செம்பில் செதுக்குவேலை செய்யவும் பலவகை உருவங்கள் எழுதவும் பழகினார்.

மக்களின் இயற்கை ஓவியம்

இத்தொழில் பயின்றுவருங் காலத்தில் மக்களின் குணம் குறிகளின் மாறுபாடுகளை விளக்கும் ஓவியங்களைச் செதுக்கிப் பயிலும் அவா அவருக்கு மிகுதியும் உண்டா யிற்று. இத்தொழிலில் எவருக்கும் இல்லாத சிறப்பு அவ ருக்கு உண்டானது எதையுங் கருத்துடன் பார்த்து அதைப் பற்றிப் பயின்றதனாலேயே. நான்குபேர் கருத்துச் செலுத் தும்படியான முகத்தைக் கண்டால் அவர் அதன் சாயல் முதலியவைகளைத் தவறாமல் நினைவில் அழுந்தவைத்தி ருந்து பிறகு தாளில் எழுதுவார். இந்தச் சிறப்பு அவருக்கு இயற்கை. இதை அவர் தளர்வின்றிப் பயிற்சி செய்துவரு வார். மாறுபாடான வடிவம் ஏதாகிலும் எதிர்ப்பட்டால் உடனே அவர் அதைப் பெருவிரல் நகத்திற் குறித்து வைத்து வீடுசேர்ந்தபின் ஆர அமர அதைப் பார்த்துக் கடிதத்தில் விளக்கமாக எழுதுவார்.

உலகப்பரப்பே உயரிய பாடசாலை

சிறிது மாறுபாடும் புதுமையுமான எதையும் அவர் மனம் ஆழ்ந்துபாராமல் விடாது. உருவத்தின் புதுமைகளைப் பார்க்கும்படி அவர் போகாத இடங்களுக்கெல்லாம் போவார். இவ்வாறு அங்கங்கே கண்டவைகளைப் பாதுகாப்பாக உள்ளத்தில் அடக்கிவைத்திருந்ததனால் பின்னுளில் எழுதிய ஓவியங்களில் அளவற்ற மனவளர்ச்சிகளையும் உருவ மாறுபாடுகளையும் தொல்லைப்படாமல் எளிதாக நிறைத்துக்காட்டினர். ஹோகார்த் எழுதிய படங்கள் எல்லாம் அவர் காலத்திற்குரிய கோலம் குறிகளை அல்லாமல் மனப்போக்குகளைக்கூடத் தவருமல் உள்ளபடி காட்டும் நினைவுக் குறிகளாயிருப்பது இக்காரணம்பற்றியே. ஓவியக்கலையை உண்மை வடிவத்தோடே கற்கத்தக்க பாடசாலை ஒன்றே ஒன்று. அஃது இவ்வுலகப் பரப்பே. இம்மொழி அவர் வாய்ப்பிறப்பே. ஆயினும், அவர் தாம் பயின்ற அக்கலை ஒன்றில் அல்லாமல் மற்றைக் கலைகளில் சிறப்பாகத் தெளிந்தவரல்லர். அவர் பள்ளியிற் கற்றதெல்லாம் சிறிதுதான். பள்ளியிற் பயிலும்போது அவர் பிழையின்றி எழுத்துக்கூட்டவும் அறியார். பின்னர் அறிந்ததெல்லாம் அவர் தாமாகக் கண்டு கேட்டுப் பயின்றதே. நெடுநாள் அவர் வறுமையில் அடிபட்டார். ஆயினும், மனம் உவந்து உழைத்துக்கொண்டுவந்தார். அவர் வருவாய்க்குத் தக்க செலவுசெய்து வறுமையிற் செம்மையாய் நாள்கழித்தார். குறித்த எல்லை தப்பாமல் ஊதியம் கொடுத்துவருவதாக அவர் பெருமை பாராட்டிக்கொண்டார். துன்பங்கள் எல்லாவற்றிற்கும் தப்பிப் பெருமை பெற்றவராகி அவருடைய குடும்பம் தழைக்கத்தொடங்கியபோது, முதலில் அவர் தாம்பட்ட துன்பத்தையும் கெட்ட கேட்டையும் மனதார நினைந்து தமக்கு இவ்வளவு மேன்மையாகவும், தம் தொழில் நிறத்திற்கு உதவியாகவும் முடிந்த போரை மீளவுஞ் செய்வதாக மனம்மகிழ்வார். ஒரு சமயத்தில் அவர், “மடியில் அரைரூபாய்க்கும் வழியில்லாமல் மனங்குன்றி நகரத்திற்குப் போனேன்.

ஓவியம் எழுதிய தட்டு ஒன்றை விற்ற பணம் நூற்றைந்து ரூபாய் கொண்டு வீட்டிற்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தேன். உடனே கத்தி வைத்துக்கொண்டு மடியில் கைப்பணம் இருபதினாயிரம் முப்பதினாயிரம் வைத்திருக்குஞ் செல்வனைப் போல அச்சமற்று நான் வெளிப்பட்டது இன்னம் நினைவில் இருக்கிறது," என்று கூறினார்.

பாங்க்ஸூம் மல்ரெடியும்

"முயற்சியும் கடைப்பிடியும்"-இது (Banks) பாங்க்ஸ் என்னும் கல்லோவியன் தலைமேற்கொண்டு ஒழுகிப் பிறருக்கு வலியுறுத்திப் போதித்த அறமொழி. அவர் தகுதி வாய்ந்த மனிதரென்று உலகத்திற்கு வெளிப்படையாகத் தெரிந்தது. தொழில் பழகிச் சிறப்படைய எண்ணிய இளைஞர்கள் பலர் அவரிடத்திற்குச் சென்று அறிவுரை கூறித் தமக்கு உதவிசெய்யும்படி கேட்பார்கள்.

ஒருநாள் ஒரு சிறுவன் இவ்வெண்ணத்தோடு அவருடைய வீட்டிற்குச் சென்றான். கதவைப் பலமாகத் தட்டினான். வேலைக்காரி சினத்துடன் வைது அவனை விரட்டப் பார்த்தாள். உள்ளே இருந்த பாங்கஸ் அவள் சொற்களைக் கேட்டார்; எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். எழுதிய படம் சில வைத்துக்கொண்டு சிறுவன் நின்றதைக் கண்டார். "என்னிடத்திலிருந்து உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவன், "ஐயா! கலைக்கூடத்தில் படம் எழுதப் பயிலும் வகுப்பில் அருள் புரிந்து சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்," என்றான். அதைக்கேட்ட அவர், தாம் ஒருவர் மட்டும் அவனைச் சேர்த்துக்கொள்வது முடியாத செயல் என்று தெரியக் கூறினார். படத்தைப் பார்க்கும்படி கேட்டு வாங்கினார். வாங்கிப் பார்வையிட்டார். "அப்பா! இங்கே வா, கலைக்கூடத்திற்சேர இன்னும் காலம் இருக்கிறது. வீட்டிற்குச் செல்; இளைஞர்கள் பாடசாலையில் நன்றாகக் கற்றுக் கொண்டுவா. அப்பொல்லோவின் (Apollo) படத்தைச் செவ்வையாக எழுதப்பார். ஒரு திங்கள் கழித்து எழுதும்

படத்தைக் கொண்டுவந்து காட்டு," என்று கூறிச் சிறுவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார். அவன் போய்ப் பின்னும் ஒரு பங்கு மிகுதியாக முயன்று வருந்தி எழுதிப் பழகினன். திங்கள் ஒன்று சென்றது; மீண்டும் அவன் அந்தச் சிற்பியைப் போய்ப் பார்த்தான். எழுதிக்கொண்டு போய்க் காட்டிய படம் முற்படத்தைவிடத் தெளிவாக இருந்தது. மீளவும் பாங்கஸ் அவனை வருந்திப் பயிலும்படி அறிவு புகட்டி அனுப்பிவிட்டார். ஒரு கிழமைக்குள் சிறுவன் திரும்பவும் எழுதிக்கொண்டுபோய்க் காட்டினன். இம் முறை படம் நன்றாக அமைந்தது. பாங்கஸ் அவனைப் பார்த்து,"மகிழ்ச்சியாயிரு, வாணாள் இருக்குமானல் கீர்த்தி பெற்றவனவாய்," என்று உள்ளக்கிளர்ச்சி யுண்டாக்கினர். அச்சிறுவன்தான் மல்ரெடி (Mulready) என்னும் ஒவிய அறிஞர். சிற்பி கூறியது நன்கு பலித்தது.

க்ளாட் லொரேன்

கிளாட் லொரேன் (Claude Lorraine) மிகு புகழாளரானது தளர்ச்சியற்றுச் செய்த முயற்சியால்தான். அவருடைய பிறப்பிடம் லொரேனைச் சேர்ந்த சாம்பேன் என்னும் சிற்றூர். பெற்றோர்கள் வறிஞர்கள். முதலில் அப்பவகை செய்யப் பழகும்படி சமையலாள் ஒருவனிடத்தில் விட்டார்கள். பிறகு மரத்தில் ஒவியவேலை செய்த அவருடைய உடன்பிறந்தான் அவரைச்சேர்த்து அவ்வேலை பழக்கினன். பழகும் காலத்தில் நுணுக்கமான கைவேலையில் திறமை அவருக்கு உண்டாகும் எனத் தோன்றியது. கண்ட உடன்பிறந்தான் சரக்குக்கொண்டு திரியும் வணிகன் ஒருவனுடன் இத்தாலிக்கு அனுப்ப உடன்பட்டான். ரோம் நகர் சேர்ந்து சிறிது காலத்திற்குள் உள்நாட்டு இயற்கைக் காட்சிப் படம் எழுதும் ஒருவன் வீட்டில் அவருக்கு வேலை கிடைத்தது. அங்கிருந்து வேலைசெய்யும்பொழுது கிளாட் முதல் முதல் உள்நாட்டு இயற்கைக் காட்சிப் படம் எழுதப் பயின்றார். காலம் போகப்போக அவர் எழுதிய படங்கள் நன்றாக அமைந்தன. அப்பால் அவர் இத்தாலிக்கும் பிரெஞ்சு நாட்டிற்கும் ஜெர்மனிக்குஞ் சென்றார். போகும்

வழியில் செலவிற்கு எடுக்க எடுக்கக் கைப்பொருள் குறையுமே; அக்குறையைத் தீர்க்கும்படி அவர் தங்கி நின்று உள்நாட்டு இயற்கைக் காட்சிப்படம் எழுதிக்கொண்டு போய் விற்றுப் பொருள் தேடுவார். ரோமுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தபொழுது அவர் ஓவியங்கட்குப் பெருமை பிறந்தது. காலம் செல்லச் செல்ல அவர் சிறப்பு ஐரோப்பா எங்கும் எட்டியது. அவர் இவ்வுலகத்தை இதன் பலவகை வடிவ மாறுபாடுகளுடனும் தெளிவுறக் கண்டு கருத்துடன் எழுதிப் பழகினார். பெரும்பாலும் கட்டடங்கள், சிறு சிறு துண்டு நிலம், மரம், தழை முதலியவைகளை வேறு வேறாக எழுதிவைத்திருந்து உள்நாட்டு இயற்கைக் காட்சிப் படம் மிக்க முயற்சியுடன் எழுதும்பொழுது அதிற் சேர்த்துக்கொள்வது அவருடைய வழக்கம். அல்லாமலும் அவர் வானத்தை மனம் சிதறாமல் கருத்துடன் பார்த்துக்கொண்டு வருவார். காலை முதல் மாலையளவும் பலநாள்வரை வான வெளியைக் கண் பதறாமல் பார்த்து முகில் ஓட்டத்தாலும், ஒளி குறைவது கூடுவதனாலும் உண்டாகும் மாறுபாடுகள் எல்லாவற்றையும் அவர் குறித்துக்கொள்வார். நாள் தோறும் இவ்வாறு செய்து பழகி வரவர ஒன்றைக் காணும் கண்ணும், கண்டதை எழுதும் கையும் முற்றிலும் அவர் வழிப்பட்டன. இந்தத்தன்மை அவருக்குப் பலநாள் பொறுத்து உண்டாயிற்றாம். இறுதியில் அவர் உள்நாட்டு இயற்கைக் காட்சிப் படம் எழுதுபவர்கட்கெல்லாம் தலைவரானார்.

தர்னர்

இங்கிலாந்தில் க்ளாட்டிற்கு இணையென்று பெயர் பெற்ற தர்னரும் (Turner) இவ்வாறே வருந்தி உழைத்தவர்தாம். நாவிதனாகிய தந்தை தன் மகனுக்கும் அத்தொழிலைப் பழக்க எண்ணியிருந்தான். அவன் லண்டன் நகரத்தில் இத்தொழிலைச் செய்துவந்தான். ஒருநாள் அச்சிறுவன் வெள்ளித்தட்டில் எழுதிய மெய்க்கவச வடிவத்தை மயிர் கழிப்பித்துக்கொண்டிருந்த ஒருவன் கண்டான். நாவிதனைப் பார்த்து, "உன் மகனை அவன் மனம்போன

வழியில் தொழில் பழக விட்டுவிடு," என்று கூறினன். நாளடைவில் நாவிதன் தன் மகனை ஓவியக்கலை கற்றுத் தேறும்படி விட்டான். சிற்பம் முதலிய ஓவியக்கலைகள் கற்கும் இளைஞர் யாவரையும்போல் தர்னருக்கும் பற்பல தொல்லைகள் உண்டாயின. அவர் நிலைமை மிகவும் நெருக்கடியா யிருந்தமையால் துன்பங்கள் அவருக்குப் பொறுக்கக்கூடாதனவாயின. ஆயினும், வருந்தி உழைப்பதற்கு அவர் மனம் எப்பொழுதும் வணங்கியது.

செய்வன திருந்தச்செய்

செய்வது எவ்வளவு சிறிதாயிருப்பினும் அதைத் திருத்தமாகச் செய்துமுடிக்க முயல்வது அவர் இயற்கை. பிறர் எழுதிய படத்திற்கு இந்திய மையால் வெளியில் இருந்து நிறந்தீட்டும் வேலை அவருக்கு இரவுப்போதில் அகப்பட்டது. கூலி இரவு ஒன்றுக்கு ஒன்றேகால் ரூபாயும் சாப்பாடும். இவ்வாறு அவருக்குப் பொருளுஞ் சேர்ந்தது; அதனுடன் கைப்பழக்கமும் அமைந்தது. அதன்பின், புகைவண்டிப் பயணகால விளக்கப் புத்தகம் (Railway Time Table) நாட்குறிப்பு (பஞ்சாங்கம்) முதலியவை கட்கு முகப்புப் படங்கள் எழுதுதலாகிய கூலி குறைவான வேலைகளைச் செய்துகொடுத்து வாழ்க்கை நடத்தினர். இதைக்குறித்து அவர், "செய்வதற்கு இதனினும் சிறந்தது வேறென்ன? இப்பழக்கம் முதன்மையாயிருந்ததே," என்று கூறினர். அவர் எதையும் கருத்தாகவும் நெஞ்சறிய உண்மையாகவுஞ் செய்தார். "ஆண்டை கூலியைக் குறைத்தால் சாம்பான் வேலையைக் குறைப்பான்" என்பதற்கேற்ப, கூலிபோதாதென்று வேலையை அவர் ஒருபொழுதும் கடனுக்குச் செய்தவரல்லர். அவர் பிழைப்பிலும் கலையிலும் உள்ளம் வைத்துச் செய்வதை எப்பொழுதும் ஒழுங்காகச் செய்தார். படங்களை ஒன்றுக்கொன்று வியப்புற அமைக்காது விட்டவரல்லர். இவ்வாறு உழைப்பவர் வளம்பெறச் செய்து முடிப்பதற்கு ஐயமில்லை. "கதிரவனுடைய ஒளி காலை முதல் வரவர வளர்வதுபோல, அவருடைய ஆற்றலும் அறிவும் வளர்ந்தன." இது ரஸ்கின் (Ruskin)

இயம்பியது. ஆனாலும், தன்னுடைய அறிவைப் பாராட்டக் காரணம் இல்லையே. அவருக்கு நல்ல நினைவுக்குறி சாகுங் காலத்தில் தம் நாட்டிற்கென்று வைத்த சிறந்த ஓவியக் கூடமே. அவர் சீர்த்தியைக் காலம் நீடிக்க இருந்து குறிப் பிக்கும் அறிகுறியும் அதுவே.

ரோமாபுரி

கலைகளுக்கெல்லாம் நிலையமாகிய ரோமாபுரியைப் போய்ப் பார்ப்பது கலைபயிலும் மாணவர்களுக்குள்ள அவா அனைத்தினும் மேலானது. ரோமாபுரிக்குச்செல்லும் செலவு அதிகம். கலைபயிலும் மாணவர்களோ பெரும் பாலும் வறிஞர்கள். நேரிடும் இடர் எதற்கும் நிலைகுலையா மல் கடைத்தேறும் உள்ளத் திடம் இருந்தாலன்றி ரோமா புரிக்குப் போகவே இயலாது.

பிரான்கோயிஸ் பெரியர்

முன்காலத்தில் பிரெஞ்சு நாட்டில் ஓவியப் புலவரா யிருந்த பிரான்கோயிஸ் பெரியர் (Francois Perrier) ரோமாபுரியைப் போய்ப் பார்ப்பதற்கு அவாக் கொண் டார். குருடனாகிய நாடோடி ஒருவனுக்குத் துணையாகப் போக உடன்பட்டார். வழியில் அலைந்தலைந்து வெகுநாட் சென்றன. பிறகு ரோமாபுரியை அடைந்தார். ஓவியக் கலை கற்றுச் சிறப்பெய்தினார்.

ஜாக்விஸ் காலோ

ரோமாபுரியைப் போய்ப் பார்க்க முடிவு செய்து அவ் வாறே செய்த ஜாக்வீஸ் காலோ (Jacques Callot) என்ப வர் காட்டிய மனவுறுதி இதிற் குறைந்ததன்று. சிறுவனா யிருக்கும்போது ஓவியம் எழுதிப் பயின்று வல்லவனாக நினைத்த அவருக்குத் தந்தை இடங்கொடுக்கவில்லை. தடுக் கப் பார்த்தார். இவரோ உறுதியாக நின்றார்; இத்தாலிக்குப் போக வீட்டை விட்டுப் புறப்பட்டார். வழிச்செலவுக்கு ஒரு காசும் இல்லை; மிகவுந் துன்பப்பட்டார். குடு குடுப்பைக்காரர் சிலரைக் கண்டு அவர்கள் கூட்டத்தில்

சேர்ந்தார். சந்தை கூடும் இடங்கள்தோறும் திரிந்தார். ஆளோடாளாக அவர்களுடைய இன்ப துன்பங்களில் தானும் பங்கெடுத்துக்கொண்டார். அவ்வரிய பயணத்தில் ஆளுரு முகச்சாயல்சரிவு குணம் குறிகளைப்பற்றி அவருக்கு அரிய அறிவு உண்டாயிற்று. அறிந்து அமைத்து வைத்திருந்த யாவையும் பின்னர் அவர் எழுதிய விந்தையான ஓவியங்களில் சிறுபான்மை பெருக விளக்கினார்.

எண்ணம் நிறைவேற இடையே தடை

நாட்பட்டு காலோ ப்ளாரென்ஸ் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே குலமகன் ஒருவன் காலோவின் அறிவையும் மன விரைவையும் பார்த்து உவப்புற்றான். ஓர் ஓவியப் புலவர் இடத்தில் ஓவியக்கலை கற்கவிட்டான். ரோமாபுரிக்குப் போகாமல் அங்கிருப்பதற்கு அவருக்கு மனம் இல்லை. ஆகவே சில நாட்களில் அவ்விடத்திற்குப் புறப்பட்டார். ரோமாபுரியை அடைந்தார். பொரிஜி, (Poriji) தாமேசன் (Thomassin) என்னும் இருவரோடும் அறிமுகமானார். அவர்கள் அவர் அழகாக எழுதிவைத்திருந்த ஓவியங்களைப் பார்த்தார்கள். "நீ புகழ் படைத்த ஓவியப் புலவனாவாய்" என்று மொழிந்தார்கள். ஆனால் அவருடைய குடும்பத்தாரின் நண்பன் ஒருவன் அங்கே சென்றிருக்கையில் அவரைக் கண்டான். நாடோடியாகத் திரியவிடாமல் வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அனுப்பிவைத்தான். இவ்வளவு காலம் பிறநாடுகட்குச் சென்று திரிந்து இனிமை கண்டவருக்கு வீட்டிலே நிலைத்திருக்க மனம் ஒப்புமா? ஒப்பாது. மீண்டுஞ் சமயம் பார்த்து வெளிப்பட்டுப் போய்விட்டார். அவர் முன்னோன் அவரைத் தூரின் என்னும் நகரிற் கண்டுபிடித்து மீண்டும் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

விடாப்பிடியின் வெற்றி

தந்தை எவ்வளவோ அறிவுரைகள் கூறியும் அவர் பிடிவாதமாகக் கேட்கவில்லை. அவர் உள்ளத்தை எவராலும் மாற்றமுடியாதென்று தெரிந்தது. மேற்கொண்டு

யாது செய்வதென்று தந்தை வருத்தமுற்றார். மகன் ரோமாபுரியில் கலை பயில்வதற்கு உடன்பட்டார். இம் முறை சென்று சில ஆண்டுகள் நிலையாய் அங்கு அமர்ந் தார். தேர்ந்து தெளிந்தவர்களிடத்தில் கட்டிடம் முதலிய உரு அமைக்கும் முறையும் ஓவியம் செதுக்கும் வகையும் முயற்சியாய்ப் பயின்றுகொண்டு வந்தார். அங்கிருந்து பிரெஞ்சு நாட்டிற்குத் திரும்பி வருகையில் பிளாரன்ஸில் இரண்டாவது காஸ்மோ (Cosmo II) அவரை வழிமறித்துக் கொண்டான். அவர் பின்னுஞ் சில ஆண்டுகள் அங்கி ருந்து கலை பயின்று தொழில் செய்தார். உதவியாளர் இறந்துபோகவே நான்சிக்குத் (Nancy) திரும்பினார். தம் குடும்பத்தாருடன் சேர்ந்து தங்கினார். செய்தொழில் முறையால் பொருட்செல்வம் புகழ்ச் செல்வம் இரண் டையுந் தேடினார்.

நாட்டுப்பற்று

ஊர்ப்போர் நடக்கையில் நான்சியை முற்றுகை செய்து பிடித்துக்கொண்டபோது, அதைக் குறிப்பிக்கும் படமும், செதுக்கு ஓவியமும் அமைத்துக் கொடுக்கும்படி ரிக்லூ (Richelieu) கேட்டான். காலோ தன் பிறப்பிடத் திற்கு நேர்ந்த தொல்லையை நினைவூட்டும் உருவங்கள் அமைக்க மனம் இன்றி மறுத்தார். செய்த முடிவை மாற் றப் பார்த்து, முடியாமற்போகவே ரிக்லூ அவரைச் சிறை யிற் போட்டான். ரோமாபுரிக்கு முதற்பயணம் போகும் வழியில் சமயத்தில் உதவி புரிந்து தன் குறையைத் தீர்த்த குடுகுடுப்பைக்காரர் சிலரைக் காலோ அச் சிறையிற் கண் டார். காலோ சிறையிலிருப்பதைப் பதின்மூன்றாவது லூயி (Louis XIII) அரசன் கேள்விப்பட்டான். அவரைச் சிறை நீக்கினான். மேலும் கேட்டுக்கொள்ளும் உதவி எதுவும் இல்லை என்னுமற் செய்வதாகவும் மொழிந்தான்.

நன்றி மறவேல்

அப்பொழுதே காலோ தனக்கு முன்னாளில் இன்னு யிர்த் தோழராயிருந்த குடுகுடுப்பைக்காரரையும் சிறை

நீக்கவேண்டும் என்றும், அவர்கள் பாரிஸ் நகரில் அச்சம் அற்று இரந்துண்ணுவதற்கு உள்ளம் இரங்கி இடந்தர வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். இவ்வேண்டு கோள் முறைமையானது அன்முக இருந்தும், அவர்களைப் பார்த்துச் செதுக்கு ஓவிய உருவங்கள் செய்து கொடுத் தால் சிறை விடலாகும் என்று அரசனுடைய கட்டளை பிறந்தது. அவர் செதுக்கி அச்சிட்டு, "எற்போர்" என்று மாறுபெயர் கொடுத்து வெளியிட்ட நூலின் வரலாறு இதுதான்.

உதவி மறுத்தல்

அவர் பாரிஸ் நகரத்தை விட்டு நீங்காமல் இருந்தால் உதவிப்பொருள் 1500 ரூபா கொடுப்பதாக அரசன் கூறினன். அதற்குக் காலோ உடன்படவில்லை. அவருக் குப் பொஹீமியாவின் சார்பு மிகுந்திருந்தது. பிறர் சார்பற்றுத் தாமும் தம் பாடுமாயிருப்பதே பெருமை யென்று கொண்டாடினர். மீளவும் நான்சிக்குப் போய் அங்கிருந்து இறக்குமளவும் தொழில் செய்தார். செதுக் கோவியம் செய்தும் செய்ந்நீரைப் (திராவகம்) பயன்படுத்தி ஓவியம் அமைத்தும் அவர் உண்டாக்கிய படங்கள் பல. மிகுதியான ஓவியங்களைத் தோற்றுவித்த மேன்மையாள ராகிய அவ்வாண்மையாளர் வியக்கத்தக்க முயற்சியுள்ளவ ரென்று எல்லோரும் எளிதில் ஊகித்து உணர்ந்துகொள் ளலாம். பல வகையிலும் அவர் அமைத்த ஓவியங்கள் 1600-க்குக் குறையமாட்டா. அழகற்றதான பொருள்களை எழுதுவதுதான் அவருக்கு மிகுந்த விருப்பமாகும். அவைகளை மிகப் புதுமையானவைகளாக எழுதுவார். செய்ந்நீர் தெளித்துச் சிற்றுளி முனையால் விளக்கித் தடை யற அவர் முடித்த ஓவியங்கள் மிக அழகாகவும் நுட்ப மாகவும் அமைந்திருந்தன.

பென்வென்யுதோ செல்லினி

காலோவைப் பார்க்கினும் பென்வென்யுதோ செல் லினி (Benvenuto Cellini) எந்தத் துறையிலும் மிகுந்த

துணிவோடு இறங்கி அரிய முயற்சி செய்து வெற்றி பெற்றவர். வியத்தகு ஆற்றலுள்ள பொன் வினைஞர்; ஓவியர்; சிலையிலும் மரத்திலும் உருவஞ்செய்வோர்; செதுக்கோவியப் புலவர்; பொறியாளன்; நூலாசிரியர்; அவர் எழுதிய அவருடைய வரலாறு மிக அருமையான வரலாறு. அதற்கு உவமை என்றுங் கண்டதில்லை. அவர் தந்தையின் பெயர் கியேவானி செல்லினி. அவர் பிளாரென்ஸில் மெடிஸி லொரன்ஸோ அரண்மனை இசைப்புலவர்களில் ஒருவர். தன் மகன் தீங்குழல் ஊதுவதில் மிகத் தேர்ந்தவனாக வேண்டும் என்று மிகுந்த விருப்பத்தோடு எண்ணிக்கொண்டிருந்தார். இவ்வாறிருக்கையில் அவர் அரண்மனை வேலையை இழந்துவிட்டார். அதனால் தன் மகனை எதுவுந் தொழில் பழகவிடாமல் முடியாதென்று உணர்ந்தார். பொற்கொல்லன் ஒருவனிடத்தில் தொழில் பழகவிட்டார். இளம் பருவத்திலேயே மைந்தனுக்கு ஓவியம் எழுதவும், நுணுக்கமான கைத்தொழில் பழகவும் அவா உண்டெனத் தோன்றியது. தட்டானிடத்தில் கருத்துடன் வேலைசெய்யத் தொடங்கிய சிறிது காலத்திற்குள் கைத்தொழில் அவருக்கு நன்றாய் அமைந்தது. ஊரார் சிலருடன் வம்பிற்கலந்ததால் அவரை ஆறு திங்கள் ஊரைவிட்டு அகற்றி ஸியென்னாவில் (Sienna) வைத்தார்கள். அவ் வாறு திங்களும் அங்கொரு பொற்கொல்லனை அணுகிப் பணிகள் செய்யவும், மணிகள் இழைக்கவும் மேலும் நன்றாகப் பழகினர்.

சீர்த்தியும் சினமும்

இத்தொழில் பழகிவரும்போது தந்தை அவரைக் குழல் ஊதிப் பழகச்சொல்வார். குழல் ஊத அவருக்குச் சிறிதாவது விருப்பம் இல்லை. ஆயினும், தந்தை சொல்லைத் தட்டாமல் அவர் அதையும் பழகிவந்தார். அவருக்கு விருப்பம் ஓவியவேலைகளில்; அவ்வேலைகளை முயற்சியோடு செய்துகொண்டுவந்தார். ப்ளாரன்ஸ் நகரத்திற்குத் திரும்பிப்போய் லீயனர்டோ டாவின்ஸி (Leonardo da vinci), மைகேல் அஞ்சிலோ (Michael

Angelo) என்னும் தேர்ச்சியாளர்கள் இருவர் செய்து வைத்த உருவங்களை மனம்பொருந்தப் பார்த்துச் செய்து பழகினார். பொன்வினையாண்மையில் மேலும் தெளி வடைதற்கு ரோமாபுரிக்குக் கால்நடையாகச் சென்று அங்கே பலவகை அருந்தொழில்களைப் பழகினார். விலை உயர்ந்த உலோகங்களில் ஓவியவேலைகள் செய்து கைதேர்ந் தவர் என்று பெயர்பெற்றுப் பின், ப்ளாரென்ஸ் நகரத்திற் குத் திரும்பிச்சென்றார். அவ்வளவு ஆற்றலுடைய கை வேலைக்கு மிகவும் பெருமை உண்டாயிற்று. அந்த ஸெல்லி னியோ முன்சினம் உள்ளவர். அடிக்கடி ஏதாவது வம்பில் மாட்டிக்கொண்டு தப்பிப்பிழைக்கப் பிறநாட்டிற்குச் செல்லுவார். அப்படிச் செய்யாமல் அவரால் முடிவதில்லை. துறவிக்கோலம் பூண்டு ப்ளாரென்ஸை விட்டகன்று மீள வும் வியென்னாவிற் புகலடைந்தார். அங்கிருந்து பிறகு ரோமாபுரி போய்ச்சேர்ந்தார்.

பல தொழில்களில் மேலும் பயிற்சி

முன் ஒருமுறை அவர் ரோமாபுரியில் இருந்தவரே. இந்த இரண்டாம்முறை அங்கிருக்கையில் அவருக்கு மிகுந்த நன்மை உண்டாயிற்று. பொற்கொல்லனுக்குப் பொற் கொல்லனும் இன்னிசைக்காரனுக்கு இன்னிசைக்காரனும் ஆகப் போப்பினிடத்தில் வேலைகிடைத்தது. சிறந்த அறிஞர் கள் செய்த வேலைகளைப் பார்த்துப் பார்த்துப் பழகி வளர்ச்சி பெற்றார். மணி இழைத்தல், பளிங்குத் தளுக்கிடுதல்; முத்திரை செதுக்கல்; பொன் வெள்ளி வெண்கலங்களில் ஓவிய வேலை ஊகித்துச்செய்தல் ஆகிய இவைகளைப் புது மையாகச் செய்வதில் அவருக்கு ஒப்பானவர்கள் எவரும் இலர். இன்ன பொற்கொல்லன் இன்னதுறையில் சிறந்த வன் என்று எவராவது கூறக்கேட்டால், அப்பொழுதே வருந்தி உழைத்து அவ்வல்லவனை வெல்லப் பார்ப்பார். எவராவது சிறந்த பதக்கம் செய்திருப்பது கண்டால் அதுபோலத் தானுஞ் செய்வதும், பளிங்குத் தளுக்கு வேலையில் புதுமையானதென்று பலர் பாராட்டுவதற்கு ஒப்பாகத் தானும் தளுக்கிடுவதும், அரும்பணிகளுக்கு ஒப்

யாகப் பணிசெய்வதும் ஆகிய பழக்கங்கள் அவருக்கு அமைந்தது இவ்வாறே.

நாடோடி வாழ்க்கை

இவ்வகை மனப்போக்குடையவராக உடல் வருந்தி உழைத்த ஸெல்லினி சிறந்தவேலைகளை மிகுதியாகச்செய்து முடித்தது வியப்பன்று. அவர் தளரா முயற்சியுள்ளவர். எப்பொழுதுஞ் சுற்றித்திரிவதே தொழிலாயிருப்பார். இப்பொழுது அவர் எங்கே என்று கேட்டால் ப்ளாரென்ஸில் என்பார்கள். பிறகு ரோமாபுரியில் இருக்கிறார் என்பார்கள். பிறகு மந்துவாவில் இருக்கிறார் என்பார்கள். மீளவும் ரோமாபுரியில் காணலாம். அப்புறம் அங்கிருந்து நப்பொலிக்குப் போயிருப்பார். பின்பு பிளாரென்சுக்குத் திரும்பி விடுவார். பின்பு வெனீஸில் இருப்பார். அப்பால் பாரிஸில் இருப்பார். நெடுந்தொலை போகும்போதெல்லாம் குதிரையேறிப் போவார். அதனால் பொருள்கள் மிகுதியாகக் கொண்டுபோக இயலாது. ஆகவே, போகும் இடங்கள் தோறும் முதலில் வேலைக்குரிய கருவிகளை அங்கங்கிருந்து தானே செய்துகொள்வார். செய்யும் உருவம் முதலியவைகளை ஊகித்துக் கற்பித்தபின், கைவேலையை பிறரைக் கொண்டு செய்விப்பதே இல்லை. சுத்தியல் வேலை, செதுக்கு வேலை, வடிவமைத்து அழகாகச் செய்து முடிக்கும் வேலை ஆகியவைகள் எல்லாம் அவர் ஒருவர் கையாலேயே முடிந்தன. கைவேலைகளில் அறிவு குறியிடப்பட்டாற்போலக் காணும் எவர்க்கும் ஐயமறத்தோன்றும். அதனால் அவ்வேலைகளை, அவர் அறிவுரை கூறக்கேட்டு மற்றொருவன் செய்துமுடிப்பது இயலாது. மகளிர் இடைக்கச்சுப் பூட்டு, இலச்சினை, கழுத்திடு நகைக்கடப்பூட்டு, ஓவிய ஊசி, விரல் ஆழி, தெறி முதலிய எவ்வகை எளிய வேலையும் அவர் கையில் புதுமையான வேலைப்பாடாக அமையும்.

சிறப்பும் விரைவும்

கைவேலையில் ஸெல்லினி மிகுந்த விரைவும் சிறப்பும் உள்ளவர். ராப்பெல்லோ டெல்மோரோ (Raffaello-

del Moro) என்னும் தட்டானுடைய மகளுக்குக் கையில் அறுவைசெய்ய அறுவை மருத்துவர் ஒருவர் ஒருநாள் அவருடைய கம்மசாலைக்குச் சென்றார். சென்றபொழுது அங்கிருந்த ஸெல்லினி மருத்துவர் வைத்திருந்த கருவிகளைக் குறிப்பாகப் பார்த்தார். அக்காலத்தில் அறுவை மருத்துவர்கள் வைத்து வழங்கிய அறுவைக் கருவிகள் சிறந்தவைகள் அல்ல ; கீழ்த்தரமானவைகள். "அறுவை வேலையை இவ்வளவில் நிறுத்திக்கொள்ளும். சிறிதுநேரத்திற்குள் வந்துசேர்வேன்," என்று ஸெல்லினி மருத்துவருக்குச் சொல்லிவிட்டுத் தன் தொழிற்சாலைக்கு விரைந்து சென்றார். ஆணித்தரமான எஃகுத்துண்டு ஒன்றை எடுத்தார். அறுவைக் கருவி ஒன்று அழகாகச்செய்து கொண்டுபோய்க் கொடுத்தார். மருத்துவர் அதை வாங்கி வளம்பெறப் பயன்படுத்தி மகிழ்ந்தார்.

ஸெல்லினி செய்த சிறந்தவைகள்

ஸெல்லினி உரு அமைத்த வடிவங்களில் சிறந்தவைகள், முதலாவது பிரான்ஸிஸுக்கு பாரிஸ் நகரத்தில் அமைத்துக்கொடுத்த, வியாழபகவான் வெள்ளியுருவமும், ப்ளாரென்ஸின் அரசராகிய காஸ்மோவிற்கு வெண்கலத்தில் வார்த்துக்கொடுத்த பெர்ஸியஸ் உருவமுமே. அல்லாமலும் வெண்கல்லில் செய்த அப்பொல்லோ, ஹையெஸிந்தஸ், நார்ஸிஸ்ஸஸ், நெப்தியூன் ஆகிய உருவங்களும் அழகாக அமைந்தன. அவர் பெர்ஸியஸ் வடிவத்தை உருக்கிவார்த்து உருவமைத்த வரலாறுகள் அவ்வருந்தொழிலாளருடைய பெருந்திறமையை முதன்மையாய் விளக்கும்.

முடியாததை முடிக்க முயலுதல்

ஸெல்லினி பெர்ஸியஸ் வடிவத்தை மெழுகிற்செய்து காட்ட பெருமைமிக்க ட்யூக் பார்வையிட்டார். வெண்கலம் உருக்கிவார்த்து இந்த உருவத்தை அமைக்க முடியாதென்று உறுதியாகக் கூறினர். முடியாதென்று

அவர் சொல்லியதைக் கேட்டதும் ஸெல்லினிக்கு அதை முயன்று முடிக்கும்படி உள்ளக்கிளர்ச்சி உண்டாகியது. முதலில் களிமண்ணில் அந்த உருவத்தைச் செய்து சுட்டுப் பிறகு அதற்கு மெழுகுறையிட்டுச் செம்மையாக்கினார். பிறகு ஒருவகை மண்ணால் அதற்கு மேலுறையிட்டு அதையுஞ் சூளையில்வைத்துச் சுட்டார். சுடும்பொழுது உள்ளிருந்த மெழுகுறை உருகி வழிந்துபோய் விட்டது. அப்பால் களிமண் உறைக்கும் மேல் மண் உறைக்கும் இடையில் வெண்கலத்தை உருக்கிவார்க்க வெறும் இடம் இருந்தது. சூளையின் அடியிற் குழிபறித்து அக்குழியில் மேற்கூறிய ஈரடுக்கு மண்ணுறை வடிவத்தைப் பதித்துச் செம்மையாக்கினார். சூளையில் உருகும் வெண்கலம் அவ்விரண்டு உறைக்கும் இடைவெளியிற் புகும் படியாகக் குழாய்வழியாகத் தொளைவழி வைத்தார்.

முயற்சியில் துன்பம்

சிலை உருக்கி வார்க்கச் சூளைபோடும்படி ஸெல்லினி முன்னாலேயே சாதிக்காய்மரம் சுமை சுமையாக வாங்கி அடுக்கி வைத்திருந்தார். பிறகு சூளையில் எங்கும் நிறையப் பித்தளையும் வெண்கலமும் தாண்டு தண்டாய் வைத்து நெருப்பு மூட்டினார். குங்கிலியம் வடிய வடிய நெருப்புச் சீறிச் சுடர்விட்டது. கம்மசாலை முகட்டிற் பற்றி அதிற்பாதி எரிந்தும் போய் விட்டது. இந்தச் சமயத்தில் காற்றடித்து மழை பொழியத் தொடங்கியது. சூளை சிறிது நனைந்து சூடுதணிந்தது. தணியவே பித்தளையும் வெண்கலமும் உருகவில்லை. ஸெல்லினி நீண்ட நேரம் மேன்மேலும் விறகிட்டுச் சூடேற்றப் பாடுபட்டார். பட்ட பாட்டால் ஆற்றல் ஒடுங்கிக் களைத்து வருந்தினார். பாவையைச் செய்து முடிக்குமுன் தம் உயிர் போய்விடும் என்று மிகவுங் கலங்கினார். தம் கையாட்களைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டுத் தம் படுக்கையறையிற் போய்ப்படுத்துக் கொண்டார். அவருடன் இருந்தவர்கள் அவருக்கு இந்தத்துன்பம் நேரிட்டதைக் குறித்து வருந்தினார்கள். வேலைக்காரன் ஒருவன்

விரைந்து பள்ளியறைக்கு ஓடினான். "இந்த வறியோன் பென்வென்யுதோ உழைத்த உழைப்பெல்லாம் வீணு யிற்றே," என்று வருந்திக் கூறினான். அவன் கூறியதைக் கேட்டார் செல்லினி. படுத்திருந்த படுக்கையினின்று திடீரென்று எழுந்து ஒரு தாண்டில் பறந்து கம்மசாலைக் குப் போய்ப் பார்த்தார். தீ அவிந்து உருகின உலோகம் மீளவும் இறுகிக் கட்டியாகி யிருந்தது.

துன்பின் முடிவில் இன்பம்

பக்கத்து வீட்டுக்காரன் ஒருவனிடத்தில் ஓராண்டு நன் ருகக் காய்ந்த விறகு இருந்தது. அது முதிராமரத்தில் வெட்டியது. ஸெல்லினி அவ்விறகில் ஒரு சுமையை வாங்கிச் சூளையில் அடுக்கினார். நெருப்பு மீளவும் பற்றித் திகுதிகு என்று . எரிந்தது. உலோகம் உருகிப் பளிச் சென்று விளங்கியது. காற்று விரைவாக வீச மழை மிகுதியாகப் பொழிந்துகொண்டே யிருந்தது. அதனால் சில பலகைகளை எடுக்கச் செய்தார். துணியாலும் இரட்டாலும் மூடி மழைக்குப் பிடித்துக்கொண்டு, சூளையில் விறகுக் கட்டைகளைப் போட்டுக் கொண்டிருந்தார். அல் லாமலும் வெண்கலத்திற்குமேல் வெள்ளீயமும் கட்டி கட்டி யாகப் போட்டார். இருப்புச் சலாகையாலும் நெடுங்கோ லாலும் கிண்டிக் கிளறிவிட்டார். விரைவில் உலோகத்தை குறையற உருகப் பண்ணினார். இவ்வேளையில் நினைத்த செயல் வாய்ப்பதும் சிதறுவதும் தெரியும்போல் இருந்தது. திடீரென்று இடியொலிக்கு ஒப்பாக ஒரு வெடியொலி கேட்டது. ஸெல்லினியின் கண்ணெதிரில் மின்னலைப் போன்ற வெளிச்சம் பளிச்செனத் தோன்றியது. சூளை மூடி வெடித்து உருகின உலோகம் பெருகத்தொடங்கியது. அது விரைவாக ஒழுகவில்லை. ஆகவே ஸெல்லினி மடைப் பள்ளிக்கு ஓடினார். அங்கிருந்த வட்டில், கும்பா, கிண் ணம், பலவகையான கொப்பரை முதலிய செம்பு வெள்ளீ யம் ஆகியவற்றால் செய்த ஏனங்கள் இருநூறுவரை வாரிக் கொண்டுபோய்ச் சூளையில் இறைத்தார். அதன் பிறகு தான் உருகிய செம்பு வெள்ளீயம் முதலியன தங்கு தடை

யின்றித் தாராளமாக வடிந்தது. பின் ஒப்புயர்வற்ற அழகிய பெர்ஸியல் உருவமும் அமைந்தது.

பெல்லிஸ்ஸியின் செயல்

இருந்தாற்போல் இருந்து தெய்வத்திருவருளால் சூழ்ச்சி பிறக்க, ஸெல்லினி வெறிகொண்டு மடைப்பள்ளிக்கு ஓடி அங்கிருந்த ஏனங்களையெல்லாம் வாரிக்கொண்டு போய்ச் சூளையிற் போட்ட வரலாறுகளைப் படிக்கிறவர்களுக்கு, இவ்வாறே பெலிஸ்ஸி மண்பாண்டம் சுடும் பொருட்டு வீட்டிலிருந்த, நாற்காலி, பலகை, பெட்டி, கட்டில் முதலிய தட்டுமுட்டுப் பொருள்களை முறித்து உடைத்துச் சூளையில் வைத்து எரித்த செயல் நினைவுக்கு வரும். மன உறுதியில் இருவரும் ஒப்பாவர். குணம் குறிகளிலே இருவருக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

கையும் வாயும்

இஸ்மவேலைப்போல ஸெல்லினியையும் எல்லாரும் அடிப்பதற்குக் கையோங்கிய வண்ணமாயிருந்தார்கள். இஃது ஸெல்லினி சொல்லியது. ஆயினும் ஓவியத்துறையில் அவருடைய கைவளத்தையும் அறிவு நுட்பத்தையும் யாவரும் வியந்து பாராட்டுவார்களே தவிர எண்ணத்தில் மாறுபடுவார் இலர்.

நிக்கலஸ் பௌஸின்

நிக்கலஸ் பௌஸின் (Nicolas Poussin) என்பவருடைய வரலாறு இவ்வளவு புகழ்பெற்றதன்று. அவர் ஓவியக்கலை நுட்பத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்தவரென்று பெயர் எடுத்து உயர்நிலை பெற்றவர். அறிவாற்றல், நேரிய நடை, உள்ளத்தில் கள்ளமற்ற மனப்பண்பு இம்மூன்றிலும் புகழ்ந்து பேசப் பெற்றவர். அவர் ரௌஎனுக்கு (Rouen) அண்மையில் அந்திலீஸ் என்னும் ஊரில் ஓர் எளிய குடும்பத்தில் தோன்றியவர். அவ்வூரில் அவர் தந்தை சிறிய பள்ளிக்கூடம் வைத்திருந்தார். அவருக்குக் கல்வியில் கருத்துச் செல்லவில்லை. சென்றிருந்தால் தந்தை

கற்பித்த அளவாயினும் பயின்றிருக்கலாம். அவர் பாடம் படிப்பதில் எண்ணமற்றவரா யிருந்தார். புத்தகத்திலும் கற்பலகையிலும் ஓவியம் எழுதுகிறதே வேலையாயிருந்து பொழுது போக்குவார். அவர் புத்தகங்களெல்லாம் ஓவியமாயிருக்கும். அவர் எழுதியிருந்த ஓவியங்களை நாட்டகத்து ஓவியன் ஒருவன் கண்டு களிகூர்ந்தான். இளைஞன் மனது ஏகுந்துறையில் ஏக விடுவதன்றி ஏகாத்துறையில் திருப்புதற்கு எண்ணக் கூடாதென்று தாய் தந்தையர்கட்குக் கூறினன். அவர்கள் தம்மகனுக்கு ஓவியக்கலை கற்பிக்க அவனைக்கேட்டு உடன் படுத்தினர்கள். அவ் ஓவியனுக்குத் தெரிந்தவைகளை யெல்லாம் சிறிது காலத்திற்குள் தேறத் தெளியப்பயின்றார். பிறகு புதிதாக ஏதேனும் கற்பதற்குத் துடித்தார். பதினெட்டாவது தாண்டில் அவர் பாரிஸ் நகரத்திற்குச் சென்றார். போகும் வழியில் அங்கங்கே தங்கிக் கடை விவரம் குறிக்கும் பலகைகளை ஓவியம் எழுதி அழகு செய்து கொடுத்தார். அதனுல் வரும் ஊதியத்தைக் கொண்டு வயிறு வளர்த்தார்.

பாரிஸ் நகரில் பயிற்சி

பாரிஸ் நகரம் எங்கும் அவர் கண்ணுக்கு ஓவியங்கள் நிறைந்த புதுமையான நகரமாகத் தோன்றியது. அங்குள்ள வியக்கத்தக்க வேலைப்பாடுகளைக் காணக்கான மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். ஓவியத்துறையிற் கைதேர்ந்தவனுகும் அவா மேன்மேலும் பெருகியது. அவர் அங்குள்ள பல ஓவியக்கூடங்களில் மிக முயற்சியாய் ஓவியம் எழுதியும், பழைய ஓவியங்களைப் பார்த்து எழுதியும், எழுதியவைகளுக்கு நிறந்தீட்டியும் பலவாறு பயின்றார். சிறிதுகாலஞ் சென்றது; முடிந்தால் ரோமாபுரிக்குப் போய் வர எண்ணிப் புறப்பட்டார். ப்ளாரென்ஸ் நகரம் வரையிற் சென்று அப்பால் செல்லமுடியாமல் மீண்டும் பாரிசுக்கே திரும்பிவிட்டார். மீண்டும் ஒருமுறை ரோமாபுரிக்குச் செல்ல முயன்றும் அவரால் போய்ச்சேர இயலவில்லை. இத்தடவை அவர் லயன்ஸ் வரையில்தான் சென்றார். இவ்வாறு முயன்ற வழிச்செலவு அடுத்தடுத்துத்

தடைப்பட்டும் எப்பொழுதும் காரியத்திலே கண்ணாயிருந்தார். கிட்டும் சமயத்தை எட்டவிடாமல் தொழிலில் தெளிவுபெற வகை பார்த்துக் கொண்டிருந்தார். முன்போல் எப்பொழுதும் பொருளாராய்ச்சி செய்வதும் பழக்கம் பண்ணுவதுமா யிருந்தார்.

நினைத்தது நிறைவேறல்

இம்முயற்சியில் பன்னிரண்டு ஆண்டுகள் சென்றன. இவ்வளவு காலமும் அவர் சிறுமையடைந்து வருத்தப்பட்ட காலம்; காரியங்கெட்டு ஏமாறிய காலம்; உண்ண உடுக்க வகையற்று வருந்திய காலம் என்றும் உரைக்கலாம். ஒருவாறு கடைசியில் பௌஸின் கருதியவாறு ரோமாபுரி போய்ச் சேர்ந்தார். அங்கு முன்கால அறிஞர்களுடைய ஓவியங்களையும் பழைய வடிவங்களையும் பார்த்து மகிழ்ந்தார். கலையாற்றல் குறைவின்றி நிறைந்து விளங்கிய அவைகளைப் பார்த்து வியப்படைந்து முயற்சி குன்றுமல் ஓய்ந்து ஆய்ந்து பயின்றார். சிறிதுகாலம், தன்னைப்போல் எளிய நிலையிலிருந்த ட்யூக்வெஸ்நோய் (Duquesnoi) என்னும் கல்லோவியப் புலவரை அண்டி அவருடன் இருந்து அவருடைய உதவியால் பழங்காலத்தில் வழங்கிய முறைப்படி பாவைகள் செய்யப் பழகினர். அவருடன் சென்று ரோமில் உள்ள அந்திநௌஸ் முதலிய அரிய அழகுடைய உருவங்கள் என்று பெயர்பெற்ற சிலவற்றை ஆர அமர அளவிட்டுப் பார்த்தார். பிறகு அவருக்குண்டாகிய கைத்திறத்திற்கும் நன்மைக்கும் இப்பழக்கமே முதன்மையான காரணமாயிற்றென்று எண்ணுவாரும் உளர். அவர் கற்ற துறை ஓவியம் ஒன்றுமட்டும் அன்று. முழுவடிவ வேலைப் பயிற்சியும் பெற்றார். ஒன்றைப் பார்த்துச் சிறிதும் மாறுபாடில்லாமல் அதைப்போலவே எழுதப் பழகினர். தம் கண்ணுக்கு எதிரில் காண்பவர்கள் நின்றாலும் இருந்தாலும் படுத்தாலும் நடந்தாலும் வேறென்ன செய்தாலும் அதேவிதமாக எத்தனையோ படங்கள் எழுதிவைத்திருந்தார். மேன்மைவாய்ந்த கம்மியத்தைப்பற்றி அப்பொழுது

அகப்படும் அரிய நூல்களை நண்பர்களிடத்தில் வாங்கிக் கருத்தாகப் படித்துக்கொண்டு வந்தார்.

தேறித்தெளிவந்த செல்வம்

இவ்வளவு காலமும் அவர் மிகவும் எளியவராகவே இருந்தார். இடையறாது தேறித் தெளிவதே பெருஞ் செல்வம் என அவர் உள்ளங்களித்திருந்தார். எழுதிய ஓவியங்களை வந்த விலைக்கு விற்றுத் தொலைப்பதே அவருக்கு எப்பொழுதும் விருப்பம். பின் நடப்பவைகளை முன்உரைக்கும் முனிவர் படம் ஒன்றை நான்கு ரூபாய்க்கும், பெலீஸ்தர் கொள்ளை நோயை கற்பனைசெய்து எழுதிய படத்தை நூற்றைம்பது ரூபாய்க்கும் விற்றார். பின் குறித்த படத்தைப் பிறகு ரிக்லூ கார்டினல் போதகர், இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு வாங்கினராம்.

கைம்மாறு

வறிய நிலைமையில் இருந்து வருந்தும்பொழுது போதாக்குறைக்குக் கொடிய பிணி ஒன்று கண்டு அதிலும் வீழ்ந்து வருந்தினர். ஆற்றல் ஒடுங்கி ஆருமற்றவராக வருந்தும்பொழுது, குலமகன் ஒருவர் சமயம் அறிந்து பொருள் கொடுத்து உதவிசெய்தார். அவர் செய்யாமற் செய்த உதவியை அவ் ஓவியக்கலைஞர் மறந்திலர். நலம் அடைந்தபின், "பாலைவனத்தில் இளைப்பாற்றி" என்னும் அழகிய ஓவியம் ஒன்று எழுதி அன்புடனும் பணிவுடனும் தனக்குதவியோர்க்குக் கொடுத்தார். பிணியுற்று வருந்திய சமயத்தில் மேற்படி செல்வர் உதவிய பொருள் ஒரு பங்கானல், அவ்வோவியத்தின் விலை ஒன்பது பங்கென்று மதிக்கலாம்.

வெளியீடு

அவ்வாண்மையாளர் துன்பத்திலும் வருந்தி உழைத்துக் காதலுடன் பொருளாராய்ச்சி செய்துகொண்டு வந்தார். பின்னும் மேலான செய்திகளில் நாட்டம்

வைத்து, விளக்கமாகக் கலைபயில எண்ணி ப்ளாரென்ஸுக்கும் வெனீஸுக்கும் சென்றார். நெஞ்சறிய நேர்மையாக உழைத்த உழைப்பின் பயனாகிய அவர்தம் பேரோவியங்கள் பல தொடர்ச்சியாகப் புகழ்பெற்றன. முதலில் வெளியானது "ஜர்மானிகஸ் மரணம்." அதை அடுத்து வெளியானவை, "துன்ப வழிபாடு," "யூதாமிதாஸ் ஏற்பாடு," "மன்னா," "ஸெபயின் மாதர் களவு" முதலியன.

அடக்கம் உடைமை

எவ்வளவுதான் ஓவியங்களைப் பொருத்தமாக அமைத்தும் பௌஸின் விரைவிற் புகழாளர் ஆகவில்லை. அடக்கமாய்த் தம்பாட்டில் இருப்பது அவருடைய பிறவி இயற்கை. நால்வர் கூடும் இடத்தில் அவர் தலைகாட்டார். ஊர் உலகம் அவரை ஓவியர் என்றன்று; ஆழ்ந்த எண்ணம் உள்ளவர் என்று கொண்டாடும். ஓவியம் வரையாத வேளையில் பிறகு எழுதப்போகும் ஓவியங்களின் கருத்தை நீள எண்ணிக்கொண்டு நாட்டகத்தில் தன்னந்தனியே நெடுந்தொலை செல்வார். ரோமாபுரியில் தங்கியிருக்கும் போது அவருக்கு நண்பர்களாகச் சிலர் தாம் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் க்ளாட் லொரேன் (Claude Lorraine). சிலவேளை பௌஸின் ஒரு கோயில் உப்பரிகை மேல் வெகு நாழிகை நேரம், கலையையும் பழங்காலத்து ஓவியங்களின் கைத்திறம், கைத்திறம் இன்மை ஆகியவைகளையும்பற்றி உரையாடிக்கொண்டிருப்பார். ரோம் நகரெங்கும் விகாரமற்று ஒரே சீராகவும் அமைதியாகவும் இருந்த இயற்கை அவர் உள்ளத்திற்கு ஏற்கும் இயற்கையாகியது. தூரியக்கோல் பயன்படுத்தலால் சிறு வாழ்க்கைக்கு வருவழி உண்டாக்கிக்கொள்ளக்கூடுமெனின், அந்நகரைவிட்டு விலக அவருக்கு மனமே இல்லை.

ஓவியர் தலைவன்

ஆயினும், அவர் பெயர் பிறகு ரோமுக்கு அப்பாலும் எட்டியது. பாரிஸ் நகரத்திற்குத் திரும்பி வரும்படி அடிக்கடி கடிதம் எழுதினார்கள். அரண்மனை ஓவியர் தலைவராகும்

படி வேண்டிக்கொண்டார்கள். முதலில் இருமனமாயிருந்தார். "குணமது கைவிடேல்" எனப் பொருள் தரும் இத்தாலியப் பழமொழி ஒன்றை எடுத்துரைத்து, "நான் பதினைந்தாண்டுக்காலம் ரோமாபுரியில் வாசமாயிருந்து இங்கொரு பெண்ணை மணம்புரிந்தேன். இருக்கும் அளவும் இங்கேதானே நிலைக்குடியாயிருந்து இறந்துபோவது எனது அவா," என்று கூறினார். மீளவும் அவரைத் தூண்டினார்கள். அதற்கு உடன்பட்டுப் பாரிஸ் நகருக்குத் திரும்பினார். அங்குள்ள ஓவியக்காரர்கட்கு அவரைக் காணவும் பொறாமை மூண்டது. ஆகவே, மீளவும் ரோமுக்குப் போய்விட விரும்பினார். பாரிஸில் இருக்கும்பொழுது, "அர்ச்சியசிஷ்டஸாவியர்", "அறிவு முழுக்கு", "கடை இரா உணவு" என்னும் அரிய ஓவியங்களை அவர் எழுதினார். அவர் இடையறாது ஓவியம் எழுதிய வண்ணமாகவேயிருப்பார்.

எனக்கிருப்பது இரு கையும் ஒரு தலையுமே

தொடக்கத்தில் எதைக் கேட்டாலும் எழுதிக் கொடுப்பார். அவர் எழுதிய ஓவியங்கள் சில அரசன் புத்தகங்கட்கு நான்முகப்புப் படம், பித்திகைப் பலகணிப் படம், கம்பள ஓவியம் ஆகியவைகளே. பிறகு ஒரே சமயத்தில் பலவேலை செய்யச்சொல்லும்பொழுது தடுத்து வழக்காடுவார். "நான்முக ஓவியம், கன்னி ஓவியம், ஸாந்து லூவித் திருச்சபைப் படம், ஓவியக்கூடத்திற்குரிய பற்பல ஓவியங்கள், அரண்மனைக் கம்பளச் சித்திரம் இவைகளெல்லாம் ஒரேசமயத்திற் செய்ய என்னால் முடியாது. உள்ளதெல்லாம்கூடி எனக்கு இரு கையும் ஆற்றல் குன்றிய ஒரு தலையுந்தானே. எனக்குக் கைத்துணை அமைவதும் இயலாது. என் வேலையிற் சிறியதை மற்றொருவன் செய்து என் வேலையைக் குறைப்பதும் கூடாது," என்று எம். டி. சாந்தி லூப்பிற்கு (M. de. Chanteloup) அவர் ஒருமுறை இடித்துரைத்தார்.

முடிவு

அவர் வெற்றியைக்கண்டு ஓவியக்காரர் பலர் அவருக்குத் திண்டாட்டம் உண்டாக்கினார்கள். அவர்களோடு

இனிமை சொல்லி உறவாட அவரால் இயலவில்லை. ஆகவே, பாரிஸ் நகரத்தில் உழைக்கத்தொடங்கி இரண்டு ஆண்டு கள் ஆகுமுன் ரோமுக்குத் திரும்ப முடிவுசெய்தார். அங்கே போய்ச்சேர்ந்து பின்ஷியோ குன்றில் தம் சிறு குடிசையில் தங்கிப் பெருவாழ்வைத் தவிர்த்துப் புகழடைய நாடாமல் அடக்கமாயிருந்து கற்ற துறையைச் சாகுங்காலம் அளவும் கையாடிவந்தார். அவரை வருத்திய நோயினால் பட்ட துன்பம் மிகுதி. கருத்தைக் கலையிற் செலுத்தி வளர்ச்சியில் உயர்நிலையைப் பெறுதற்கு முயன்று நோயின் தொல்லையை ஒருவாறு மறந்தார். "முதுமைப் பருவம் வந்து அடுக்கவும் பின்னும் மிகுதி யாகக் கற்றுத்தேறிக் கலைச்செல்வர் ஆகும் நோக்கம் என் னும் தீ மேன்மேலும் எனக்குள் பற்றி எரிகின்றது," என்று அவர் மொழிந்தார். இவ்வாறு உழைத்து வருந்தி அவ ருடைய முதுமைக்காலம் கழிந்தது. அவருக்கு மக்கள் இல்லை. மனைவி இறந்துபோனாள். உற்றார் உறவினரும் போய்விட்டார்கள். ஆகவே, முதுமைக்காலத்தில் ரோம் எங்கும் நிறைந்துள்ள பிணக்கோயில்களைக் கண்டு; கண் ணீரக்காணும் உரியர் ஆருமற்றுத் தன்னந்தனியே இருந்து 1665-ஆம் ஆண்டு இறந்தார். அவர் காலத்தில் தேடி வைத்திருந்த பொருள் 2500 ரூபா. அதை அந்திலீஸில் உள்ள உறவினர்க்குச் சாவுமுறி எழுதிவைத்தார். உலகத் தினருக்கு அவர் வைத்துப்போன பொருள் அறிவு நுட்பத்தால் உண்டாக்கிய புதுமை புதுமையான ஓவியங் களே.

ஏரி ஷெப்பர்

பின்னர் இருந்தவர்களில் இவரைப்போன்ற சிறந்த அறிவுள்ள ஓவியக்கலைஞர் ஏரி ஷெப்பர் (Ary Scheiffer). அவர் பிறப்பிடம் டோர்ட்ரெக்டு; தந்தை செர்மானிய ஓவிய அறிஞர். ஓவியப் புலவருக்கு மகனா கப் பிறந்தபடியால், ஓவியம் எழுதவும் நிறந்தீட்டவும் உறுதியாய் வரும் என்று மிக இளமையாய் இருக்கும் போதே பெற்றோர்கள் கண்டார்கள். இத்துறையில் அவ

ருக்கு அவா உண்டாக்கினர்கள். மகன் சிறுவனுயிருக்கும் போதே தந்தை இறந்துபோகத் தாய் சற்று வறியவளாக இருந்தும், மகனுக்கு நன்ருகக் கல்வி கற்பிப்பதற்குத் தகுதியாக இருக்கும் என்று குடும்பத்தோடே பாரிஸ் நகரத்திற்குப் போய்விட முடிவுசெய்தாள். அவ்வாறே சென்று கெரின் (Guerin) என்னும் ஓவியனிடத்தில் ஓவியம் பயிலவிட்டாள். வேறு நினைவற்றுக் கலை பயின்று கொண்டுவரத் தாய் பணக்காரி அல்லவே. முன்பே தன்னிடம் இருந்த சிறிது அணிகலன்களை விற்று, வாயை வயிற்றை ஒறுத்து மற்றைப் பிள்ளைகளைப் படிக்க வைத்திருந்தாள். இங்கிலையில் ஏரி கவலையற்று இருப்பாரா? அவருக்கு ஆண்டும் பதினெட்டு ஆயிற்று. தன் அளவில் குடும்பப் பாதுகாப்புக்காகப் பாடுபட்டுத் தாய்க்குத் துணைநிற்க விரும்பி எளிதில் அமையத்தக்க ஓவியங்கள் எழுதி விற்கத்தொடங்கினர். எழுத எழுதப் படங்களெல்லாம் சிறுசிறு விலைக்கு விற்றுப்போயின. அவர் உருவங்கள் செய்யவும் பழகினர். பழகப்பழகக் கையுந் திருந்தியது; உழைப்பிற்குத் தக்க ஊதியமுங் கிடைத்தது. வரவர ஓவியமெழுதுவதினும், நிறந் தீட்டுவதினும், நிறஞ் சேர்ப்பதிலுந் தெளிவடையலானர். "அறிவு முழுக்கு விளக்கம்" என்னும் படம் அமைந்த காலத்தை அவர் வரலாற்றில் புதியகாலத் தொடக்கம் என்று கூறலாம். அன்றுதொட்டு எழுதிய ஓவியங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று புதுமையாய் அமைந்தன. "பௌஸ்து," "நிமினிப்ரான்ஷிஸ்கா," "கிலேசம் தீர்க்கும் கிறிஸ்து," "சுத்த மாதர்," "அர்ச்சிய சிஷ்ட மொனிகாவும் அர்ச்சிய சிஷ்ட அகஸ்தினும்" முதலிய அரிய ஓவியங்கள் வெளிவரவும் அவர் புகழ் உயர்நிலைக்கு வந்தது.

ஷெப்பருக்கு மதிப்புரை

"ப்ரான்ஷிஸ்கா" என்னும் ஓவியம் அமைக்க ஷெப்பருக்கு அளவற்ற உழைப்பும் ஊக்கமும் கருத்தும் சென்றிருக்கும். மறைவு நிகழ்ச்சி இது. ஓவியக்கலையில் அவர்

கற்றது சிறிது. அதனால் இயற்கை அறிவாற்றல் ஒன்றையே துணைக்கொண்டு ஓவியக்கலை என்னும் செங்குத்து மலையில் ஏறும்படி நேரிட்டது. வேறு வழி இல்லை. இப்படியே செய்தொழிலில் கையும் ஓவியக்கலையில் உள்ளமும் பொருந்தின. கைப்பழக்கம் அமையும்படி, பற்பல வகைகளைப் பழகிப்பார்த்தார். நிறந்தீட்டும்படி வெவ்வேறு ஆராய்ச்சிகள் செய்துபார்த்தார். ஒருமுறை எழுதியதை நன்றாக இல்லை என்று அழித்து அழித்து அலுப்பற்று ஆர்ந்து அமர்ந்து பலகால் எழுதிக்கொண்டு வருவார். ஆயினும் அவருக்குக் கல்வித்தெளிவு இல்லாத குறைக்கு அவர் இயற்கை அறிவு ஒருவாறு தகுதியான ஈடாயிருந்தது. நெறிகுறி உயர்ந்து, பிறர் துன்பத்தை உள்ளாழ்ந்துணரும் இயற்கை அமைந்ததனால் அதன் துணையைச்சார்ந்து, துகிலிகையால் பிறர் உள்ளத்தைத் தன்வழிப்படுத்தத்தக்க கலைஞர் ஆனார்," என்று ஷெப்பரைக் குறித்து மெஸ்க்ரோத் என்பவர் மொழிந்தார்.

ஜான் ப்ளாக்ஸ்மன்

ஷெப்பர் மிக வியந்து போற்றிய ஓவியக்கலைஞரில் ஒருவர் ஜான் ப்ளாக்ஸ்மன் (Jon Flaxman). நண்பன் ஒருவனுக்கு ஒரு சமயத்தில் ஷெப்பர், "நான் 'ப்ரான் வலிஸ்கா' ஓவியம் அமைக்க எண்ணும்போது எவன் ஒருவன் எழுதிய ஓவியத்தையேனும் பார்த்து நெஞ்சறியக் கருத்தைப் பற்றியிருப்பேனாயின், அது ப்ளாக்ஸ்மன் எழுதிய ஒரு படத்தைக்கண்டே," என்று மொழிந்தார். ஜான் ப்ளாக்ஸ்மன், காவென்ட் தோட்டத்தில், புதுத்தெரு எனப் பெயர் வழங்கிய தெருவில் இருந்து, சுண்ணச்சாந்துப் பொம்மைகள் செய்துவிற்ற ஒருவருடைய மகன். சிறுவனாயிருக்கும்பொழுது அவருடைய உடல் மிகவும் ஆற்றல் குறைந்ததாக இருந்தது. அவரைத் தகப்பனருடைய கடையில் தலைவாயில் இருக்கையின் பின் ஒதுக்கில் தலையணையிட்டு உட்காரவைத்திருப்பார்கள். உட்கார்ந்து ஓவியம் எழுதியும், புத்தகங்கள் படித்தும் பொழுது போக்குவார். இஃது அவர் மனத்திற்கு இனிய பொழுது

போக்கு. பிறர்க்கு உதவி செய்பவராகிய, மெஸ். மத்தியூஸ் (Matthews) போதகர் ஒருநாள் அந்தக் கடைக்குச் சென்றார். அப்பொழுது அந்தச் சிறுவன் திருப்பித் திருப்பி ஏதோ ஒருநூலைப் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். அஃது என்ன நூல் என்று கேட்டார்.

"அஃது எளிய விலையில் நான் ஒரு கடையில் கண்டு வாங்கிக்கொடுத்த கொர்னீல்யஸ் நீப்பாஸ் (Cornelius Nepos) என்னும் நூல்" என்று அவருடைய தகப்பனார் சொன்னார். அதுகேட்டு அக்குலமகன் சிறுவனுடன் சிறிது நேரம் உரையாடினார். "இது உனக்குப் படிக்கத் தக்க நூல் அன்று; நான் ஒன்று கொண்டுவந்து தருவேன்" என்று சொல்லிப் போய்விட்டார். மறுநாள் ஹோமர் (Homer) டான்க் குவிக்ஸ்த (Don Quixote) என்னும் பாவாணர்கள் இயற்றிய நூல்களின் மொழிபெயர்ப்பைக் கொண்டுபோய்க் கொடுத்தார். பிளாக்ஸ்மன் விழைவோடு வாங்கிப் படிக்கத் தொடங்கினார். படிக்கப் படிக்க ஹோமர் நூல் உயிர்க்களையுடன் விளங்கிய ஆற்றலால் அவர் உள்ளம் பூரித்தது. அகில்லீஸ் (Achilleses) அஜாக்ஸ் (Ajaxes) என்பவர்களின் பாவனையாகச் சுண்ணச் சாந்திற் செய்து கடைப்பலகைத் தட்டில் வைத்திருந்த வடிவங்களைக் கண்டு பெருமையை உடைய பேராண்மையாளர்களின் உருவைத் தானும் எல்லா அழகுகளுடனும் சூழ்ச்சிசெய்து எழுத வேண்டும் என்னும் அவாப் பெருக்கம் அவர் உள்ளத்திற் குடிகொண்டது.

முதலில் தோல்வி

முதலில் அவர் எழுதிய ஓவியங்கள் அழகாக அமையவில்லை. பெரும்படியாயிருந்தன. இளமையிற் கை தேறாதவர்கள் செய்வதெல்லாம் சீரழிவது இயற்கைதானே. மைந்தன் எழுதிய ஓவியங்களைப் பார்க்கப் பார்க்கத் தந்தைக்குப் பேருவகை உண்டாயிற்று. அவைகளிற் சிலவற்றை ஒருநாள் அங்கே போன ரொபிலியாக் (Roubiliac) என்னும் ஓவியருக்குக் காட்டினார். அவர் அதனைப் பார்த்து, "சிச்சீ" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டார். ஆயி

னும் என்ன? மா இருந்தால் பலகாரம் ஆகாதா? தொழில் முயற்சியும் பொறுமையும் நிறைந்துள்ள அச்சிறுவருக்கு அச்சம் என்ன? அவர் இடையறாது நூல் படிப்பதும் ஓவியம் எழுதுவதுமே வேலையாயிருந்தார். பிறகு தன் இள அறிவை, நற்சாந்து, மெழுகு, களிமண் இவற்றில் வடிவங்கள் செய்வதில் செலுத்திப் பார்த்தார். முதலில் செய்த வடிவங்களை இன்றளவும் பாதுகாப்பாய் வைத்திருக்கிறார்கள். இவ்வாறு அவைகளைப் பாதுகாத்து வைத்திருப்பது அவ்வளவு புதுமையானவைகள் என்றல்ல. பதைப்பின்றி இயற்கையறிவு மிகுந்துள்ள இளைஞன் ஒருவன் முதலிற் செய்த தளரா முயற்சித்திறம் இத்தன்மையது என்று காண்பவர்கள் வியக்கும் பொருட்டே. அவர் நடக்கப் பல நாட்கள் சென்றன. அவர் கமுக் கட்டுத்தடி பிடித்துக் காலைத் தாங்கித் தாங்கி எடுத்து வைத்து நடந்து பழகினார். காலில் ஆற்றல் ஏற ஏறக் கோலைப் போட்டுவிட்டு நடக்கத் தொடங்கினார்.

மத்யூஸ்துரை வீட்டில்

அன்புள்ள மத்யூஸ் துரை அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் வைத்திருந்தார். அங்கு அவருடைய மனைவி ஹோமர் மில்த்தன் என்னும் பாவாணர் இயற்றிய நூல்களைத் தெளிவாகக் கற்பித்தாள். அவர் தன் முயற்சித் துணையால் க்ரீக், லத்தீன் மொழிகளும் கற்றுக்கொண்டு வந்தார். இந்த இரண்டு மொழிகளையும் அக்குலமகன் குலமகள் இருவரும் அவருக்குச் சிறிது கற்பித்தார்கள். களைப்புப் பதைப்பு இன்றி முயலும் முயற்சித் திறத்தால், ஓவியக்கலையில் அவர் கை வெகு நன்றாகத் திருந்தியது. அதனை அறிந்து ஒரு செல்வ மாது ஹோமர் நூல் வரலாறுகளைக் குறிப்பிக்கும் ஓவியம் ஆறு எழுதித் தருதற்குக் கட்டளை பிறப்பித்தாள். இதுதான் பிறர் விலை பேசி அவரைக்கொண்டு எழுதச் செய்த முதல் ஓவியம். அவர் வாணாள் எல்லாம் அவருக்கு இதுபோன்ற மகிழ்ச்சி ஒன்றும் இல்லை. புகழ் பெற்றவராவதற்கு விரும்பி உழைக்கும் ஓவியனுக்கு முதலிற் கிடைக்கும் வேலை மிக அரிதாகத்

தோன்றும். மருத்துவனுக்கு முதல் முதல் அகப்படும் கூலியும், வழக்கறிஞருக்கு முதலிற் கையேறும் பொருளும் சட்டசபை உறுப்பினர்க்கு முதற் சொற்பொழிவும், பாடக னுக்கு முதல் முதல் அவையேறிப் பாடும் பாட்டும், நூலா சிரியனுக்கு முதல் நூலும் அவ்வளவு முதன்மையானதல்ல. மேற்குறித்த வேலையை அவர் கணப்போதும் தாழ்த்த லின்றிச் செய்யத் தொடங்கினார். விரைவில் அழகாகச் செய்துகொடுத்தார். கொடுக்கவே வேலைக்குத் தக்க கூலி யும் கிடைத்தது; கைத்திறமைக்கு உரிய புகழ்ச்சியும் உண்டாயிற்று.

தோல்வியின் வெற்றி

பதினைந்தாவதாண்டில் ப்ளாக்ஸ்மன் அரசகலைக் கழ கத்தில் (Royal Academy) (பல்கலைக்கழகம்) நுழைந் தார். அவர் சிறிது அவையச்சம் உடையவராயினும் விரைவில் மாணவர்களுக்குள் அவர் பெயர் புகழ்பெற்றது. அவர் அரியன செய்து பெரியவர் ஆவார் என்று எல் லாரும் எண்ணமிட்டிருந்தார்கள். அவர்கள் எண்ணியபடி தவறுமற் பலித்தது. பதினைந்தாவது அகவையில் அவ ருக்கு வெள்ளிப்பதக்க நன்கொடை கிடைத்தது. அடுத்த ஆண்டில் அவர் பொற்பதக்கத்தில் நாட்டம் வைத்திருந் தார். கலையாற்றலிலும் முயற்சியிலும் அவருக்கு மிஞ்சின வர்கள் இலர். அதனால் பதக்கம் அவருக்கே கிடைக்கும் என்று எல்லோருஞ் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடை சியில் அவர்கள் கூறியது வீணாகியது. மற்றொரு மாணவ ருக்குப் பொற்பதக்கங் கிடைத்தது. அதற்குப் பின் அம் மாணவருடைய பெயர் புகழுடையவே இல்லை. ப்ளாக் ஸ்மன் பொற்பதக்கம் இழந்தது அவருக்கு நன்மையாகவே முடிந்தது. திட உள்ளம் படைத்தவனுக்குத் தோல்வியால் உண்டாகும் மனத்தளர்ச்சி நீடித்திராது. உள்ள மனவலி முழுதும் வெளிவந்து உதவும். "சமயந் தந்து என்னுடைய ஆற்றலைப் பாரும். கலைச் செல்வர்கள் மேலானதென்று பாராட்டி ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளை இன்னம் செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்." என்று பிளாக்ஸ்மன் தன்

னுடைய தந்தைக்குக் கூறினர். அவர் பின்னும் ஒரு பங்கு மிகுதியாக முயற்சி செய்தார். எவ்வகைத் துன்பத்தையும் பாராட்டிப் பின்னடையவில்லை. ஓவியத்தை இடையருது புதுமை புதுமையாக வரைந்தார். உருவங்கள் செய்தார். இந்தப் பழக்கத்தால் அவருக்கு விரைவாயன்று; சிறிது மெதுவாக நாள்தோறும் ஒவ்வொரு வகையாகத் தெளிவு பிறந்தது.

குடும்பத்திற்கு உதவி

இதன் இடையில் அவர் வீட்டார் வறுமைநிலை வந்தது என்று ஏக்கம் பிடித்திருந்தார்கள். நன்ருய் அரைக்கப் பட்ட சுண்ணம்பு வடிவப் பொம்மை செய்து வரும் ஊதியம் அவர்கள் வாழ்க்கைக்குப் போதவில்லை. இதை நினைந்து தன் விருப்பத்தையுஞ் சுகத்தையும் மனதார வெறுத்தார். கலைபயிலும் நேரத்திற் சிறிது ஒழிவித்து எளிய சில்லரை வேலைகளில் தந்தைக்குக் கைத்துணையாக உழைத்துக்கொண்டு வந்தார். கொத்தன் வேலை செய்வதற்காக ஹோமர் நூலை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டார். தன் வீட்டாரைக் காப்பாற்றித் தாங்கி வறுமை போக்கும் பொருட்டு, உயர்வு பாராமல் மிக எளிய கைத்தொழில் செய்ய அவர் உள்ளம் வணங்கியது. துன்பப்பட்டு இவ் வேலை பழக வெகுநாள் சென்றது. சென்ருலும் என்ன? அஃது அவருக்கு உதவியாகவே முடிந்தது. உழைக்கும் பழக்கம் அவருக்கு மிக எளிதாயிற்று பதைப்பற்றுப் பொறுத்து உழைக்கும் இயற்கை அவருக்கு நன்ருகப் பண்பட்டது. இந்தப் பயிற்சி அவருக்கு மலையைக் கல்லி எலி பிடிப்பதுபோலிருந்தாலும் இருக்கும்; ஆனல் அவ்வளவும் நன்மையே தவிரத் தீமை இல்லை.

எத்தொழிலும் இழிதொழில் அன்று

இளைஞராகிய ப்ளாக்ஸ்மன் ஓவியக்கலை அறிஞர் என்னுஞ் சொல் ஜொஸையா வெட்ஜ்வுட் வரையில் எட்டியிருந்தது அவருடைய நல்வினைதான். அந்த வெட்ஜ்வுட் புதுமை புதுமையாகப் பீங்கானும் மட்பாண்டமும் செய்தற்கு மாதிரி கற்பிக்கும்படி ப்ளாக்ஸ்மனைத் தேடிப்பிடித்

தார். அவரைப் போன்ற தேர்ச்சியாளருக்கு அத்தொழில் இழிதொழிலாகத் தோன்றினும் தோன்றுமே. ஆனால் அஃது இழிதொழிலே அன்று. பொதுவான தேயிலைக்குடி நீர்ப் பாண்டமானாலும் சரி; குண்டிகையானாலும் சரி, அதனைப் புதுமையாக ஊகித்துண்டாக்குவதும் ஓவியப்புலவனுக்கு உரியதொழிலே. நாள்தோறும் மக்கள் கையாடி உணவுக்காலத்தில் கண்ணெதிரே காணும் கிண்ணம் முதலிய கலங்களைப் பார்த்து அறியாத நுட்பம் எத்தனையோ யாவரும் அறியலாம். அறிந்து அவர்களுக்கு உயர்ந்த பழக்கம் உண்டானாலும் உண்டாகலாம். ஓவியக்கலையை மிகுந்த முயற்சியுடன் பயின்ற ஒருவன் மிகு துன்பப்பட்டுப் புதுமையாய் எழுதிநாற்பது ஐம்பதாயிரம் ரூபாய்க்கு விற்கும் அரிய ஓவியத்தைச் செல்வன் ஒருவன் வாங்கித் தன் ஓவியக்காட்சிச்சாலையில் புதுமையாக வைத்துப் பார்ப்பான். உலகத்தினர் அதனைக்கண்டு மகிழச் சமயம் வாய்க்காது. அவர்கட்கு அதனால் பயன் ஒன்றும் இல்லை.

பிளாக்ஸ்மனும் வெட்ஜ்வூட்டும்

மேலே கூறிய தேயிலைக் குடிநீர்ப்பாண்டம், தண்ணீர் ஏனம் முதலிய கலங்களை புதிதாகச் செய்து விற்றால் அவை யாவருக்கும் நாள்தோறும் பயன்படும். இவ்வாறு அவ்வறிஞன் எல்லா மக்கட்கும் உதவியாளனாவான். வெட்ஜ்வூட் காலத்திற்கு முன் பீங்கான்களிலும் கற்பாண்டங்களிலும் விளங்கிய உருவங்கள் வெறுக்கத்தக்கவைகளாக இருந்தன. வெட்ஜ்வூட் எவ்வகையிலும் அவைகளைத் திருத்த வேண்டும் என்று எண்ணியிருந்தார். அவர் எண்ணிய வாறு முடிக்க பிளாக்ஸ்மன் தன்னால் இயன்றவைகளையெல்லாம் செய்தார். அப்பொழுதைக் கப்பொழுது அவர் பல வகையான பாண்டங்களைச் செய்துகொடுப்பார். படங்களை எழுதிக்கொடுப்பார். முதன்மையாக முற்காலச் செய்யுள் களிலும் நூல்களிலும் கண்ட வரலாறுகளைக் குறிப்பிக்கும் ஓவியங்களை எழுதிக் காட்டுவார். அவற்றுள் பல இன்றளவும் அழியாதிருக்கின்றன. அவைகளிற் சில அழகிலும் தெளிவிலும் சிறந்தவை. அவற்றுள் சில பிறகு வெண்கல

உருவங்கள் செய்தற்கு அவர் எழுதிய படங்கட்கு ஒப்பாகும். எதிரஸ்கன் ஏனங்கள் எங்கும் பேர் போனவைகள். பொருட்காட்சிச் சாலைகளிலும் புதுமை விருப்பாளர்கள் சேர்த்து வைத்திருக்கும் ஓவியப்பொருள் வகையிலும் அவ்வேனங்களைக் காணலாம். அவைகளைப் பார்த்து அவர் நல்லுரு அமைக்கும் மாதிரி பயின்று, அம்மாதிரியைத் தன் நுண்ணுணர்விற்குத் தோன்றியவாறு அழகுபடுத்தினர்.

ஓவிய நூல்

அவர் காலத்தில் ஏதென்ஸ் நகரத்தில் வழங்கும் ஏனங்களைக் குறிப்பிக்கிற ஓவியநூல் ஒன்று டையு அர்ட் என்பவரால் இயற்றி வெளியிடப் பெற்றது. அதில் அங்கே வழங்கும் உண்மை வடிவமுள்ள கலங்களைக்கண்டு மாதிரி வேறுபாடுகள் வேண்டும் அளவிற்கு அறிந்து, சிறந்தவைகளைக் கடைப்பிடித்து, பேரழகு அமையப் புதுமை புதுமையாக உரு விகற்பஞ் செய்தார்.

ஓவியக் கலைவளர்ச்சிக்கு வழி

தாம் செய்துகொண்டு வரும் வேலை நாட்டில் கலையை வளர்ப்பிக்கும் சிறந்த செயல் என்று பிளாக்ஸ்மனுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. அவர் இளமையில் இத்துறையை வருந்திக் கற்றதனால் அவருக்கு வளம்பெற அமைந்த மேன்மை ஒன்றல்ல. அழகைக்கண்டு விரும்பிப் பயிலும் இயற்கை நன்றாகப் பண்பட்டது. தன் ஓவிய வேலையைக் காட்டி அதன் மூலமாகப் பிறருக்கும் அக்கலையில் அவா உண்டாக்க வல்லவரானார். வரவர அவருக்கு மிகுந்த பொருள் சேர்ந்தது. அவரால் அவர் நண்பரும் உதவியாளருமாகிய வெட்ஜ்வூட்டும் மிகுந்த செல்வரானார். இவ்வளவு நற்பயனையளித்தது இளமையில் உழைத்த உழைப்பென்று பிற்காலத்தில் அவர் மகிழ்ச்சியுடன் சொல்லுவார்.

பிளாக்ஸ்மன் திருமணம்

பிளாக்ஸ்மனுக்கு அகவை இருபத்தேழு ஆயிற்று. 1782-ஆம் ஆண்டில் தந்தையின் வீட்டைவிட்டு நீங்கி

ஸோஹோ நகரத்தில் வார்டர் தெருவில் சிறுவீடு ஒன்றும் சிற்பசாலை ஒன்றும் குடிக்கூலிக்கு அமர்த்தி வாழ்ந்து வருகையில் திருமணமுஞ் செய்துகொண்டார். மணமகள் பெயர் ஆன் டென்மன் (Ann Deenman). அப்பெண் முகக் கிளர்ச்சியும் அறிவுத்தெளிவும் நல்ல மனப்பண்பும் அமையப்பெற்றவள். அந் நல்லாள் தமக்கு வாழ்க்கைப்பட்டதனால், மேலும் ஒரு பங்கு மிகுந்த மனக்கிளர்ச்சியோடு உழைக்கலாம் என்று அவர் மனந்தெளிந்தார். அவரைப் போல் அவர் மனைவிக்கும், செய்யுளிலும் ஓவியக்கலையிலும் பற்று இருந்தது. அன்றியும அந்தச்செல்வி தன் கணவருடைய அரியஅறிவை வியந்து இன்பவெறி கொண்டவள்.

பிளாக்ஸ்மனும் மனைவியும்

உண்மை இவ்வாறிருக்க, மணம் ஆகாதவராயிருந்த திரு ஜாஷுவா ரெய்னல்ட்ஸ் (Sir Joshu Reynolds.) பிளாக்ஸ்மனை மணமான சில நாட்களில் கண்டார். அவரைப்பார்த்து, "உண்மைதானா ப்ளாக்ஸ்மன்! உனக்கு மணமாகி விட்டதென்று செய்தி கேள்விப்பட்டேன். ஒன்று சொல்லுகிறேன் கேள்; இஃதுண்மையானால், இனி ஏது; உன் ஓவியச் சிறப்பிற்கு அழிவுகாலம் வந்துவிட்டது." என்று கூற, அதுகேட்டுப் பிளாக்ஸ்மன் நேரே வீட்டிற்குச் சென்று மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்தார். அவள் கையைப் பற்றிக்கொண்டு, "என் ஓவியச் சிறப்பிற்கு அழிவுகாலம் வந்துவிட்டது, கேள்விப்பட்டாயா?" என்று கேட்டார். மனைவி, "அஃதெவ்வாறுவந்தது; அழிவுகாலம் வந்த வகை என்ன? அழிவு செய்தவர் யார்? என்று மனம் வருந்திக் கேட்டாள். "அழிவு வந்தது கோவிலில் இருக்கும் பொழுது; அழிவுக்குக் காரணம் தொலையிலிருந்து வரவில்லை; உன்னாலேதான் அழிவு வந்தது" என்று பிளாக்ஸ்மன் கூறினார்.

பிறகு புகழ்பெற்றவராகிய திரு யோஷுவா ரெய்னல்ட்ஸ் மொழிந்தது. உலகம் உணர்ந்ததாக இருக்கும் உண்மையை எடுத்துரைத்தார். "அஃதாவது ஓவியத் தொழில் பயிலும் மாணவர் திறமையிற் சிறந்து விளங்க

விரும்பினால், காலைமுதல் மாலைவரையில் தமது அறிவு கருவி எல்லாவற்றையும் அத்துறை ஒன்றிலேயே செலுத் துதல் வேண்டும். மேலும் ரோமாபுரியிலும், ப்ளாரென் ஸிலும் ரப்பீல்-மைக்கேல் அஞ்சிலோ முதலிய தேர்ச்சி யாளர்கள் அமைத்து வைத்திருக்கின்ற, பெருமைபெற்ற உருவங்களைக் கருத்துச் செலுத்திப் பார்த்துப் பழகா தவன் ஓவியக்கலையில் உயர்ந்தவனாக மாட்டான்."

பிறகு பிளாக்ஸ்மன் தம் சிறுவிரலை இழுத்துப் பிடித் துக்கொண்டு "நான் ஓவியக்கலையில் சிறந்தவனாகாமல் விடுகிறதில்லை" என்று சூள்மொழி கூறினார். அதுகேட்டு அவர் மனைவி, "நீர் ஓவியக்கலையில் சிறந்தவர் ஆகத்தான் வேண்டும். அதற்கு ரோமாபுரியைப் போய்ப்பாராமல் முடி யாதெனில் அங்கே போகவும் வேண்டும்" என்று கூறினாள். "ரோமாபுரி போவதற்கு வழி என்ன" என்று பிளாக்ஸ் மன் கேட்டார். மனத் திடம் உள்ள மனைவி, "வருந்தி உழைத்து மிதமாகச் செலவு செய்யும் ஜான் பிளாக்ஸ் மனுடைய ஓவியச் சிறப்பிற்கு ஆன் டென்மன் எமனாக வந் தாள் என்று உலகம் தூற்றும்படி ஒரு பொழுதும் விட மாட்டேன்" என்று பதில் உரைத்தாள். இவ்வாறே செல விற்குப் பொருள் சேர்ந்தவுடன் ரோமாபுரிக்குச் செல்லு கிறதென்று, கணவன் மனைவி இருவரும் ஒருமனதாக முடிவு செய்தார்கள். "சொல்தவறாமல் நான் ரோமாபுரிக் குப் போய் 'திருமணநிலை எவனுக்கும் தடையேற்படுத்து வதன்று; உதவி செய்வது' என்று அவைத்தலைவருக்கு எடுத்துக் காட்டுவேன்; நீயும் என்னோடு வரவேண்டும்," என்று பிளாக்ஸ்மன் உறுதி கூறினார்.

வழிச் செலவிற்குப் பொருள் சேர்த்தல்

உள்ளம் பொருந்திப் பரிவு கூர்ந்த கணவன் மனைவி இருவரும் மேற்சொல்லிய தெருவில் அமர்த்திய எளிய வீட்டில் இருந்துகொண்டு ஐந்தாண்டுகள் வருத்தமற்றுப் பொறுமையாக உழைத்தார்கள். அவர்கள் கண்ணும் கருத் தும் தொலைவிடமாகிய ரோமாபுரிப் பயணத்தின் மீது நாடோறும் படிந்திருந்தன. கனப்போதும் அவர்கள்

ரோமாபுரிப் பயணத்தை மறக்கவில்லை. ஒரு காசும் வீணிற் செலவிடாமல் மிஞ்சிய பொருளைப் பயணச் செலவுக்கென்று சேர்த்து வைத்தார்கள். தங்கள் நோக்கத்தை அவர்கள் எவருக்கும் வெளியிடவில்லை. ஓவியக் கலை வளர்ச்சிக் கழகத்தாரைப் பொருளுதவி கேட்கவும் இல்லை. பதருமற் பொறுமையாக உழைத்து நினைத்த காரியத்தை நெகிழவிடாமல் உறுதியான உள்ளத்துடனிருந்து முடிக்கும் அவா ஒன்றே தமக்குப் புகலிடம் என்று மனந்தேறினர்கள். இக்காலத்தில் பிளாக்ஸ்மன் புதுமையாக ஒன்றுஞ் செய்யவில்லை; புதுமையாக உருவஞ் செய்து பார்க்கச் சலவைக் கல்லுக்கு வழியில்லாதிருந்தார். அடிக்கடி அவரைக் கொண்டு நினைவுக்குறி உருவங்கள் செய்வித்தார்கள். அதனுல் வரும் ஊதியமே அவருக்கு வாழ்க்கை வழி. அவர் விட்டுவிடாமல் வெட்ஜ்வூட்டுக்கு வேலை செய்து கொண்டு வந்தார். வேலை முடிய முடியக் கணக்குப் பார்த்துக் கூலி கொடுத்துவிடுவது வெட்ஜ்வூட்டின் வழக்கம். பல வகையிலும் அவர் நாளுக்குநாள் நன்னிலையடைந்து வருத்தமற்றிருந்தார். பிற்காலத்தில் பெருங்குடியாவார் எனத் தோன்றியது. இருந்த இடத்திலேயே பெருமையுடையவர் என்று எல்லோரும் அவர் பெயரில் நோக்கம் வைத்தார்கள். அதனுல் உள்ளூரில் அலுவலுங் கிடைத்தது. ஸேன்ட் ஆன் என்னும் கோவிற் பற்றுக்குடிகள், காவல்வரி சேர்த்து ஒப்புவிப்பதற்காக அவரைத் தெரிந்தெடுத்து ஏற்பாடு செய்தார்கள். அவர் அங்கியில் தெறி பூட்டும் துளையில் மைப்புட்டி கட்டித் தொங்க விட்டுக் கொண்டு வரிவாங்கி வருவதை அங்குள்ளவர்கள் அடிக்கடி காண்பார்கள்.

ரோமில் காதலர்கள்

இப்படி உழைத்துச் சேர்த்த பொருள் திரண்டு தொகையேறிற்று பிளாக்ஸ்மனும் அவர் மனைவியும் ரோமாபுரிக்குப் பயணப்பட்டார்கள். நலத்துடன் ரோமாபுரி போய்ச் சேர்ந்தார்கள். பிளாக்ஸ்மன் முயற்சியாய்த் தொழில் பயிலத் தொடங்கினர். அவர் மற்றைய ஏழை

ஓவியக்காரர்களைப்போல பழைய வடிவங்களைப் பார்த்து ஓவியம் எழுதி விற்று வயிறு வளர்த்து வந்தார். இங்கிலாந்திலிருந்து ரோமாபுரிக்குப் போகும் பயணக்காரர்கள் பிளாக்ஸ்மனுடைய ஓவியச் சாலையைத் தேடிப்பிடித்து அவருக்கு வேலையிடுவார்கள். அங்கிருக்கும்பொழுது தான் அவர் ஹோமர், எஸ்கிலஸ், டாண்ட் என்பவர்களைக் குறிப்பிக்கும் உயரிய புதுமையான ஓவியங்களை எழுதினார். அவைகட்குக் கிடைத்த விலை சிறிது. ஒவ்வொன்றுக்கும் ஏழரை ரூபாய்தான். அதைக் குறித்து மனம் தளரவில்லை. அவர் மெய்வருந்தி உழைத்தது பொருளுக்கு மட்டும் அன்று, பொருளுக்கும் ஓவியக்கலையில் கைதேர்வதற்கும் ஊகித்து எழுதிய ஓவியங்களின் அரிய அழகைக் கண்டு பலபேர் அவருக்கு நன்மை செய்பவர்களும் உதவி செய்பவர்களும் ஆனார்கள். விலைபேசி அவரைக் கொண்டு ஓவியம் எழுதுவித்தார்கள். மிகுகொடையாளரென்று உலகிற் புகழ்படைத்தவரான தோமாஸ் ஹோப் துரைக்கு, மன்மதன் வடிவமும், அருணோதய தேவி வடிவமும், விரிஸ்தல் எர்ல் பெருமகனுக்கு ஆதமஸ் உக்கிர தேவி வடிவமும் அவர் எழுதிக் கொடுத்தார். அவர் ஓவியக்கலையறிவு வளர்ச்சியடைந்து கருத்தாகக் கற்றுப் பண்பட்டார். பிறகு இங்கிலாந்திற்குத் திரும்பிப் போக முயன்றார். அவர் இத்தாலியிலிருந்து புறப்படுமுன், ப்லாரென்ஸ், கரரா என்னும் இடங்களில் ஏற்பட்டிருக்கும் ஓவியக் கலைக் கழகத்தினர் அவர் திறத்தை நயந்து வியந்து தங்கள் கழகத்தின் உறுப்பினராக அவரைச் சேர்த்துக் கொண்டார்கள்.

குட்டிமனிதன் வெட்டித் தொலைக்கிறான்

அவர் போய்ச் சேருமுன் அவர் புகழ் லண்டன் நகரத்தில் எட்டியது. சேர்ந்தபின் வேலை மிகுதியாகக் கிடைத்தது. அவர் ரோமாபுரியில் இருக்கும்பொழுது மான்ஸ்பீல்ட் பெருமகனுக்கு நினைவுக்குறி உருவம் ஒன்று அமைக்கும்படி அவருக்குக் கூறியிருந்தார்கள். இந்த உருவம் மிக அழகாக அமைந்து அவர் பெயரை எங்கும்

நன்கு விளக்கிற்று. அவர் லண்டன் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்த சிறிது காலத்திற்குள் அந்த உருவச்சிலை வெஸ்ட் மினிஸ்டர் கோயிலின் ஓரிடத்தில் அமைக்கப் பட்டது. அது பிளாக்ஸ்மன் உடைய அறிவாற்றலின் அறிகுறியாகப் பொறுமை தூய்மை ஆற்றல் இம்முக்குண மும் விளங்கப் பேரழகு பொருந்தியிருக்கின்றது. அந் நாளில் ஓவியக்கலையில் ஒப்பு உயர்வு இல்லாத புகழாளராக இருந்த பாங்க்ஸ் அந்த உருவச் சிலையைப் பார்த்துவிட்டு, "இந்தக் குட்டி மனிதன் நம் எல்லாரையும் வெட்டித் தொலைக்கிறானே," என வருந்திக் கூறியது வியப்பன்று.

ஓவியக் கழகத்தில் உழைப்பு

அரசனால் ஏற்படுத்தப்பெற்ற ஓவியக்கலைக் கழகத்தார் பிறந்த நாட்டிற்கு பிளாக்ஸ்மன் திரும்பிப் போய்ச் சேர்ந்த செய்தி கேட்டார்கள். முதன்மையாய் அவர் கையால் உரு அமைந்த மான்ஸ்பீல்ட் உருவத்தைக் கண்டு வியப்புற் றார்கள். தங்கள் அவையில் அவரைச் சேர்த்துக்கொள்வ தற்குப் பதைத்தார்கள். பின்பு வலியக் கேட்டுக்கொள்ளு மாறு அவரைத் தூண்டிவிட்டுச் சேர்த்துக்கொண்டார்கள். சேர்ந்த சிறிது காலஞ் சென்றபின் அவர் இயற்கை முழு வதும் மாறித் தோன்றியது. காவெந்து தோட்டத்தில் புதுவீதியில் சாந்துப் பொம்மை செய்து விற்கும் தகப்பன் கடையில் இருக்கையின் மறைவில் இருந்து ஓவியக் கலை பயிலத் தொடங்கிய சிறுவர் இப்பொழுது அரசகலைக் கழகத்தில் கற்கும் மாணவர்கட்கு ஓவியக்கலை கற்பிக்கத் தக்க சிறந்த அறிவும் மேலான வளர்ச்சியுமுள்ள அறிஞரானார். அவ்வுயர் பதவிக்கு அவரினும் சிறந்த தகுதியுடையவரை எப்பொழுதும் கண்டதில்லை. பிறரைத் தூண்டாமல் தாமாக முயன்று இறங்கிய துறையில் இளைக் காமல் உழைத்துப் போராடித் தடையறுத்துத் தெளிந்த வரைப்போல் அத்துறையைக் கற்பிக்கவல்லவர் வேறு எவர் இருப்பார்?

துணைவி பிரிவால் துன்பம்

நாட்படத் துன்பமற்று இன்புற்று வாழ்ந்துவர ப்ளாக்ஸ்மனுக்கு முடியவில்லை. முதுமைப் பருவம் அடுத்தது. உயிர்க்கு உயிரான வாழ்க்கைத் துணைவி இறந்தாள். அவருக்குத் தாங்க முடியாத துன்பம் உண்டாயிற்று. மேலும் சில ஆண்டுகள் அவர் பிழைத்திருந்தார். அக்காலத்தில் அவர் அமைத்த உருவங்கள் பலரும் கொண்டாடும், "அகில்லீஸ் வட்டணமும் (Shield of Achilles), மைக்கேல் என்னும் பெருந்தூதன் சாத்தானை வெற்றி கொண்ட பாவனையும்" ஆகும். அவர் கைவேலைகளில் இவ்விரண்டும் சிறந்தவைகளாக இருப்பினும் இருக்கும்.

சாந்த்ரி

சாந்த்ரி (Chantrey) என்பவர் இவரைப்போல் அல்ல, நல்ல திண்ணியர். சிறிது குறும்பர். ஆனாலும் உள்ளப்பசை மிகவும் உண்டு. இளமையில் நேர்ந்த துன்பங்கட்கு வருந்தாமல் கடைத்தேறியதைப்பற்றி ஏமாந்திருப்பது அவர் இயற்கை. முதன்மையாய் தன்மானம் உடையவர் என்னும் பற்று அவருக்கு மிகவும் உண்டு. அவர் ஷெப்பீல்டுக்கு அண்மையில் உள்ள நார்ட்டன் என்னுஞ் சிற்றூரில் ஓர் எளிய குடியிற் பிறந்தவர். சிறுவராயிருக்கையில் தந்தை இறந்துபோனார். தாய்க்கு மறுமணம் நடந்தது. பால்விற்று வாழ்க்கை நடத்துவது அவர்கள் குடும்பத் தொழில். பொதிக் கழுதை ஓட்டிக்கொண்டு போய் ஷெப்பீல்ட் என்னும் பக்கத்தூரில் பால் விற்று வருமாறு அவரைத் தாய் அனுப்புவாள். அவர் தொடக்கத்தில் செய்த எளிய வேலை இது. பிறகு கீழான இந்த நிலையில் இருந்து, வரவரத் தன் ஆற்றலால் உயர்ந்து ஓவியக் கலையில் சிறந்த அறிஞரானார்.

பலசரக்குக் கடையில் வேலை

மாற்றாந் தகப்பனுக்கும் அவருக்கும் பிடிக்கவில்லை. அதனால் தாய் அவரை, ஒரு பலசரக்குக் கடையில் வாணிகஞ் செய்து பழகவிட்டாள். அவ்வேலை அவர் மன

திற்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனாலும் செய்யாமல் முடியாது.

ஓவியக் கலை பயிலல்

இவ்வாறு இருக்கையில் ஒருநாள் தெருவிற் செல்லும் போது ஓவிய வேலைக்காரன் ஒருவனுடைய கடைக்குள்ளே பலகணி வாயிலாக எட்டிப் பார்த்தார். அங்கிருந்து சிறந்து விளங்கிய ஓவியங்கள் அவர் கண்களைக் கவர்ந்தன. தானும் செதுக்குவேலை பழகிப் புகழ்பெற்றவராக விரும்பினார். வீட்டிற்குச் சென்று தன் எண்ணத்தைக் கூறினார். பலசரக்குக் கடைக்குப் போவதை நிறுத்திவிடக் கேட்டார். தாய் தந்தையர்கள் உடன்பட்டார்கள். பிறகு அவர் ஏழு ஆண்டுகட்கு உறுதிமொழி எழுதிக் கொடுத்துச் செதுக்கு வேலையும் மூலாம்பூசும் வேலையும் நடந்து வரும் மேற்படி தொழிற்சாலையில் சேர்ந்தார். அச் சாலைத் தலைவன் செய்துவருந் தொழில் ஒன்றன்று. மரப்பொம்மை செதுக்குவதன்றி ஓவியம் அச்சிட்டு விற்பான். சாந்துப் பொம்மைகளும் செய்து விற்பான்.

தானே தொழில் செய்யத் தொடங்குதல்

சாந்த்ரி தாழ்த்தல் இல்லாமல் சிறந்த முயற்சிசெய்து மிகுந்த ஊக்கத்துடன் இரு தொழிலும் பயிலத் தொடங்கினார். ஒழிந்த வேளைகளில் எப்பொழுதும் அவர் உள்ளத்தைச் சிதறவிடாமல் ஓவியங்கள் எழுதியும் உருவங்கள் செய்தும் வளர்ச்சி யடைந்துகொண்டும் வந்தார். இரவினும் வெகுநாழிகை நேரம் விழித்திருந்து வேலை செய்வார். தொழில் பழகுவதற்கு எழுதிக்கொடுத்த காலம் நிறைவேறுதற்கு முன், அகவை இருபத்தொன்று ஆகும் போது, தானே ஓவியவேலை செய்து பிழைக்க எண்ணினார்; தனக்குத் தொழில் கற்பித்தவனுக்கு ரூபா ஐந்நூறு கொடுத்து உடன்படிக்கைக் கட்டுப்பாட்டிலிருந்து விலகினார். அவருக்கு அப்பொழுது இருந்த பொருள் எல்லாம் அவ்வளவுதான். பிறகு முயற்சி செய்து லண்டன் நகரத்திற்குச் சென்றார். அறிவுள்ளவன் எங்கே சென்றாலும்

அறிவுடன்தான் நடப்பான். லண்டனில் அவர் ஓர் ஓவியக் காரனுக்கு உதவியாளராக அமர்ந்தார். ஓய்வு வேளையில் ஓவியம் எழுதவும் உருவங்கள் செய்யவும் பழகி வந்தார். அவர் ஊர் ஊராகத் திரிந்து வேலை செய்து வரத் தொடங்கினர். தொடக்கத்திற் செய்தவேலை ராஜர்ஸ் என்னும் பாவாணருடைய உணவு மண்டப அழகு. பிற்காலத்தில் அவர் அந்த மண்டபத்திற்கு விருந்தினராகச் சென்றிருந்து போற்றப் பெற்றதும் உண்டு. மேற்படி பாவாணர் வீட்டில் வரிசை உணவிற்குச் சென்றிருக்கும் பெரிய மனிதர்கட்கு அங்குள்ள ஓவிய அழகுகளைச் சுட்டி அது முதல் முதல் அமைந்த தன்னுடைய கைத்தொழில் என்று களிப்புடன் கூறுவார்.

பயிற்சியும் தொழிலும்

தொழிலின் பொருட்டு ஷெப்பீல்டுக்குத் திரும்பிப் போயிருக்கையில், பல்வகை ஓவியங்கள் வேண்டியவர்கட்குச் செய்து கொடுப்பதற்குத் தான் தோதாயிருப்பதாக உள்ளூர்ப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்தார். முதலில் எழுதிய ஓவியத்தைக் கத்திமுள் செய்து விற்கும் ஒருவன் பத்தரை ரூபா விலை கொடுத்து வாங்கினன். எண்ணெய்ச் சேர்க்கையால் எழுதிய ஓவியத்திற்கு மிட்டாய்க் கடைக்காரன் ஒருவன் ஐம்பது ரூபாயும் நீண்ட மிதியடி ஒரு சோடியுங் கொடுத்தான். அரச ஓவியக்கலைக் கழகத்தில் அவர் மீளவும் தொழில் பழகுமாறு மீண்டும் லண்டன் நகரத்திற்குத் திரும்பிச் சென்றார். மறுமுறை அவர் ஷெப்பீல்டுக்குச் சென்றபொழுது தம் ஊராரைப் பார்த்து இடுப்புக்கு மேலுள்ள உருவங்கள் செய்தும் ஓவியங்கள் எழுதியும் கொடுப்பதாக அறிக்கை செய்தார். அங்கிருந்து காலஞ் சென்ற குரு ஒருவருக்கு ஊரார் சொற்படி நினைவுக் குறி ஒன்று ஊகித்துச் செய்து முடித்தார். அஃது எல்லா மக்கட்கும் மனநிறைவை அளித்தது.

சாத்தான் தலை

லண்டனில் இருக்கும்பொழுது, ஒரு குதிரை லாயத்தின் மேன்மாடம் அவருடைய ஓவியக்கூடமாக இருந்தது.

அங்கிருந்து அவர் புதுமையாய் அமைத்த உருவத்தை முதன்முதல் வேடிக்கை காட்டினார். அது சாத்தானின் மிகப்பெருந் தலை. சாந்திரியின் வாணாள் இறுதியில் அவருடைய ஓவியக்கூடத்தில் நண்பர் ஒருவர் உலாவும்போது, அந்தத் தலை உருவத்தை ஒரு மூலையிற் கண்டு உற்றுப் பார்த்தார். அப்பொழுது ஓவியராகிய சாந்திரி, "நான் லண்டனுக்கு வந்து முதலிற் செய்தது இந்தத் தலை. கடிதக் குல்லாப் போட்டுக்கொண்டு ஒரு மேன்மாடத்திற் செய்தேன். இரவுப்போதில் விளக்கு ஏற்ற மெழுகுவர்த்தி ஒன்றுக்குமேல் வாங்கத் திக்கில்லை. ஆகவே, வர்த்தியைக் கொளுத்தி என் குல்லாவில் மாட்டிக்கொண்டு அந்த ஒளியில் வேலைசெய்தேன். எவ்விடத்திற்குப் போனாலும் வெளிச்சம் என்னோடு வந்தது," என்று கூறினார். அரசகலைக் கழகத்தில் விழா நடந்தபொழுது இந்தத் தலையைப் பிளாக்ஸ்மன் கண்டு வியப்புற்றார். கிரீனிச் நீர்ப்போர்ப் படையினர் அடைக்கலக் கோயிலில் வைக்கும்படி; போர்க் கப்பல் படைத் தலைவர்கள் நால்வர் சாயல் விளங்கும் அரையுடல் உருவங்கள் நான்கு செய்துகொடுக்கத் தகுதி உள்ளவரென்று புகழ்ந்து பேசினார். இவ்வேலையைக் கண்டு மேலும் இவ்வகை வேலைசெய்து தரும்படி பலருங் கேட்டார்கள். அதனால் சாந்திரி உருவச்சிலைகளில் உள்ளஞ் செலுத்தினார். ஓவியம் எழுதும் முயற்சியை நிறுத்தி விட்டார்.

சாந்திரியின் செல்வம்

இதற்குமுன் எட்டாண்டுக்காலம் சாந்துமெழுகுப் பொம்மைகள் செய்து விற்று அவர் தேடிய பொருள் ஐம்பது ரூபாய்கூட இல்லை. அவர் ஹார்ன் தூக்கின் (Horne Tooke) தலை உருவங்கள் செய்து பெரிய வெற்றியும் புகழும் பெற்றார். அதனால் அவருக்கு மிகுந்த வேலைகள் அகப்பட்டன. அவ்வேலைகளால் 1,20,000 ரூபாக்கள் சேர்ந்தன. இஃது அவரே மதித்தெழுதிய கணக்காகும். இவ்வாறு தம் தளரா முயற்சியால் மேன்மேலுஞ் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்து வந்தார் சாந்திரி.

பொருள் புகழ் அளிக்கும் பொறுமையும் முயற்சியும்

சாந்திரிக்கு நல்லகாலம் உண்டாகத் தொடங்கிவிட்டது. முன்னமே அவர் துன்பப்பட்டு உழைத்து ஒருவாறு பொருள் தேடியிருந்தார். லண்டன் நகரத்தில் மூன்றாவது ஜார்ஜ் அரசருக்குச் சிலை அடிப்பித்து வைக்கும் முயற்சி தொடங்கப்பெற்றது. அச்சமயத்தில் அவ் வேலைக்கு முயன்ற அறிஞர்கள் பதினறுபெயர். அவர்களில் சாந்திரிக்கு வேலை கிடைத்தது. அதன்பின் சில ஆண்டுகள் சென்றன. இப்பொழுது லிச்வீல்டு தலைவர் கோயிலில் பிள்ளைகள் உறங்கும் பாவனையாக வைத்திருக்கின்ற உருவங்களை உண்டாக்கத் தொடங்கினர். அந்த அழகிய பொம்மைகளில் ஒன்பான்வகைச் சுவைகளில் ஒன்றாகிய அருள் மிகுந்து விளங்குகின்றது. அதை அவர் அமைத்த நாள்முதலாக அவருக்கு மேன்மேலும் பெருமையும் புகழுஞ் செல்வமும் உண்டாயின. அவரை இவ்வாறு பெருமை அடைவித்த கருவிகள் பொறுமையும் முயற்சியும் நிலைகுலையாக் கடைப்பிடியுமே.

குறிப்புப் புத்தகம்

அறிவு அவருக்குப் பிறவிப்பண்பு. அதனுடன் திண்ணறிவும் இருந்தது. அதனால் அவர் தெய்வத்திருவருளால் அமைந்த அந்த அறிவைப் பயன்படுத்திப் பெருமை பெற்றார். ஊராரைப்போல அவரும் முன் அறிவு உள்ளவர். சூழ்ச்சியுடையவர்; அவர் இத்தாலி நாட்டிற்குப் பயணஞ் சென்றபொழுது, ஒருநாளும் கைவிடாதிருந்த குறிப்புப் புத்தகத்தில் ஓவியக்கலைக் குறிப்பு, அன்றன்று ஆகுஞ்செலவு, வெண்கல்லின் காலவிலை முதலிய பலவகைச் செய்திகளும் எழுதிவைத்திருந்தார்.

சாந்திரியின் இயல்பு

அவருக்குச் சுவையுணரும் நா அறிவு அவ்வளவு சிறந்ததன்று; பொதுவானதுதான். மற்றொரு கருவியால் அன்று; அந்தப் பொதுவான அறிவினலேயே அவர் அமைத்த புதுமையான பொம்மைகட்கு அவ்வளவு

பெருமை உண்டாயிற்று. ஹான்ஸ்வார்த் கோயிலில் அவர் செய்துவைத்திருக்கும் வாத்பொம்மை எளிதானதா? அஃது ஓவியம் அமைத்து அமைத்துக் கைதிருந்திய ஒருவர் செய்ததெனத் தானே தோன்றும். ஆனாலும் மிகப் புதுமையான வேலைப்பாடு அதில் ஒன்றும் இல்லை.

3343

தம் இனத்தைக் காக்கும் இயல்பு

சாந்திரி தம்மைப்போலும் ஓவியர்கள் வாழ்க்கைக்குப் பொருளற்றுத் தொல்லைப்படும்போது, குறைதீர்ந்து மனங் குளிரவேண்டியவாறு பொருள் உதவிசெய்து நல்வினை தேடிக்கொள்வார். ஆனாலும் ஊரார் புகழ அவர் வெளிப்படையாக ஒன்றுங் கொடுக்கிறதில்லை. கொடுப்பதைப் பிறர் அறியாதவாறு மறைமுகமாகக் கொடுப்பார். அவர் பிரித்தானியாவில் ஓவியக்கலை வளர்ச்சிக்காகத் தம் பொருளிற் பாதிக்குமேல் ராயல் அக்காடெமி என்னும் கலை வளர்ச்சிக் கழகத்திற்கு எழுதிவைத்தார்.

டேவிட் உவில்கி

இவரைப்போலவே டேவிட் உவில்கி என்பவரும் வாழ்நாள் இறுதிவரையில் உள்ளம் உவந்து ஒய்வற்றுக் கைத்தொழில் முயற்சி செய்தவர். ஸ்காத்லாந்தில் அவர் ஒரு ஆசிரியர் மகன். சிறு பருவத்திலேயே அவர் உள்ளம் ஓவியக்கலையிற் சென்றதெனத் தோன்றியது. அவர் பாடத்தை வருந்திப் படிக்கிறதும் இல்லை. படிக்கிற படிப்பு மனதில் நிற்கிறதும் இல்லை. மனிதர் முகங்களையும் வேறு உருவங்களையும் அலுப்பற்று எப்பொழுதும் எழுதிக் கொண்டிருப்பார். ஒன்றும் பேசாமல் இருப்பது அவருடைய வழக்கம். இளமையிலேயே அடங்கியிருக்கத் தொடங்கிய அவருடைய ஊக்கம் எல்லாம் ஒரேதுறையிற் குவிந்துசென்றது. அவர் வாணாள்முழுவதும் அஃது அவருக்குச் சிறந்த இயற்கையாய் அமைந்தது. அவர் எங்கு எங்கு ஏகினாலும் எங்கு எங்கு இருந்தாலும் ஓவியம் எழுத நேரம் பார்த்துக்கொண்டே இருப்பார். எழுதக் கடிதம் வேண்டும் என்று அவருக்குக் கட்டாயம் இல்லை. கண்

ணுக்கு எதிர்ப்படுவதெல்லாம் அவருக்குக் கடிதமே. இருக்கிற வீட்டுச் சுவரானாலும் சரி; உலாவிவரும் கடற்கரை மணலானாலும் சரி; வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதுபோல, டேவிட் உவில்கிக்கு எவ்வகைக் கருவியும் தூரியக்கோல் ஆகும். கியாத்தோவிற்கு எப்படியோ, அப்படியே உவில்கிக்கும் தூரியக்கோல் கரிக்கட்டி; பக்குவமான கடிதம் செப்பமான கல்; எழுதப்பெறும் உருவம் வழியில் எதிர்ப்படும் கந்தை கட்டிய இரவலன்.

சென்றவிடம் எல்லாம் ஓவியம்

அவர் எவர் வீட்டுக்காவது சென்றிருந்தால், திரும்பிப்போனபின் அவ்வீட்டுச்சுவரில் அவர் கைக்குறியைக் காணலாம். வீட்டுக்காரிகள் அனைவரும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள் அல்லர். வீட்டைப் பெருக்கி அழகுபடுத்திக் கண்ணுக்குக் காட்சியாய் வைத்திருக்கும் பெண்ணரசிகளும் சிலர் உளரன்றோ? அவர்கட்குச் சுவரிற் கீறியிருப்பதைக் காணப்பொறுக்காது. கீறலைக் கண்டு அவரை நொந்துகொள்வதும் உண்டு.

தந்தையும் மகனும்

அவர் கதையை மேலுஞ்சொன்னால் பெருகும், சுருக்கிச் சொல்லுகிறேன்: ஆசிரியராகிய அவருடைய தந்தை ஓவியக்கலையை பிறவிப் பகையாகக் கருதுபவர். அது தீவினை என்பது அவர் கொண்ட முடிவு. மகன் மனமோ அக்கலையில் அழுத்தமாகப் பதிந்திருந்தது. அவ்வுறுதியைக் கலைக்கும்வண்ணம் தந்தை சொன்ன அறிவுரைகள் எதுவுமே பலனளிக்கவில்லை. அவர் உறுதியாக நின்று, ஓவியம் எழுதி எழுதித் தேர்ச்சிபெற்று அறிஞரானார். ஓவியக்கலையில் தேர்ச்சிபெறுவது எளிதன்று. செங்குத்தான மலைமீது ஏறுவதுபோன்றது. இடையே நேர்ந்த துயர்களை நினைத்து அவர் உள்ளம் தளர்ச்சியடையவில்லை; துணிவுங் குன்றவில்லை. மனத்திடனை அழியவிடாது வருந்தி முயற்சி செய்துகொண்டே இருந்தார்.

முதலில் தோல்வி

முதலில் எடின்பர்க் நகரத்தில் உள்ள ஓவியக்கலைக் கழகத்திற்சேர எண்ணி அவர் விண்ணப்பஞ் செய்தார். அங்கு அவர் எழுதிக்காட்டிய ஓவியங்கள் நன்றாக அமைய வில்லை. தவறுகள் மிகுதியாக இருந்தன. ஆகவே, அறிஞர் குழுவினர் அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. சேர்த்துக்கொள்ளவில்லையென்று அவர் தளர்ச்சியடைந்து அத்துடன் விட்டுவிடவில்லை. எழுதி எழுதிக் கைதிருந்தப் பெற்றார். ஆயினும், அவர் தேர்ச்சியடைந்து முன்னுக்கு வர நாட்சென்றது. அவர் இடையறாது கருத்துடன் மனித உருவை எழுதிப் பயின்றுவந்தார். அடுத்து முயன்று பழக்கம் பண்ணிவந்தால் வெற்றி உண்டாகாமல் போகாதென்று உறுதியாய் நம்பி, ஓவியக்கலையில் உள்ளம் ஒன்றிப் பயின்றார். இளைஞர் பலர் தம்மைச் சிறந்த அறிவாளிகள் என்று எண்ணி முறைவிலகி மனம்போன போக்கில் எல்லாம் போவார்கள். அவர்கட்கு வழி ஒன்றும் இல்லை. அவர்கள் முயற்சி வேளைக்கு ஒருவகை. ஒருநாள் ஏறும்; ஒருநாள் இறங்கும். உவில்கியின் இயற்கை அஃதன்று. அவர் முயற்சி எப்பொழுதும் இளைப்புறுதிருந்தது. நெடுநாள்வரையில் ஓயாது உழைத்து நினைத்த செயலை முடித்தார். பின்பு அவர் இதை நினைந்து, தான் வெற்றிபெற்றது, தனக்குச் சிறந்த அறிவாற்றல் இருந்ததனால் அன்று. எத்தகைய இடையூறு நேரிடினும் எடுத்த செயலைக் கைசோரவிடாமல் தொடுத்து முயன்று முடித்ததனாலே தான் என்று பெரும்பாலுஞ் சொல்லுவார். "இடையறுமல் எப்பொழுதும் என் தூரியக்கோலை இயக்கிக்கொண்டு வந்த கருவி ஒன்றே ஒன்று—அது தளரா முயற்சி" என்றும் அவர் சொல்வார்.

லண்டனில்

எடின்பர்க் நகரத்தில் அவருக்குச் சில நன்கொடைகள் கிடைத்தன. அவ்வகை நன்கொடைகள் வாழ்க்கைக்குப் போதியதன்று. ஒருவேளைக்கு அகப்படும் ஒரு வேளைக்கு அகப்படமாட்டாது. மனிதரைப் பார்த்து

ஓவியம் எழுதி விற்றால் அதிகப் பயன் உண்டு. அந்த வருமானத்திற்கு இடையூறு இல்லை. ஆகவே அவர் இவ்வகை ஓவியத்துறையில் இறங்க நினைத்தார். நினைத்தும் இறுதியில் அவருக்குப் புகழ் உண்டான துறை எதுவோ அதிலேயே அச்சமற்று இறங்கினார். பீத்லெஸ்ஸி சந்தைப் (Pitlessie) படத்தை எழுதினார். அவர் துணிவு இம்மட்டில் நின்றுவிடவில்லை. ஓவியக்கலை கற்கவும் ஓவியம் எழுதிப் பயன்பெறவும் லண்டன் நகரம் மிகவும் தகுந்த இடமாதலால் அங்கே போக எண்ணினார். புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார். தன் நிலைமைக்குத் தகுந்தபடி ஓர் எளிய விடுதியைக் குடிக்கூலிக்குப் பிடித்துத் தங்கினார். அங்கு அவருக்குச் செலவு கிழமை (வாரம்) ஒன்றுக்கு ஒன்பது ரூபா. அவ்விடுதியில் இறங்கியிருக்கும்பொழுது சிற்றூரில் அரசியல் முறை பேசுவோரின் படத்தை எழுதினார்.

செய்வன திருந்தச்செய்

இந்தப் படம் நன்கு அமைந்தது. இதைக் கண்டு சிலர் அவரைக்கொண்டு ஓவியம் எழுதுவித்தார்கள். ஆயினும் உவில்கி நீண்டகாலம் வறியவராகவே இருந்தார். அவர் படங்கள் விற்றுத்தேடிய பொருளோ மிகச் சிறிது. ஒவ்வொரு ஓவியமும் எழுதிமுடிக்கச் சென்ற காலம் மிகுதி; உழைப்பும் அதிகம். பல்லாண்டுகள் வரையில் அவர் வருவாய் மிகச் சிறிதாயிருந்தது. அவர் எந்த ஓவியத்தையும் முன்கூட்டியே கருத்தாக எண்ணமிட்டுச் சீர் தூக்கித் துன்பப்பட்டு எழுதிப்பார்ப்பார். அவர் பதைத்துப் பதறிப் ப்ரபரவென்று ஒன்றையும் எழுதி முடிக்கிறதில்லை. பல படங்களைப் பதறாமல் ஒழுங்காக எழுதி, விளங்காத உறுப்புக்களை விளக்கி; விளக்கினவைகளைப் பின்னும் விளக்கி ஆராய்ந்து பார்த்துக் குறை களைந்து, சீராகத் திருத்தி வெளியிடப் பல ஆண்டுகள் சென்றன. ரெய்னால்ட்ஸைப்போல் உவில்கியும் தலைமேற்கொண்டு நடந்த அறமொழி இது: "உழை! உழை! உழை.!" இவ்விருவரும் உளறுகிற ஓவியக்காரர்கள் பெயரில் தமக்கு வெறுப்பு மிகுதி என்று வெளியிட்டனர். பேசுகிறவர்கள்

விதைத்தாலும் விதைப்பார்கள்; விளைவை அறுப்பவர்களோ பேசமாட்டார்கள். "நாம் எப்பொழுதும் யாதாயினும் ஒன்றைச் செய்துகொண்டு வரக்கடவோம்" என்று கூறி, அவர் அலைப்புகிறவர்களை அதட்டாமல் அதட்டுவார். சோம்பித் திரிவாரை அவ்வாறு செய்யாமல் தடுப்பார்.

அறிந்தது சிறிது; அறியாதது பெரிது

அவர் ஒரு சமயத்தில் தம் நண்பர் கான்ஸ்டபில் என்பவரோடு உரையாடிக்கொண்டிருக்கையில், ஸ்காட்லாண்டிலுள்ள ஓவியக்கலைக்கழகத்தில் தனக்குக் கலை பயிற்றிய கிரகாம் (Graham) "உங்களுக்கு அறிவு இருந்தால் முயற்சியால் அது தேறும்; அறிவு இல்லாவிடில் அந்தக் குறை முயற்சியால் நிறையும்" என்று ரெய்னல்ட்ஸ் கூறிய மொழியை மாணவர்கட்கு எடுத்துரைப்பார். அதைக் கேட்டு எனக்கு அறிவு இல்லை என்று அறிந்தேன். ஆகவே, மிகுந்த முயற்சி செய்ய முடிவுசெய்தேன்," என்று சொன்னார். மேலும், அவர் கான்ஸ்டபிலை நோக்கி, "லண்டன் நகரத்தில் என் நண்பர்களாகிய லின்னெலும் (Linnell), பர்னெத்தும் (Burnett) ஓவியக்கலையைக் குறித்து உரையாடுந்தோறும், அவர்கள் உரையாடல் முழுமையுங் கருத்துடன் கேட்க, நான் அவர்கட்கு அண்மையில் சென்றிருப்பது வழக்கம். ஏனென்றால் எனக்குத் தெரிந்தது தினை அளவு; அவர்கள் அறிந்ததோ பனை அளவு" என்று கூறினார். இவ்வாறு அவர் கூறியது பொய்யன்று, மெய்தான். எப்பொழுதும் அடக்கமாயிருப்பது அவர் வழக்கம்.

உவில்கியின் உயரிய பண்பு

அரசியல் முறை பேசும் சிற்றூர் மக்கள் (Village Politicians) படத்தை மான்ஸ்பீல்ட் (Mansfield) பெருமகனுக்கு முந்நூறு ரூபாய்க்கு விற்றார். இத்தொகை கிடைத்தவுடன் வீட்டில் தாய்க்கும் உடன் பிறந்தாளுக்கும் நன்கொடையாகத் தலையணி, மேலாடை, ஆடை முதலியவைகளை வாங்கி அனுப்பினர். தன்னுடைய சொந்தச் செலவைச் சிறிதும் பாராட்டவில்லை. உவில்கி இளமைக்

காலத்தில் வறிஞர். வறிஞராகி மிகக்குறைந்த செலவு செய்யப் பழகியிருந்தும் சமயம் அறிந்து பிறருக்குப் பொருள் உதவிசெய்யும் நற்பண்பும் அவருக்கு அமைந்திருந்தது. இச்செய்தி ஆபிரகாம் ரேம்பாக் (Abraham Raimbach) என்னும் ஓவியர் எழுதிய தன்வரலாற்று நூலில் அங்கங்கே சில மொழிகளால் தெரிகின்றது.

உவில்லியம் எத்தி

ஓவியக்கலையில் இளைப்பற முயன்று, எடுத்த செயலைத் தணியா ஊக்கத்துடன் செய்துமுடித்த மற்றொரு புகழாளர் உவில்லியம் எத்தி (William Etty). அவர் தந்தை, யார்க் (York) நகரத்தில் மசாலைவடை பலசம்பாரம் விற்றுப் பிழைத்தவர். தாய் கயிறு திரித்து விற்ற ஒருவருடைய மகள். அரிய திடமனதும் நெறிகுறியும் உள்ளவள். சிறுபருவந்தொடங்கி அவருக்கு ஓவியம் எழுதுவதில் நாட்டம் உண்டாகியிருந்தது. சுவர், அடித்தளம் இருக்கை இவைகளில் அவர் எழுதிய உருவங்கள் நிறைந்திருந்தன. முதலில் அவர் ஓவியம் எழுதப் பயின்ற எழுதுகோல் ஒரு காசு விலைபெறக்கூடிய கற்பலகைக்குச்சி. பிறகு நிலக்கரித் துண்டு, கரிக்கட்டி, அகப்பட்டது யாதாயினும் சரி அவருக்கு எழுதுகோலாகப் பயன்பட்டது. அவர் தாய்க்கு ஓவியக்கலை தெரியுமா? தெரியாது. அவள் அவரை அச்சிடுதொழிலில் பழகவிட்டாள். ஒழிந்தவேளையில் விட்டுவிடாமல் ஓவியம் எழுதிப் பயின்றுகொண்டுவந்தார். அச்சிடுதொழிலில் பழகக் குறித்தகாலம் நிறைவேறியபின், அவர் தம்-மனப்போக்கில் ஓவியத்துறையில் அல்லாமல் மற்றொரு துறையில் இறங்குவதற்கு விரும்பவில்லை. இஃது அவருடைய முடிவு. அவர் மனதிற்கு இசையச் சிற்றப்பனும் தமையனும் அவருக்கு இந்தப் புதுத்துறையில் பொருளுதவி செய்ய உடன்பட்டார்கள். அதற்கு அவர்கள் தக்கவர்கள்தாம். அரச கலைக்கழகத்தில் சேர்ந்து கலை பயில்வதற்கு அவர்கள் அவருக்குப் பொருள்கொடுத்து உதவினார்கள். கலை பயின்றுவரும் பொழுது அவரோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள் "இவர்

அறிவற்றவர் அல்லர்; மெதுவாக இயங்கும் அறிவினையுடையவர், துன்பம் உடையவர், எந்நாளும் புகழுடையார்" என்று எண்ணமிட்டார்கள். ஆனாலும் இளைப்பற உழைக்கும் சிறந்த பண்பு அவர் வழிப்பட்டிருந்தது. அவர் முயற்சியாய்ப் பாடுபட்டுப் பயின்று வரவரத் தேறி மதிப்புயர்ந்து சிறந்து விளங்கினர்.

மார்த்தின்

அறிஞர் பலர் வறுமையில் அடிபட்டும் துணிவு குன்றாமல், தொடங்கிய செயலை முழுதும் நிறைவேற்றி வெற்றி பெற்றார்கள். வறுமையின் துன்பம் தாங்கமுடியாமல் எவ்வளவுபேர் எடுத்த முயற்சியைக் கைசோரவிட்டு இழிவுற்றார்களோ அறியோம். நெடுநாள் வரையில் மார்த்தினை (Martin)ப்போல் அவ்வளவு துன்பப்பட்டவர்கள் இலர். அவர் முதல்முதல் பெரிய உருவம் ஒன்றைச் செய்து முடித்தபொழுது ஒருநாள் அல்ல; பலநாள் பட்டினியிருந்து, உடல் மெலிந்து வருந்தும் துன்பத்திற்கு ஆளானர். ஒருநாள் அவர் கையில் இருந்த பணமெல்லாம் செலவாகி அரை ரூபாயே எஞ்சியிருந்தது. அது பளிச்சென்று விளங்கிய அரைரூபாய். அதன் மினுக்கை விரும்பி அதைச் செலவிடாமல் வைத்திருந்தார். அதைப் பாதுகாப்பாக வைத்திருந்து பார்த்தால் பசிதீருமா? ஒருநாள் பசித்துன்பத்தைத் தாங்க அவரால் இயலவில்லை.

ஏமாற்றம்

அந்த அரைரூபாயைக் கொண்டுபோய் ரொட்டிக் கடையிற் கொடுத்து ஒரு ரொட்டி வாங்கிக்கொண்டு திரும்புவதற்கு அடி எடுத்துவைத்தார். ரொட்டிக்காரன் சடக்கென்று தாவி ரொட்டியைப் பறித்துக்கொண்டு ரூபாயை வீசிவிட்டான். மினுக்கென்று விளங்குவதைப் பார்த்துச் செலவிடாது வைத்திருந்த அந்த ரூபாய் அரைக்காசுக்கும் அந்தச் சமயத்தில் உதவாதுபோயிற்று. அது செல்லாக் காசு. விடுதிக்குத் திரும்பிப்போய்ப் பெட்டியைத் திறந்து பார்த்தார். மிகச்சிறிய ரொட்டித்துணுக்கு அகப்பட்டது. அதைத்தின்று அன்று பசியாறினர்.

மனவுறுதியின் மாண்பு

மன உறுதி இருந்தால் எந்தச் செயலையும் செய்து வெற்றிபெறலாம். அவரைத் தளரவொட்டாது தாங்கியது அவருடைய மனவுறுதிதான். மனவுறுதியின் உதவியால் தளரா முயற்சிசெய்து எண்ணிய காரியத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். கைமேற் பயன்பெறவில்லையென்று அவர் மனம் பதைக்கவில்லை. ஆற்றல் குன்றவில்லை; பயன் விளையுங்காலம் வரும் என்று பொறுத்து உழைத்துக் கொண்டுவந்தார். சிலநாட்கள் சென்று தாம் எழுதிய படத்தை ஊர்புகழக் காட்டுஞ்சமயம் வாய்த்தது. அன்று முதல் அவர் புகழ்பெற்றவரானார். ஒருவருக்கு இயற்கையறிவும் அவ்வறிவுக்கு முயற்சித்துணையும் இருந்தால் எத்தகைய இடையூறு நேரிடினும் அந்த அறிவு அவரைத் தலை காக்கும். தகுதி உடையவர்கட்கு நாட்சென்றாவது சிறப்பு உண்டாகாமற்போகாது. இதை மற்றும் பலர் வரலாற்றாலும் இவர் வரலாற்றாலும் தெளிவாக உணரலாம்.

ப்யூஜின்

ஓவியக்கலையில் மனம் செல்லாதவனை மிகுந்த கருத்தோடும் காதலோடும் முறைமையாய்ப் பயிற்றிப் பண்படுத்தினாலும், அவன் ஒருபொழுதும் அறிஞன் ஆகான். ஓவியப்புலவன் முதன்மையாய்த் தன் முயற்சித் துணையாற் கடைத்தேறவேண்டும். சிறந்த பயிற்சியுடையவர்களாகும் எல்லோரும் இவ்வாறே. சிறுபருவந் தொடங்கித் தன் தந்தையின் தொழிற்சாலையில் பயின்ற பியூஜின் (Pugin) பொதுவாய் வழங்கும் முறைப்படி சிற்பக்கலையைத் தன்னால் முடிந்தமட்டும் கற்றுத்தெளிந்தார். கற்றுத்தெளிந்தும் கற்றது சிறிது என்றும், மீளவும் தொடங்கி முறைமையாய் மெய்வருந்தி உழைத்துத்தேறுவது இன்றியமையாதது என்றும் உணர்ந்தார். உணர்ந்து காவெந்து பூம்பொழிலில் (Covent Garden) உள்ள அரங்கசாலையில் கூலிக்குத் தச்சுவேலை செய்யத் தொடங்கினார். முதலிற் பெரும்போக்கான வேலைகளைச் செய்து, கைதேறத்தேறச் சிறந்த வேலைகளைச் செய்யத் தொடங்கினார். அவர் இவ்

வாறே வேலையிற் கசடறப்பயின்று சிற்ப நுட்பங்களில் உள்ளம் வைத்து உழைத்துவந்தார். இதற்குப் பெரிய அரங்கசாலையில் உள்ள பலவகைக் கைத்தொழில்கள் மிகவும் உதவியாகவிருந்தது.

மரக்கலப் பயணம்

அவ்வாண்டு கூத்துப் பொழுதுபோக்குக் கழிந்தபின் அவர் பாய்மரக்கலம் ஒன்றை லண்டன் துறைமுகத்திலிருந்து பிரெஞ்சுத் துறைமுகங்கள் சிலவற்றிற்குச் செலுத்திக்கொண்டு சென்றார். போகும்பொழுது சிறிது வாணிகமுஞ்செய்து ஊதியமும் பெற்றார். சமயங் கிடைக்கும் பொழுதெல்லாம் கரையேறி அங்கங்கேயுள்ள பழையகட்டிடங்களையும் முதன்மையான கோவில்களையும் எழுதிக் கொண்டுவருவார். பிறகு அவர் இந்தக் காரியத்தின் பெயரால் ஐரோப்பாவில் சில இடங்களுக்குப் பயணம்போய்த் திரும்பும்பொழுது எழுதிய ஓவியங்களைச் சுமைசுமையாய்க் கொண்டுவருவார். இவ்வாறே அவர் விட்டுவிடாது துன்பப்பட்டு உழைத்து மேன்மையும் புகழும் பெற்றார். அவர் உழைத்த உழைப்பிற்கு அது தகுந்த பயனேயாகும்.

ஜார்ஜ் கெம்பு

ஜார்ஜ் கெம்பும் (George Kemp) இத்துறையில் வருந்தி உழைத்தவரே. எடின்பர்க் (Edinburgh) நகரத்தில் இருக்கும் அழகிய ஸ்காட் நினைவுக்குறியை அமைத்த சிற்பி அவரே. அவர் தந்தை பெந்தலாந்து மலையின் தென் சரிவில் ஆடு மேய்த்துக் காலந்தள்ளிய ஏழை இடையன். மக்கள் போக்குவரத்தில்லாத அந்த இடைச்சேரியில் மனிதர் கைத்தொழிலால் அமைந்த சிறந்த கட்டிடம் முதலியவைகளைக் கண்டு வியந்து எண்ணமிடும் நல்வினை அவ்விளைஞருக்கு இல்லையே. அவர் தகப்பன் ஒரு வேளாளனுக்கு வயலில் ஆடுகளைக் கிடைமறித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் மேற்படி வேளாளன் அந்தச் சிறுவனிடம் ஏதோ செய்தி சொல்லி ரோஸ்லின் (Roslin) நகரத்திற்கு அனுப்பினான். அப்பொழுது அவருக்கு அகவை பத்து. அங்

குள்ள சிறந்த அரணையும் கோயிலையும் கண்ட காட்சியை அவர் ஒருநாளும் மறக்கவில்லை. அஃது அவர் உள்ளத்தில் ஓவியம் எழுதினாற்போற் பதிந்திருந்து சிற்ப வேலை பழகும் அவாவை எழுப்பியது. தச்சுவேலை பழகினால் அவ்வவாவிற்கு உதவியாக இருக்கும் என்று எண்ணினார். தன் தந்தையை வருந்திக் கேட்டார். தந்தை அவரைப் பக்கத்து ஊரில் இருந்த ஒரு தச்சனிடத்தில் வேலை பழகுவதற்கு விட்டார். குறித்தகாலம் வரையில் அத்தச்சனிடத்தில் தொழில் பயின்று தெளிவடைந்த பின் ஏதேனும் வேலை அகப்படும் என்று கலாஷீல்ஸ் (Calashiels) என்னும் நகரத்திற்குச் சென்றார்.

வழியில் உதவி

தொழிற் கருவிகளைக் கட்டிச் சுமந்துகொண்டு ட்வீத் (Tweed) என்னும் ஆற்றையடுத்த பள்ளத்தாக்கு வழியாகச் செல்லும்போது எலிபாங்கு (Elibank Tower) கோபுரத்தின் அண்மையில் ஒரு வண்டி அவருக்கு முந்திச் சென்றது. வண்டிக்காரன் வண்டியை நிறுத்தினான். சிறுவனைப் பார்த்து, 'நீ எவ்வளவு தொலை போகிறாய்?' என்று கேட்டான். சிறுவன், 'கலாஷீல்ஸ் நகரத்திற்குச் செல்லுகிறேன்,' என்றான். 'அவ்வாறாயின் ஏறிக்கொள்; என்னுடன் உட்கார்ந்திரு; அந்நகரத்திற் கொண்டுபோய் இறக்கிவிடுவேன்,' என்று கூறி ஏற்றிக்கொண்டான். வண்டிக்குள் இருந்த தலைவர் சொல்லியே வண்டிக்காரன் இளைஞனை ஏற்றியிருப்பான். அதற்கு ஐயம் இல்லை. உள்ளத்தில் இரக்கம் உள்ள அத்தலைவர் மற்றெவரும் அன்று; திரு வால்த்தர் ஸ்காத் (Sir Walter Scott). அவர் ஸெல்கர்க்ஷீயர் மாகாணத்தின் அறப்பெருஞ் செயலாளர். அவர் அப்பொழுது தம் அலுவலின் பொருட்டு அவ்வழியே சென்றார்.

சிற்பக்கலையில் நோக்காதல்

கெம்பு, கலாஷீல்ஸ் நகரத்திற் போய்ச் சேர்ந்து வேலை செய்து வரும் நாளில் மெல்ரோஸ், ட்ரைபர்க், ஜெட்பர்க் மடங்களை அடிக்கடி போய்ப் பார்த்துக் கருத்தில் பதித்துக் கொண்டு வந்தார். சிற்பக்கலை அவா அவருக்குத் தீரா

அவாவாக இருந்தது. அவர் தச்சுவேலை செய்து வட இங்கிலாந்தில் பல இடங்களைப் போய்ப் பார்த்தார். உயர்ந்த வகையான சிங்கார மாளிகை முதலிய கட்டிடங்களைக் காணுஞ் சமயங்களில் அவைகளை ஒருபொழுதும் எழுதாது விட்டதில்லை. ஒருமுறை லங்காஷயர் நாட்டில் வேலைசெய்து வருகையில் யார்க் நகரத்திற்கு ஐம்பது மைல் தொலை கால் நடையாகச் சென்று அங்குள்ள கோயிலை (அத்தியட்சர் ஆலயம்) முழுதும் நன்றாகப் பார்த்து ஒழுங்காக எழுதினார். ஒரு கிழமை சென்று மீளவுங் கால்நடையாகவே திரும்பினார்.

பலவிடங்களில் சுற்றுதல்

பிறகு கிளாஸ்கோ நகரத்திற்குச் சென்றார். நான்கு ஆண்டுகள் தொழில் செய்தார். ஒழிந்த வேளைகளில் அங்குள்ள சிறந்த கோயில்களை உள்ளம் பொருந்தப் பார்த்து எழுதி முடித்தார். அதன்மேல் அவர் இங்கிலாந்திற்கு மீளவும் ஒருமுறை சென்றார். தென்னாடுகளில் வேலை செய்து திரிந்தார். இம்முறை காண்டர்பரி, (Canterbury) வின்செஸ்தர் (Winchester) திந்தர்ண் (Tintern) என்னும் இடங்களில் உள்ள கோயில்களையும் மற்றும் உள்ள புகழ்பெற்ற இடங்களையும் பார்த்து ஓவியம் எழுதினார். 1824-ம் ஆண்டு அவர் இதன் பொருட்டே ஐரோப்பா செல்லக் கருதிப் புறப்பட்டார். அங்கேயும் தொழில் செய்து பிழைப்பதே அவர் நோக்கமாகும். பொலோனிற் சேர்ந்து, அப்பிவில், பொவே இந்த இரண்டு இடங்களையும் பார்வையிட்டார். பாரிசிற் போய் இறங்கிச் சில கிழமைகள் அங்கிருந்து அங்கங்குள்ள வியத்தகு கட்டிடங்களைக் கூர்ந்து பார்த்து ஓவியம் எழுதினார். அவர் தச்சு வேலையில் வல்லவர். முதன்மையாய்ப் பொறிக்கலை நுட்பம் உணர்ந்தவர். ஆகவே சென்றவிடங்களிலெல்லாம் அவருக்குத் தடையறத் தொழில் படிந்தது. சிறந்த பழங்காலத்துக் கூரிய கோபுரங்களமைந்த சிற்பக்கலைக் கட்டிடங்களைக் கண்ட இடங்களில் பக்கத்தில் இருந்து தொழில் செய்வார். ஒழிந்த வேளைகளில் அக்கட்டிடங்களைப் பார்வையிட்டு

ஓவியம் எழுதுவார். தொழில் செய்வதிலும் வழிச்செலவிலும் ஓவியப் பயிற்சியிலும் ஐரோப்பாவில் ஓராண்டு சென்றதன்மேல் அவர் ஸ்காத்லாந்திற்குத் திரும்பினார். ஓவியக்கலையை அவர் விட்டுவிடாமற் கற்றுக்கொண்டு வந்து, வடிவங்கள் எழுதுவதிலும், நாட்டுக்காட்சிகளை எழுதுவதிலும் சிறந்தவரானார்.

அழிந்துபோனதில் இன்பம்

அழிந்து கெட்டுப்போன மெல்ரோவின் படமே அவருக்கு மிகவும் இன்பமானது. அவர் அக்கட்டிடத்தின் படத்தைப் புதுப்பித்துப் பல படிகள் எழுதினார். அவற்றுள் ஒன்று அக்கட்டிடத்தை அதன் அழகிய நிலைமையில் தோற்றுவித்தது. பின்னர் அதைப்பார்த்து, உலோகத்தில் அதன் உரு செதுக்கப்பட்டது. அன்றியும் புதுமையான கட்டிடங்களின் முன்மாதிரி கற்பித்துக் கொடுக்கும் வேலையும் அவருக்குப் படிந்தது. பிரித்தன் (Brittons) என்பவர் பழைய கோயில்களைக் குறித்து உணர்த்திய முறைப்படி, எடின்பர்க் நகரத்தானாகிய ஓவியன் ஒருவன் செதுக்கத் தொடங்கின வேலையை ஒழுங்காக முடித்தற்கு உதவியாகக் கெம்பு படம் எழுதிக்கொடுத்தார்.

பயனை நோக்காத உழைப்பு

இவ்வேலை அவர் உள்ளத்திற்கு இன்பமாயிருந்தது. இதில் அவர் மிகவும்ஊக்கத்தோடும் முயற்சியோடும் உழைத்தார்.அதனால் வேலை விரைந்து நடந்தேறியது. இவ்வேலையினால்அவருக்கு ஸ்காத்லாந்து நாட்டில் வழியில் நல்ல உணவு உண்டா? இல்லை; நாடோடித் தச்சனைப்போல நாள் கழித்தார். பாதிக்குமேல் கால்நடையாகச் சென்றார். இப்படிப் போகையில் ஓவியங்களும் எழுதி முடித்தார். அவ் ஓவியங்களோ எளிதானவைகளல்ல. அவைகள் சிறந்த புலவர் கையால் அமைய நேரிட்டிருந்தால், அப்புலவர்கட்குச் சிறந்த பெரும் புகழ் உண்டாக்கத்தக்கவைகள். அவ்வேலையைத் தொடங்குவித்தவர் விரைவில் இறந்துபோனார். அதனால் அது அவ்வளவில் நிறுத்திவிடப்பட்டது. கெம்பு

வேறு வேலை பார்த்தார். இவர் வாய்திறந்து பேசுகிறதே இல்லை. அடக்கம் இவருடைய பழக்கம்.

இன்பச்செய்தியும் இறப்பும்

ஸ்காத் நினைவுக்குறி சிறந்ததாக அமைத்துக்கொடுக்கும் அறிஞருக்கு இவ்வளவு நன்கொடை கிடைக்கும் என்று உட்சங்கத்தாரால், அறிக்கை பிறந்தபோது இத்துறையில் கெம்பு சிறந்தவர் என்று எவருக்குந் தெரியாது. இந்நன்கொடையை நாடிப் பலபேர் முயற்சி செய்தார்கள். அவர்களிற் சிலர் பழங்காலச் சிற்பத்துறையில் ஒப்புயர்வு அற்றவர்கள் என்று பெயர் எடுத்தவர்கள். இத்திறமையுடையோர் எழுதியனுப்பிய ஓவியங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததென்று அவையினர் உள்ளம் ஒத்து வியந்து தெரிந்தெடுத்தது கெம்பு எழுதிய படமே. அவையிற் பிறந்த இந்த முடிவு ஜார்ஜ் கெம்பு காதுக்கு எட்டிய பொழுது அவர் பலமைல் தொலைவில் ஏயர்ஷீயர் மாகாணத்தில் கில்வின்னிங் மடத்தில் ஓவியம் எழுதிக்கொண்டிருந்தார். அந்தத் தீவினையாளனை எண்ணிப்பார்க்க மிகுந்த இரக்கம் உண்டாகின்றது. இச்செய்தியைக் கேள்வியுற்ற சிறிது காலத்திற்குள் கெம்பு இறந்துபோனார். அவருடைய இறப்பு காலம்அல்லாத காலத்தில் ஏற்பட்ட இறப்பாகும். அவர் அலுப்பற உழைத்துத் தன் முயற்சித்துணையால் பரிந்து வருந்தித் தீட்டிய அரிய ஓவியம், கல்லுருவாகச் சமைந்ததைக் காணும் பேறு பெற்றாரில்லை. கல்வியில் வல்லவர்க்கு நினைவுக்குறியாகக் கல்லில் அமைத்த உருவச்சிலைகள் எவ்வளவோ உள்ளன. அவைகளுள் ஒன்றும் இதைப்போல் நயமும் ஒழுங்கும் அமைந்ததாகப் பொருந்தவில்லை.

ஜான் கிப்ஸன்

மேலும், ஜான் கிப்ஸன் (John gibson) என்பவரும் ஓவியக் கலையில் மனம் பொருந்திப் பிறவி வாசனையாக உண்டாகும் முழு மனவுறுதியோடு பயின்று தெளிந்த பண்பினரே. உழைப்பின் ஊதியத்தைக் காலம் என்னும் கருவி

யால் அளப்பது அறிவற்றவர்கள் வழக்கம். அவர் அத் தன்மை யுடையவர் அல்லர். மேலான பண்பமைந்தவர். அவர் பிறப்பிடம் வேல்ஸின் வடபாகத்தில் கான்வேக்கு அண்மையில் இருக்கும் கிப்பின் என்னும் ஊர். அவர் தகப்பனர் தோட்டவேலை செய்து பிழைத்தவர். இளைஞரா யிருக்கும் பொழுது மடியில் வைத்திருக்கும் சிறு கத்தி கொண்டு மரங்களிற் செதுக்கிய உருவங்களாலேயே அவரு டைய ஆற்றல் தெரிந்தது. அவர் அறிவுசென்ற துறை யைத் தந்தை கண்டு அவரை லிவர்பூலுக்கு அனுப்பிச் சிறந்த பெட்டிகளும் செதுக்கு வேலையும் செய்யும் ஒருவ னிடத்தில் தொழில் பழக விட்டார். சிறிது காலத்திற்குள் அவருக்கு இத்தொழிலில் மிகுந்த தேர்ச்சி உண்டாயிற்று. அவர் செதுக்கிய உருவங்கள் சிலவற்றைக் கண்டவர்கள் வியந்து பாராட்டினர்கள். இவ்வாறு அவர் மனம் பிறவி இயற்கையாய் மரத்திலும் சிலையிலும் ஓவிய வடிவங்கள் செதுக்குந் துறையிலும் இறங்கியது.

பதினெட்டில் பாராட்டு

பதினெட்டாவ தாண்டில் காலசக்கரத்தை விளக்கும் படி மெழுகில் அமைத்த உருவம் ஒன்று எல்லோராலும் மிகவும் புகழ்ந்து கொண்டாடப் பெற்றது. அவருடைய ஓவிய வேலைப்பாட்டைக் கண்டு கொண்டாடிய ஓவியராகிய பிரான்சிஸ் வகையார் அவருக்குத் தொழில் பழக்கிய தொழிலாளர் தலைவனுக்குப் பொருள் கொடுத்து உடன் படிக்கைத் தாளை மீட்டுத் தங்கள் பெயரில் ஆறு ஆண்டு களுக்குத் திருப்பி எழுதிச் சேர்த்துக் கொண்டார்கள். அவ் வாறு ஆண்டு வரையில் அவர் புதுமையான வேலைகள் செய்து தன் அரிய திறமையைக் காட்டினர். பின்பு அங் கிருந்து லண்டனுக்கும், அதன்மேல் ரோமுக்குஞ் சென் ருர். ரோமில் இருந்து புதுமையான வேலைகளில் சிறந்த தேர்ச்சிபெற்று ஐரோப்பா முழுதும் சீர்த்தி பெற்ருர்.

ராபர்ட் தோர்பர்ன்

ஓவியக்கலைக் கழகத்தின் ஓர் உறுப்பினராயிருந்த ராபர்ட் தோர்பர்ன் (Robert Thorburn) என்பவரும் ஜான்

கிப்ஸனைப்போல் எளிய குடும்பத்தில் தோன்றியவரே. அவர் பிறந்தது டம்ப்ரிஸ் எனும் ஊரில். அங்கு அவர் தந்தை செருப்புத் தைத்து விற்கும் தொழிலாளியாவர். அவருக்கு ராபர்ட்டைத் தவிர மேலும் மக்கள் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருவர் மரத்தில் மிக நன்ருக உருவஞ் செதுக்கப் பயின்றவர். ஒருநாள் அந்தச் சக்கிலி யின் கடைக்குக் குலமகள் ஒருத்தி மிதியடி வாங்கச் சென் ருள். அப்பொழுது இளைஞயிருந்த ராபர்ட் ஒரு மணையில் தாளை வைத்து ஓவியம் எழுதிக் கொண்டிருந்தான். சக்கிலி கடையில் எழுத்துப் பலகை ஏது? குலமகள் அதை வாங் கிப் பார்த்தாள். சிறுவனுடைய திறமையைக் கண்டு மகிழ்ந்தாள். ஓவியத் தொழிலில் அவனுக்கு எங்காயி னும் பயிற்சி பெற வாய்ப்பளிக்க எண்ணினுள். இந்த எண்ணத்தை மேற்கொண்ட அவள், ஓவியக்கலை பயில்வதற் குச் சிறுவனுக்கு உதவிபுரியுமாறு சில பெரியார்களைத் தூண்டி விட்டாள். அவர்களுடைய உதவியால் அவன் மிக கருத்துடன் ஐம்புலன்களையும் ஒடுக்கி ஓவியம் எழுதிப் பயின்று வந்தான். மற்றைப் பிள்ளைகளுடன் கூடி வீண் பேச்சுப் பேசி ஓடியாடித் திரிந்து வீண்பொழுது போக்கா மல், அவன் எப்பொழுதும் கருத்தாக இருந்து வருந்தி உழைத்து ஓவியக்கலை பயின்று வந்தான்.

1830ஆம் ஆண்டில் அந்நகரத்தினராகியபெரியோர்கள் சிலர் பொருளுதவி சிறிது செய்து ராபர்ட்டை எடின்பர்க் நகரத்திற்கு அனுப்பி, அங்குள்ள ஓவியக் கல்லூரியிற் சேர்ப்பித்தனர். அதிற் கலைபயிற்றிய ஆசிரியர்கள் வல்ல வர்களாதலால் ராபர்ட் விரைவாய்க் கற்றுத் தேறினர். பிறகு அங்கிருந்து லண்டன் நகரத்திற்குச் சென்ருர். அங்கு அவருக்கு பக்லூட்யூக் பெருமகனுரின் உதவி கிடைத் தது. அப்பெருமகனுரால் அங்குள்ள பெரியோர் பலர் அவ ருக்குப் பழக்கமாயினர். அப் பெருமகனுரின் உதவியால் பெரியோர் கூட்டுறவு பெற்றது உண்மையே எனினும், தோம்பர்ன் புகழ்பெற்ற ஓவியப் புலவர் ஆனது அவர் உதவியினுலா? அல்லவே. பிறவியறிவும் முயற்சி குன்ருது

உழைக்கும் பண்பும் இருந்ததனாலேயே அவர் புகழ்ச் செல்வ ராக ஆவதற்கு இயன்றது.

நோஎல் பாதன்

ஓவியப் புலவர் என்று யாவரும் அறிந்து கொண்டாடும் நோஎல் பாதன் (Noel Paton) முதலில் உணவுப் பலகையில் விரிக்கும் துப்பட்டிகளுக்கும் கையால் இழைக்கும் மெல்லிழைச் சல்லாவிற்கும் பலவகையான ஓவியங்களை ஊகித்து எழுதிவந்தார். இவ்வேலை செய்துவருங் காலத்தில் மனிதவடிவு அமைப்பது முதலான சிறந்த ஓவியத் தொழிலிலும் சோர்வின்றிப் பயின்று வந்தார். தானருக்கு எவ்வகைத் தொழிலும் முயற்சியின்றியே கைவரும் என்று சொல்வார்கள். இவருக்கும் அவ்வாறே. 1840-ஆம் ஆண்டு அறியாச் சிறுவராயிருக்கையிலேயே தொழிற் பயிற்சியுள்ள முதியோருடன் ரென்ப்ருஷியர் மாகாணத்து ஆண்டு வரலாற்று நூலுக்கு ஓவியம் எழுதிக் கொண்டு வந்தார். இவ்வாறு ஓவியக்கலையைப் படிப்படியாகப் பயின்று வந்தார். சிறிது மெதுவாகவே வேலை செய்தும், செய்வதைக் குற்றங் குறையின்றி நயமுறச் செய்துவந்தார். நன்கொடை நாடிப் பாராளும் மன்றங்களுக்கு அழகாகப் பேரோவியங்கள் எழுதிக் காட்டுகிற வரையில், அவருடைய பெரும்புகழ் வெளி வரவில்லை. சமயக் கருத்துக்களைக் குறித்து அவர் எழுதிய ஓவியத்திற்கு உயர்ந்த பரிசில் கிடைத்தது. அந்த ஓவியம் நல்ல ஓவியப்புலவர் என்ற புகழையும் தந்தது! அதன்பின் எழுதி வெளியிட்ட 'ஒபிரன் தித்தானியா சமாதானம்' (Reconciliation of Oberon and Titania) 'இரகம்' (Home) முதலியவைகளால் அவர் ஓவியக்கலை யாற்றலிலும் பழக்கத்திலும் தளர்வடையாமல் மேன்மேலும் பண்பட்டார்.

ஜேம்ஸ் ஷார்பிலஸ்

எளிய குடும்பத்திற் பிறந்து ஓவியக்கலையைத் தளர்வின்றி முயன்று பயின்று புகழ்பெற்ற ஜேம்ஸ் ஷார்பில்ஸ் (James Sharples) ப்லாக்பர்னிற் கருமார் தொழில்செய்து

பிழைத்தவர். அவர் பிறந்தது 1825-ஆம் ஆண்டில் யார்க்ஷீயர் மாகாணத்தில் உவேக் பீல்ட் (Wake field) என்னும் ஊரிலாகும். அவருடன் பிறந்தவர்கள் பன்னிரண்டு பேர். இரும்பு வார்ப்பட வேலை செய்து பிழைக்கும் தந்தை மேற்சொல்லிய சிற்றூரினின்றும் குடிபெயர்ந்து 'பெரி' என்னும் ஊருக்குப் போயிருந்தார். பிள்ளைகளைப் படிக்கவைக்கவில்லை. வளரவளர அவர்களுக்குக் குலவித்தையைப் பயிற்றினார்.

சிறுவயதிலேயே பதினான்குமணி நேரவேலை

பத்தாவதாண்டில் ஜேம்ஸை வார்ப்படவேலையில் பழக்கினார். இரண்டு ஆண்டு சிற்றாள்வேலை செய்தபின் இருப்புப்பாதை வண்டித்தொடர் இயந்திரக் கம்மசாலையிற் சேர்ந்தார். அச்சாலையின் இயந்திரக்கொல்லன் அவர் தந்தையே. ஆணிகளை உலையில் இட்டுப் பழுக்கக் காய்ச்சி எடுத்துக் கொண்டுபோய்க் கொப்பரை செய்யும் கொல்லரிடத்திற் கொடுப்பார் ஜேம்ஸ். ஒழிவே இல்லை. பெரும்பாலும் காலையில் ஆறுமணி தொடங்கிப் பொழுதுபோய் எட்டு மணிவரை உழைத்தவண்ணமா யிருக்கவேண்டும். இப்படி இடைவிடாது வேலைசெய்து வருங்காலத்திலும் தந்தை மகனுக்கு, வீட்டில் விளக்கு வெளிச்சத்தில் சிறிது எழுத்துக்களைக் கற்பித்துக்கொண்டு வந்தார். இப்படி இரவோடிரவாகச் சிறிதுவேளை படித்துப் பாதிக்குப்பாதி எழுதப்படிக்க அறிந்துகொண்டார் ஜேம்ஸ்.

ஓவிய அவா உள்ளத்தில் தோன்றல்

கம்மியசாலையில் கொப்பரைக் கொல்லருடன் வேலை செய்துவரும் நாளில் அங்கு ஒரு வழக்கம் ஏற்பட்டது. அதனால் ஓவியம் எழுதப் பயிலும் அவா தோன்றிற்று. அவ்வப்போது தொழிலாளர் தலைவன் கொப்பரை செய்யும் வடிவைத் தளத்திற் சுண்ணும்பு பூசிய கயிறு அடித்துக் குறிப்பான். அவ்வேளைகளில் ஜேம்ஸ் கயிறு பிடிப்பார். சிலவேளை தொழிலாளர் தலைவன் கயிறுபிடித்துக்கொண்டு, அகலம் நீளம் கனம் இவ்வளவென்று

சொல்லிக்கொடுத்து ஜேம்ஸைக் கொண்டு கயிறு அடிப்பிப்பான். செய்யச் செய்ய இவ்வேலையில் ஜேம்ஸ் நன்றாகப் பண்பட முடிந்தது. பண்படவே அவரால் தொழிலாளர் தலைவனுக்கு மிகுந்த உதவியாகவிருந்தது. வேலைமுடிந்து வீடு சென்றபின், ஜேம்ஸ் வீட்டின் அடித்தளத்தில் கொப்பரை வடிவம் எழுதி எழுதி அடைந்த இன்பம் எல்லையற்றது.

விருந்தாளியின் உதவி

மான்செஸ்டர் நகரத்தில் இருந்த ஒரு பெண் இக்குடும்பத்தைக் காணவருவதாக ஒருநாள் அங்கிருந்து கடிதம் வந்தது. அந்தப் பெண் இவர்களுடைய உறவினள். விருந்தாளி வருமுன் இவர்கள் வீட்டை அழகுபடுத்தி வைத்தார்கள். ஜேம்ஸ் கம்மசாலையில் வேலைமுடிந்து மாலையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பிறகு வழக்கப்படி தளத்தில் ஓவியம் எழுதத் தொடங்கினர். ஒரு கொப்பரையைக் கற்பலகைக் குச்சியால் சிறிது எழுதிக் கொண்டிருக்கையில், ஜேம்சுடைய தாய் விருந்தாளியுடன் அவ்விடத்திற்கு வந்தாள். பகல் முழுவதும் கம்மசாலையில் உடலிற் படிந்த கரி புகைக்கறை தூசி இவைகளைக் கழுவி உடலைத் தூய்மைப்படுத்தாமல் கற்பலகைக் குச்சியால் கண்ணுக்கு வெறுப்புண்டாக்கத் தக்கவாறு தளத்தைக் கீறிக்கிழித்துக் கொண்டிருந்தது தாய்க்குப் பிடிக்கவில்லை. விருந்தாளியாக வந்தவளுக்கோ சிறுவனின் முயற்சியைக் கண்டு மிகுந்த அன்பு உண்டாயிற்று. அப்பெண் ஜேம்ஸ் எழுதிய ஓவியத்தைப் பெரிதும் பாராட்டினள். "இந்தக் குட்டிக்குப்பைக்காரனுக்கு" தாளும் எழுதுகோலும் வாங்கிக்கொடுங்களென்று தாய்க்குச் சொன்னள்.

ஓவியத்துறையில் முயற்சி

அண்ணனுடைய உதவியால் ஓவியம் எழுதவும், நாட்டுப்படம் எழுதவும் தொடங்கிக் கல். அச்சில் சில பிரதிகளும் பதித்தார் ஜேம்ஸ். நாட்டுப்படம் எழுதும் முறை

யும், ஒளிக்கும் இருளுக்கும் மாறுபாடு தோற்றுவிக்கும் முறையும் அவருக்கு அப்பொழுது தெரியுமா? ஒன்றுந் தெரியாது. ஆனாலும் தொடங்கின தொடக்கத்தைவிட்டு விடாமல் முயற்சி செய்துகொண்டே வந்தார். வரவர ஓவியங்களைப் பார்த்து எழுதி, கை திருந்தி வழிக்குவந்தது. அகவை பதினாறில் ஜேம்ஸ் பெரி நகரத்தில் உள்ள கைத் தொழிற்சாலையில் சேர்ந்து ஓவியம் எழுதப் பயின்றார். அங்கிருந்த அவருடைய ஆசிரியர் ஓவியக்கலையை நன்கு உணர்ந்தவரல்ல. எனினும், அக்கலையில் அவருக்கு மிகுந்த கொண்டாட்டம். அவர் ஒரு நாவிதர். அவரிடத்தில் ஜேம்ஸ் கிழமைக்கு ஒருமுறை மூன்று திங்கள் ஓவியக்கலை கற்றுக்கொண்டு வந்தார்.

கல்வியில்லாக்குறை வளர்ச்சிக்குத் தடை

"நூல் நிலையத்தில் பர்னெத் ஆசிரியர் ஓவியக்கலை பயிலும் முறையைப்பற்றி எழுதிய நூல் ஒன்று இருக்கிறது. அதைக்கேட்டு வாங்கிப் படித்துக்கொண்டுவா," என்று ஆசிரியர் கூறினார். ஜேம்ஸிற்கு அப்பொழுது தடையறப் படிக்கத் தெரியாது. ஆகவே அந்நூலைத் தாயிடத்திலும் சிலவேளை தமையன் இடத்திலும் கொடுத்து அவர்கள் படிக்க அண்மையில் அமர்ந்து செவிகொடுத்துக் கேட்பார். படிக்கத் தெரியாமல் மூடனாயிருப்பது கலை வளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருந்தது. பர்னெத் எழுதிய நூலின் உள்ளுறையை உணர்ந்து அறிஞனாகும் அவாவோ உள்ளங்கொள்ளாத அளவு மிகுந்திருந்தது.

கல்விப் பயிற்சி

ஆகவே மூன்று திங்கள் ஓவியக்கலை கற்றபின் அதை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்து எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டு வந்தார். இதில் அவர் மிக விரைவில் வெற்றியும் அடைந்தார். அதன் பிறகு மீளவும் கலைக்கழகத்திற் சேர்ந்து, பர்னெத் நூலை எடுத்துப் படிக்கவே படிப்பும் தடையற வந்தது. பின்னுக்கு உதவும் என்று அதிற் சில குறிப்புக்களும் பெயர்த்து எழுதிவைத்ததுடன் அந்நாலின்

உள்ளுறை பொருளை மிகுந்த கருத்துடன் உள்ளத்திற் பற்றிக்கொண்டார். நாள்தோறும் மிகக் காலையில் நான்கு மணிக்கு எழுந்திருந்து அந்நூலைப் படிப்பார். அங்கங்கே வரும் முதன்மையான செய்திகளை எழுதிவைப்பார். பிறகு ஆறு மணிக்கு வார்ப்படக் கம்மிய சாலைக்கு வேலைக்குப் போவார். மாலை ஆறு மணி வரைக்கும் சிலவேளை எட்டு மணி வரைக்கும் வேலை இருக்கும்; அதன் பிறகு வீட்டிற்கு வந்தவுடன் புத்தகத்தின்மேல் பேரவா உண்டாகப் புத்தகத்தை எடுத்துப் பெரும்பாலும் நெடுநேரம்வரை படித்துக்கொண்டிருப்பார். இராக்காலத்தில் சிற்சில வேளை ஏதேனும் எழுதுவார். ஓவியங்களைப் பார்த்து எழுதுவார். லியொனர்டோ எழுதிய "கடை இராப்போசனம்" என்னும் ஓவியத்தைப் பார்த்தெழுத ஓர் இரா முழுவதுஞ் சென்றது. படுத்துக்கொண்ட பின்னும் எண்ணம் எல்லாம் படத்தின்மேலேயே இருக்கும்; உறக்கம் பிடிக்காது. அதனால் திரும்பவும் எழுந்து எழுதுகோலை எடுத்து ஓவியந் தீட்ட முனைவார்.

எண்ணெய் வண்ண ஓவியம்

அப்பால் எண்ணெய் வண்ண (தைல வர்ண) ஓவியக் கலையில் ஒருகை பார்க்கவேண்டுமென்ற விருப்பம் எழுந்தது. அதன்பொருட்டு ஒரு துணிக்கடைக்காரன் இடத்தில் இரட்டுத்துணி சிறிது வாங்கி அதற்குச் சட்டம் இட்டு ஈயவெள்ளை பூசினார். வீட்டுக்கு நிறம் பூசும் தொழிலாளி ஒருவனிடத்தில் விலைக்கு நிறம் வாங்கி எழுதத்தொடங்கினார். உழைத்த உழைப்பு வாய்க்காமல் வீண்உழைப்பாகப் போய்விட்டது. இரட்டு ஒப்பமற்றது; நெருட்டுப்புடவை. எழுதிய எண்ணெய் காயவே இல்லை. அவருக்கு ஒன்றுந் தெரியவில்லை. இச்சமயத்தில் மேற்கூறிய நாவிதராகிய பழைய ஆசிரியருக்கு இதைக்கூறி அவருடைய கருத்தைக் கேட்டார். அவ்வாசிரியர் ஓவியம் எழுதப் பதஞ்செய்த இரட்டுந்துணி விலைக்கு அகப்படும் என்றும், எண்ணெய் ஓவியத்திற்கென்று செய்த நிறமும் மினுக்கெண்ணெயும் கிடைக்கும் என்றும் கூறினார்.

ஆகவே சிறிது பொருள் சேர்ந்தவுடன் வேண்டும் கருவிகளைச் சிறிது சிறிதாக விலைக்கு வாங்கி வேலையைப் புதிதாகத் தொடங்கினர். ஓவியச்சிராட்டனாகிய ஆசிரியர் அவருக்கு எழுதப் பழக்கினர். மாணவர் எழுதி எழுதி ஆசிரியரைவிடத் தேர்ந்தவர் ஆனர். அவர் முதலில் எழுதியது, 'ஆட்டுமயிர் கத்தரித்தல்' என்னும் செதுக்குவேலை ஒன்றைப் பார்த்து எழுதிய படம். பிறகு அதை ஒன்றே கால் ரூபாய்க்கு விற்றார், என்னெய் ஓவிய விளக்கம் என்னும் சிறு நூல் ஒன்று அரை ரூபாய்க்கு வாங்கி அதன் உதவியால் ஒழிந்த வேளையில் ஓவியம் எழுதப் பயின்று கொண்டு வந்தார். வரவர வேலைக்குரிய உதவிப்பொருள்களைத் தப்பற விளக்கமாகத் தெரிந்துகொண்டார்.

ஓவியச்சட்டம், நிறப்பலகை, பலகைக்கத்தி, நிறப்பெட்டி ஆகியவைகளையெல்லாம் தன்கையாற் செய்து, நாளாக நாளாகத் தொழில் செய்து சிறிது பொருளும் சேர்த்தார். நிறப்பெட்டியும் தூரியக்கோலும் இரட்டும் வாங்கினர். ஓவியம் எழுதிப் பழகுவதற்குப் பெற்றோர் செய்த உதவி இவ்வளவுதான். பெருங் குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பேற்றபடியால் அவர்களால் அதற்கு மேல் உதவிசெய்ய முடியவில்லை. பொழுதுபோன பிறகு பலநாள் தம் ஊரிலிருந்து மான்செஸ்தருக்குக் கால்நடையாகச் சென்று, ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய்க்கு நிறங்களும் இரட்டும் வாங்கிக்கொண்டு மீளவுங் கால்நடையாகவே வந்துசேர்வார். வந்து சேர்வதற்கு இரவு பதினைந்து நாழிகை வரையிலுங்கூடச் செல்லும். போகவரத் தொலை சரியாகப் பதினெட்டு மைல். சில சமயங்களில் உச்சிமுதல் உள்ளங்கால் வரையும் நனைந்து விறைத்து தளர்ந்துபோய் வருவார். குன்றாத அவாவும், மாறாத முடிவும் அவருக்குக் கொடிதாங்கும் கொழுகொம்பாக வாய்த்தன. தன் முயற்சியில் சிறந்தவரான இவர் அப்பால் அடைந்த வளர்ச்சியை இவர் கையால் எழுதியனுப்பிய கடிதம் ஒன்றில் காணலாம்.

ஜேம்ஸின் கடிதம்

"அதன் பிறகு நான் வரைந்த படங்கள் நிலவில் தோன்றுவதுபோன்ற நாட்டுப்படம் ஒன்று; கனியின் படம் ஒன்று; பின்னும் இரண்டொன்று; அதன் பிறகு கொல்லுலைக்களம் ஒன்று எழுதத் திட்டமிட்டேன். அதற்கு முன்னும் சிறிதுகாலம் வரையில் எனக்கு இந்த எண்ணம் உண்டு. நினைத்தபடி எழுதிப் பார்க்கவில்லை. பின்பு, முதலில் தாளில் எழுதிவைத்திருந்து, அப்பால் இரட்டில் எழுதத் தொடங்கினேன். நான் எழுதிய படம், நான் வேலைசெய்து பயின்ற கம்மியசாலையைப்போலும் விரிவான ஒரு கம்மியசாலையின் உள்ளிடத்தை விளக்குவது. இன்ன சாலை என்று ஒன்றைக் குறித்து நான் இப்படத்தை எழுதவில்லை. ஆகவே, இவ்வளவில் இப்படம் புதிது என்று புகலலாம். இப்படத்தின் சாயலை எழுதியபின் இவ்வேலையை ஒழுங்காய் முடிப்பதற்கு முழுஉடம்பியல் [அங்காதி பாதவியல்] அறியாமல் முடியாதென்று கண்டேன். இச்சமயத்தில் என் உடன்பிறந்தான் பீற்றர் (Peter) எனக்கு உதவிசெய்தான். பிளாக்ஸ்மன் (Flaxman) இயற்றிய உடலியல் விளக்கம் (Anatomical studies) என்னும் நூல் ஒன்றை அவன் அன்புகூர்ந்து வாங்கிக்கொடுத்தான். அதற்கு விலைகொடுத்து வாங்க அப்பொழுது என்னல் முடியவில்லை. அதன் விலை பன்னிரண்டு ரூபாய். அந்நூல் எனக்கு நூறுயிரம் வராகனுக்கு ஒப்பாயிருந்தது.

அந்நூலை நான் அதிகாலையில் மூன்று மணிக்கு எழுந்திருந்து வருந்திப் படித்தேன். அதில் உணர்த்திய முறைப்படி எழுதப் பயின்றேன். மக்கள் துயிலொழிந்து உழைக்கிற நேரம் அல்லாத நேரத்திலும் என் உடன்பிறந்தான் பீற்றரை எழுந்து நிற்கச்சொல்லி அவன் உருவைப் பார்த்துப்பார்த்து ஓவியம் எழுதுவதும் உண்டு. இவ்வாறு பயின்று வரவரத் தேறியும், தொடங்கின ஓவியத்தை எழுதிக்கொண்டு போகும் துணிவுபிறக்கச் சிறிதுகாலஞ் சென்றது. மேலும் நாட்டுக்காட்சி எழுதும் முறை தெரியாததும் தடையாயிருந்தது. ப்ருக் டெய்லர் (Brook Taylor) இயற்றிய

அடிப்படை விதிகளைக் கருத்தாய்ப் படித்து இக்குறையை நிறைவிக்க வகை பார்த்தேன். அதன்பின் தடையின்றி ஓவிய வேலையை மீளவுந் தொடங்கினேன். நாட்டுக்காட்சி எழுதும் முறைகளை வீட்டிற் கற்றுக்கொண்டு வரும் பொழுது கம்மியசாலையில் சற்றுப் பெரிய வார்ப்பட வேலை செய்ய இடந்தரும்படி கேட்டுச் செய்துவந்தேன். இதன் காரணத்தை இன்னதென்று இயம்புகின்றேன். மிகப் பளுவான இரும்புவேலைக்கு உலையில் இட்ட இரும்பு காயச் செல்லும் நேரம் அதிகம். எளிதான வேலைக்கு இரும்பு காய்ச்ச அவ்வளவு நேரம் செல்லாது. பெரிய வேலைக்கு உலைக்களத்தில் இட்ட இரும்பு காயும்பொழுது, உலைக்களத் திற்கு எதிரில் இருந்த இரும்புத்தகட்டில் நாட்டுக்காட்சி எழுதிக்கொண்டிருப்பேன். இப்படி இவ்வேலையில் எனக்கு அன்றன்று சிறிதுசிறிது ஓய்வு கிடைத்தது.”

ஓவியத்தொழிலில் உயர்ச்சி

இவ்வாறு இடைவிடாது ஓவியம் எழுதியும் ஓவியக் கலை கற்றுக்கொண்டும் வந்ததனால் ஜேம்ஸ் ஷார்பிலஸ் ஓவி யக்கலையறிவில் மேன்மேலுந் தேறினதும் அல்லாமல் எழுதுந் தொழிலிலும் கைதேர்ந்தார். அவர் தொழிற் சாலையில் வேலை பழக ஏற்பட்டகாலம் நிறைவேறிப் பின் னும் பதினெட்டுத் திங்கள் சென்றதன்மேல், அவர் தகப் பனைப் பார்த்து எழுதிய ஓவியத்தை அங்கரத்தார் பலபேர் கண்டுகளித்தனர். அடுத்து விரைவில் முடிந்த கொல் லுலைக்கள ஓவியமும் அவ்வாறே அமைந்தது. மனிதரைப் பார்த்து ஓவியம் எழுதும் திறமை அவருக்கு வாய்த்தது கண்டு, அந்தக் கம்மியசாலைத் தொழிலாளர் தலைவன், ஒரு குடும்பக் கூட்டத்தை எழுதிக்கொடுக்க அவருக்குக் கட் டளையிட்டான். அவர் அதை மிகு ஒழுங்காக அமைத்துக் கொடுத்தார். ஆகவே, தொழில்துறைத் தலைவன் முதலில் ஒப்புக்கொண்ட விலை நூற்றெண்பது ரூபாயும் அதனுடன் பின்னும் பதினைந்து ரூபாயுங் கொடுத்தான். இந்தக் குடும்பக்கூட்டஓவியம் எழுதுங்காலத்தில் அவர் கம்மிய சாலை வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டார். அதுமட்டு

மன்று; பழகிய தொழிலை அவ்வளவில் நிறுத்திவிட்டுத் தனியாக ஓவியத்தொழில் ஒன்றையே செய்துகொண்டு வரவும் அவர் எண்ணினர். அப்பால் அவர் வேறு சில ஓவியங்களும் எழுதத் தொடங்கினர். அவற்றுள் இரண்டொன்று கிறித்துவின் முகமும், பெரி என்னும் ஊர்க் காட்சியும். கிறித்துவின் முகம் சரியாய் அதன் அளவாக எழுதப்பட்டது. அஃது அவர் புதிதாக சிந்தனைசெய்து இயற்றிய ஓவியம். ஓவியத்துறையில் அவருக்கு வேண்டும் அளவிற்கு அமையவில்லை. அகப்படும்பொழுது வேலை செய்து அகப்படாதிருக்கும்போது வீண்பொழுது கழிக்கும்படியும் நேரிட்டது. வருமானமும் ஒருபடியாக அமையவில்லை. இத்தொழிலைச் சார்ந்து பிழைப்பது தொல்லையென்று கண்டார். தம் வாழ்க்கைக்கு நேராக வாய்த்த கருமான் வேலையே ஏற்றது என்று எண்ணினர். தூசி தாங்கி கட்டிக்கொண்டு அவ்வேலையை மீளவுந் தொடங்கினர். ஒழிந்த நேரத்தில் உலைக்கள ஓவியத்தைச் செதுக்கி முடித்தார். அது பின்னர் வெளியிடப்பெற்றுப் புகழ் பெற்றது.

செதுக்கு வேலை

அவர் செதுக்குவேலை தொடங்கிய காரணம் இதுவாகும்: அவர் ஒருநாள் ஓவியம் விற்று வாழ்க்கை நடத்தும் மான்செஸ்டர் நகரத்தான் ஒருவனுக்குத் தான் அமைத்து வைத்திருந்த உலைக்கள ஓவியத்தைக் காண்பித்தார். அவ்வணிகன் அவ்வோவியத்தைப் பண்பாடுள்ள அறிஞனைக் கொண்டு செதுக்குவித்தால் அச்சிடுவிக்கப் பொருந்துமே என்றான். ஷார்பில்ஸுக்கு அப்போது செதுக்குவேலை அடியோடு தெரியாது. தெரியாதிருந்தும் அதைத் தன் கையாற் செதுக்கி அமைக்கவேண்டும் என்னும் எண்ணம் அக்கணமே நெஞ்சிற் பிறந்தது. அவ்வேலையைத் தொடங்கி அவர் எவ்வளவோ துன்பப்பட்டதையும், அத்துன்பம் எல்லாம் நீங்கிக், கருதியவாறு செயலை ஒழுங்குற முடித்ததையும் பின்வருமாறு அவரே விளக்கமாக உரைத்துள்ளார்.

"ஷெப்பீல்டில் எஃகுத் தகடு செய்து விற்கும் ஒருவன் வெவ்வேறு வடிவமுள்ள தகட்டுவிலை விளக்கம் குறித்து வெளிப்படுத்திய விளம்பரத்தாள் ஒன்றைக் கண்டேன். கண்டு என் வேலைக்கு ஆகும் வடிவமுள்ள தகட்டைக் குறிப்பிட்டு அதன் விலையையும், செதுக்குக் கருவிகள் சிலவற்றின் விலையையும் அடக்கஞ்செய்து, தகட்டையும் அக்கருவிகளையும் அனுப்புமாறு அவனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். செதுக்குக் கருவிகளை இன்னின்ன என்று என்னால் குறிப்பிட முடியவில்லை. அப்பொழுது எனக்குச் செதுக்குவேலையினைப்பற்றி ஒன்றும் தெரியாது. குறிப்பிடாதிருந்தும் மேற்படி வணிகன் எஃகுத் தகட்டோடுகூடச் செதுக்குக் கருவிகள் நான்கு மூன்றும் ஒவிய ஊசி ஒன்றும் வைத்து அனுப்பினான். பயன்படுத்தும் முறையை அறியுமுன் நான் கையாடி அந்த ஒவிய ஊசி பழுதாகப் போய்விட்டது. தகட்டிற் செதுக்கு வேலை செய்துகொண்டு வரும்போது, சின்னக் குறிப்பு ஒவியம் ஒன்று சீராக எழுதிக்கொடுப்பவருக்கு இவ்வளவு நன்கொடை கிடைக்கும் என்று பொறிவலாளர் சங்கத்தாரால் விளம்பரஞ் செய்யப்பட்டது. அந்நன்கொடையைப் பெறுதற்கு விரும்பி நானும் ஒவியம் எழுதிக்கொடுத்தேன். நல்வினையால் என் ஒவியத்திற்கே நன்கொடையுங் கிடைத்தது.

அதன்பிறகு சிறிது காலஞ்சென்று ப்லாக்பர்னுக்குப் போய்ச் சுற்றித் திரிந்தேன். அங்கு எனக்கு யேத்ஸ்வகைப் பொறிவலாளர்களிடம் யந்திரக் கொல்வேலை அமைந்தது. வேலை ஒழிந்து வீட்டில் இருக்கும்போது, முன்போல ஒவிய வேலையுஞ் செதுக்குவேலையுஞ் செய்துகொண்டு வந்தேன். செதுக்கு வேலைக்குச் சரியான கருவிகள் அகப்படவில்லை. மிகத் துன்பப்பட்டேன். இக்கலையிற் கைதிருந்தப் பலநாட் சென்றன. பிறகு என் செயலுக்கு உதவும் கருவிகள் சில செய்து பார்த்தேன். முதலிற் செய்த சில கருவிகள் பொருந்தவில்லை. செய்து செய்து கைவழக்கப்பட்டதனால், பின்னர் செய்த கருவிகள் பல என் வேலைக்கு

உதவின. அன்றியும் தகுதி வாய்ந்த பூதக்கண்ணாடி அகப்படாததும் பெருங்குறையாயிருந்தது. தகட்டில் செதுக்கு வேலை பாதி செய்துமுடிக்க எனக்கு உதவியது என் தகப்பனாருடைய மூக்குக்கண்ணாடி. அதைவிடச் சிறந்த கண்ணாடி அகப்படவில்லை. அப்பால் வேண்டும் அளவிற்குப் பொருளைப் பெரிதாகத் தோற்றுவிக்கும் பூதக் கண்ணாடி ஒன்று என் கைக்கு எட்டியது. அதன் உதவியால் என் வேலை நன்றாக முடிந்தது.

இடையே தடை

தகட்டில் ஓவியம் செதுக்கி வரும்போது மீளாத தொல்லை ஒன்று நேர்ந்து வேலையை முக்காலே மூன்று வீசமும் நிறுத்திவிடும்படி ஆயிற்று. அஃது இன்னதென்று உரைக்கின்றேன். சிலவேளை வேறு வேலையின் நெருக்கடியால் ஓவியஞ் செதுக்குவதைப் பலநாள் வரையிலும் நிறுத்திவிட்டதும் உண்டு. தகட்டை ஓர் ஒதுக்கில் வைத்து, செதுக்கிய ஓவியத்தில் துருப்பிடிக்காவாறு எண்ணெய் தடவி வைப்பேன். ஒருமுறை இப்படிச் செய்த நாட்சென்று எடுத்துப் பார்த்தேன். எண்ணெய் இறுகிக் கறுத்துப் பசையாய் ஒட்டிக்கொண்டது. அதைப் பற்றற விளக்குவது உயிர்த்தொல்லையாக முடிந்தது. அந்தப்பற்றை ஓர் ஊசிமுனையால் சுரண்டி விளக்க மிகு துன்பப்பட்டேன். அஃது எளிதிலே போகுமா? இவ்வாறு பற்று விளக்கித் தூய்மைப்படுத்தச் செல்லுங் காலத்தில், மீளவும் புதிதாக ஓவியஞ் செதுக்கிவிடலாம் என்று தோன்றியது. இதை நினைத்து நினைத்து என்மனம் மிகுந்த துன்பம் அடைந்தது. இதற்கு யாது செய்யலாமென்று நீள நினைந்து பார்த்தேன். எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. உவர் மண்ணைத் தண்ணீரிற் போட்டு அந்த ஓவியத் தகட்டை அதில் இட்டு, அடுப்பில் வைத்துக் கொதிக்கச் செய்தபின், இறக்கி ஓவியம் செதுக்கிய சந்துவாயை எல்லாம் பற்குச்சியால் விளக்கினால் போய்விடும் என்று எண்ணினேன். அவ்வாறே செய்தும் பார்த்தேன். என்னுள்ளம் உவக்குமாறு என் செயல்

முழுதும் பலித்தது. அவ்வளவில் எனக்குப் பெருகிய தொல்லைகள் எல்லாம் அடியோடு தொலைந்து போயின என்னலாம்.

பிறகு என்னுடைய உழைப்பைக் கடைத்தேற்று தற்கு வேண்டிய கருவி பொறுமையும் தளரா முயற்சியுமே. தகட்டில் ஓவியஞ் செதுக்கி முடிக்க எனக்கு எவரும் காட்டிக்கொடுக்கவும் இல்லை; கைத்துணை நிற்கவும் இல்லை. ஆகவே இந்த வேலைப்பாட்டில் ஏதாவது நயம் உளதாகுமானல், அஃது என்னுடைய கைந்நயம் என்றே சொல்வேன். நான் செய்துமுடித்த இவ்வேலையில் தளரா முயற்சியும், உள்ளத்திடம் உடையவர்களுடைய செய்திறமும் கண்கூடாகத் தோன்றுமானல், நான் உரிமை பாராட்டி நிற்கும் சிறப்பு எல்லாம் கூடி இவ்வளவுதான்."

பாராட்டு

தகட்டிற் செதுக்கிய கொல்லுலைக்கள ஓவியத்தை நுட்பமாகப் பார்வையிட்டு குறைகண்டு சொல்லப் புகுவது நம்முடைய எண்ணமல்ல. ஓவியக் கலைச் செய்தித்தாள்கள் அதன் மேன்மையைக் குறைவற வியந்து கூறியிருக்கின்றன. மாலைநேரந்தோறும் வேலை ஒழிந்து வீட்டில் இருக்கும்பொழுது இவ்வோவியம் செதுக்கி முடிக்க ஐந்தாண்டுகள் சென்றன. அவர் அதை நிறந்தீட்டுவோன் இடத்திற்குக் கொண்டுபோனபொழுது பிறர் செதுக்கிய ஓவியத்தைக் கண்டார். அதற்குமுன் ஒருபொழுதும் அவர் அத்தகைய ஓவியங்களைக் கண்டதில்லை. அவருடைய கைத்தொழில் முயற்சியையும் நல்லறிவையும்பற்றி நாம் இங்கே நவின்றதெல்லாம் முழுதும் உண்மை; கற்பனையன்று.

ஜேம்ஸின் குடும்ப இயல்பு

இதனுடன் மேலும் ஓர் இயல்பை இயம்பி விடுகிறோம். அது குடும்ப இயல்பு. அதைப் பின்வரும் அவருடைய வாய்மொழியால் அறியலாம்.

"எனக்குத் திருமணம் முடிந்து ஏழாண்டுகள் ஆயின. இந்த ஏழாண்டுகளும் வார்ப்படச் சாலையில் அன்றன்று வேலை ஒழிந்து வீடுசேர்ந்தபின் தூரியக்கோலாவது செதுக்கூசியாவது கைக்கொண்டு ஓவியம் எழுதத்தொடங்குவேன். என் மனதிற்கு இதனினும் உவந்த வேலை வேறு இல்லை. பெரும்பாலும் இரவு நாழிகை ஆக ஆக நான் ஓவியந் தீட்டிக் கொண்டிருப்பேன். மனைவி என் அண்மையில் உட்கார்ந்து ஏதாவது இனிமையான நூல் எடுத்து எனக்குக் கேட்குமாறு படித்துக் கொண்டிருப்பாள்." தொழிலாளரில் சிறந்த ஒழுக்கம் உடையவனும் மனதிற்கு இனியவனும் ஆகிய இவருக்கு இயற்கையாயுள்ள சிறந்த அறிவுக்கும் பிறவிப் பண்பான மன நேர்மைக்கும் சான்று இதுதான். இது சிறிதானாலும் நல்ல சான்று.

கைத்தொழில் முயற்சியும் மனக்கருத்தும் ஓவியந் தீட்டுங் கலையிலும் தேர்ச்சியிலும் சிறந்த வளர்ச்சியுடையோர் ஆவதற்கு இன்றியமையாத கருவிகளென்று இதுவரை படித்த வரலாறுகளால் தெளிவுறக் கண்டோம்.

எனவே, தன் முயற்சியுடன் அனைவரும் முயன்றால் எக்கலையும் கைவராது போகாதெனவும் முயற்சி திருவினையாக்கும் எனவும் உணர்ந்து அனைவரும் சிறப்பெய்துவோமாக.

தன் முயற்சி

வள்ளுவர் பொன்மொழிகள்

குறள் எண்

1. ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத் தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப்பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவாரோ? 591

2. ஊக்கத்தை உறுதியாகத் தம் கைப் பொருளாக உடையவர், ஆக்கம் இழந்துவிட்ட காலத்திலும் இழந்துவிட்டோம் என்று கலங்கமாட்டார். 593

3. சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக்கொண்டு போய்ச்சேரும். 594

4. இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறுமல் இருக்க வேண்டும்; அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும். 611

5. முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும். 616

6. ஒருவனுடைய சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கின்றாள்; சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள். 617

7. சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர். 620

8. எண்ணியவர் (எண்ணியபடியே செயல் ஆற்றுவதில்) உறுதி யுடையவராக இருக்கப் பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர். 666

9. மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும். 668

10. முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலை, செய்யும் போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும். 669

11. வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யுந் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது. 670

3343
